KL
N50
120779

# வைத்திய கலாநிதிப்

## பிரசுரங்கள்.

# THE
# VAIDYA KALANIDHI SERIES
## PUBLICATIONS.

ஆயுர்வேத பூஷணம்
பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார் எம். ஏ.
அவர்களால் பதிப்பிக்கப்பெறவை.

இப்பொழுது வெளியாகும் நூல்கள்:

1. அஷ்டாங்க ஹ்ருதயம்.   2. இரஸரத்தின ஸமுச்சயம்.

ஆரிய பாஷைகளான ஸம்ஸ்கிருதத்தில் இயற்றப்பெற்றவை.

---

## அஷ்டாங்க ஹ்ருதயம்

ஸூத்ர ஸ்தானம்.
பக்கங்கள் 169 முதல் 224 வரையில்

---

## இரஸரத்தின ஸமுச்சயம்

பூர்வ கண்டம்.
பக்கங்கள் 73 முதல் 96 வரையில்

**சந்தா விவரம்.**

12 சஞ்சிகைகளுக்கு ரூ. 8-8-0;
6 சஞ்சிகைகளுக்கு ரூ. 4-12-0.
ஒரு சஞ்சிகையின் விலை அணா 12.

---

வைத்திய கலாநிதி ஆபீஸ், வேப்பேரி, மதராஸ்.

மாதவ நிதாநம்
என்னும்
ரோகவிநிச்சயம்.

ஸகல வியாதிகளையும் பரீக்ஷிப்பதற்கான
பிராசீன வைத்திய நூல் இது ஒன்றே.

'மாதவகரன்' என்னும் பிரபல வைத்தியாசிரியர்
ஸம்ஸ்கிருதத்தில் இயற்றிய ரோக விநிச்சயநூலின்
தமிழ் மொழிபெயர்ப்பு.

ஆயுர்வேத பூஷணம்
பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார், ஏ. வி. எஸ்.
அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. உரையுடன்கூடியது.

எளிய வசன நடை.

வியாதிகளைப் பரீக்ஷிக்கும் மாதவநிதாநம் ஒன்றே மிகப் பிரதானமான பிரமாணம் என்று படித்த வைத்தியர்களுக்குத் தெரிந்த விஷயம். 73 அத்தியாயங்கள் அவ்வநு நிதாநங்கள் அடங்கியது. ஒவ்வொரு அத்தியாயத்திலும் முக்கியமான ஒரு அல்லது பல ரோகங்களும், அவற்றிற்கு அநுபந்தமாக அல்லது உபத்திரவரூபமான வேறு பல வியாதிகளும் விவரிக்கப்படுகின்றன. முதல் அத்தியாயத்தில் விவரிக்கப்பட்டுள்ள நிதாநம், பூர்வரூபம், ரூபம், உபசயம், ஸம்ப்ராப்தி என்கிற வியாதிகளைப் பரீக்ஷிக்க அவசியமான பஞ்ச லக்ஷணங்களும் அநேகமாய் ஒவ்வொரு வியாதிக்கும் முற்றிலும் விளக்கப்பட்டிருக்கின்றன. பிரதானமாகவும், அநுபந்தரூபமாகவுமுள்ள சுமார் 600-க்கு மேற்பட்ட வியாதிகளின் நிலைமைகள்—அவற்றின் காரண லக்ஷணாதிகளோடு விவரிக்கப்பட்டுள்ளன.

சாஸ்த்ரீய விஷயங்களை எளிதில் அனைவரும் அறிவதற்கு அநுகூலமான விரிவான உரையும், ஒவ்வொரு விஷயமும் வகுப்பு வாரியாகப் பிரிக்கப்பட்டு விளக்கத் தலையங்கங்களும், விஸ்தாரமான விஷய அகராதியும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு வைத்தியருக்கும் மாதவநிதாநம் இன்றியமையாதது.

அட்டை பைண்டு ரூ. 5-4-0; முழுக்காலிகோ பைண்டு ரூ. 6.

வைத்திய கலாநிதி ஆபீஸ்,
வேப்பேரி, மதராஸ்.



12 MAY 1930

பணம், கர்ண தர்ப்பணம், நேத்திர தர்ப்பணம் இவற்றின் முறைகளில்[1] ஸ்நேஹத்தைத் முறைப்படி பிரயோகிக்கலாம்.—14.

ஸ்நேஹத்திற்கும் இரஸங்களுக்குமுள்ள அறுபத்திநான்கு கூட்டு முறைகள்:—ஸ்நேஹத்திற்கு ஆறு சுவைகளின் அநேகவகையான சேர்க்கைகளைக்கொண்டும், ஒன்றோடும் சேர்க்காமல் தனியான நிலைமையைக் கொண்டும் அறுபத்திநான்குவிதமான கற்பனைகளை முறையே செய்யக்கூடுமெனப்படுகிறது; ஸ்நேஹத்தை வெவ்வேறு விதமான உணவுகளுடன் அல்லது அநேகவிதமான சுவையுள்ள வஸ்துக்களோடு கலந்தே உபயோகிக்க வேண்டியிருப்பதாலும், (மற்ற உணவுப் பொருட்களைப்போல் அதிகமாய் உபயோகிக்கமுடியாமல்) சொற்பமாகவே உபயோகிக்க வேண்டியிருப்பதாலும் அவ்விதமான[2] கற்பனைகள் சேர்க்கை முறைகளைக் கொண்டு ஏற்படுத்தப்பட்டன.—15.

1767

அச்சபேயாவின் விசேஷம்:[3]—வேறு பதார்த்தங்களோடு கலக்காமல் தனியாக உட்கொள்ளப்படும் ஸ்நேஹமானது, முறைப்படி மொழியப்பட்டுள்ள ஹேதுக்களைப் பெருமையால்[4] அதற்கு விசாரணை அல்லது "கூட்டு முறை" என்னும் பெயர் கிடைக்க மாட்டாது. அது ஸ்நேஹசிகித்ஸைக்கான பலனை சீக்கிரத்தில் நிறைவேற்றுவதால், அவ்விதமான ஸ்நேஹமுறையே உத்தமமானது.—16.

ஸ்நேஹ முட்கொள்ளும் அளவுகள்:—ஸ்நேஹத்தைப் பிரயோகிப்பதற்குச் சிறிய மாத்திரை, மத்திம மாத்திரை, உத்தம மாத்திரையென்று அளவுகள் மூன்று உண்டு. (1) அவற்றுள் இரண்டு யாமங்களில் ஜீர்ணமாகக்கூடிய அளவு ஸ்வல்பமாத்திரையென்றும்,

---

1. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள வஸ்திகர்மம் முதலாக நேத்திர தர்ப்பணம் ஈறாகவுள்ள சிகித்ஸா விசேஷங்களின் விவரங்களை இதன்பிறகு வரும் அதற்கென்று ஏற்பட்ட அத்தியாயங்களில் காண்க.

2. இரஸபேதியாத்தியாயத்தில் (119, 120-ம் பக்கங்களில்) "அறுவிதமான இரஸங்களுக்கும் யோகங்களில் ஒன்றோடொன்று" என்று ஆரம்பித்துக் கூறப்பட்டுள்ளவாறு அறுபத்து மூன்றுவிதசேர்க்கையும், ஸ்நேஹத்தை மற்றொரு வஸ்துவோடு கலக்காமல் தனியாக உபயோகிப்பது ஒன்றும் ஆக அறுபத்திநான்கு கூட்டு முறைகளுண்டு.

3. அச்சபேயா—வேறு பதார்த்தங்களோடு கலக்காத ஸ்நேஹம் அச்ச ஸ்நேஹம். அதையுட்கொள்ளும் முறை அச்சபேயா எனப்படும்.

4. வேறு பதார்த்தங்களோடு சேராமல் தனிப்பட உபயோகிக்கப்படுவதே அச்சபேயாவுக்கு விசாரணை என்னும் பெயர் வழங்கப்படாததற்கு முக்கிய ஹேது. அச்சபேயா—தனி எண்ணெய், நெய், கொழுப்பு முதலியது. விசாரணை; வேறு சாக்குகளோடு கலந்துள்ள தைல-கிருதாதிகளின் பொதுப் பெயர். பால் முதலியதோடு கலந்து உட்கொள்ளப் படுவது விசாரணை என்றும், தனியாக உட்கொள்ளப்படும் தைலாதிகள் அச்சபேயா என்றும் கூறப்படும்.

(2) நான்கு யாமங்களில் ஜீர்ணமாவது மத்திம மாத்திரை யென்றும், (3) எட்டு யாமங்களில் ஜீர்ணமாவது உத்தம மாத்திரை யென்றும் கூறப்படுகிறது. ஆனால், பிணியாளிகளுடைய தோஷங்கள் முதலானவற்றின் நிலைமைகளை உற்றுநோக்கிச் சிறிய அளவுக்குக் கூறப்பட்டதைவிட இன்னும் சிறிய அளவாகவே ஸ்நேஹத்தை முதலில் பிரயோகிக்கவேண்டும்.—17; 17½.

மூன்றுவித அச்சபேயாக்கள்[1]:—(1) வமன விரேசனங்கள் என்னும் சோதனத்துக்காக ஸ்நேஹம் ஏதாவது உபயோகிக்கப்படவேண்டுமானால், "அச்ச பேயா" என்னும் ஸ்நேஹத்தையே உத்தமமாத்திரை யெனப்படும் பெரிய அளவில், முதல் நாள் எடுத்துக் கொண்ட ஆஹாரம் நன்கு ஜீர்ணமாயிருக்கும்போது உபயோகிக்கவேண்டும். (2) சமநத்திற்காக உபயோகிக்க வேண்டுமானால், "அச்ச பேயா" எனனும் ஸ்நேஹத்தை நன்கு பசியெடுத்திருக்கையில் உணவுடன் கலக்காமல் உபயோகிப்பது நலம். (3) "அச்ச பேயா" என்னும் ஸ்நேஹத்தை மாம்ஸரஸம், மத்யம் முதலானவைகளோடும், அன்னத்தோடும் குறைந்த அளவில் ப்ருஹ்மணத்திற்காக உபயோகிக்கலாம்; அங்ஙனம் உபயோகிக்கப்படும் ஸ்நேஹமானது பாலர், வயது முதிர்ந்தவர், நாவறட்சியினால் வருந்துபவர், ஸ்நேஹத்தினிடம் வெறுப்புள்ளவர், மதுபானம் செய்பவர், எப்பொழுதும் ஸ்திரீகளுடன் கூடிவருபவர், தினந்தோறும் ஸ்நேஹமுபயோகிப்பவர், அக்னிமாந்த்யமுள்ளவர், ஸுகிகள், க்லேசமனுபவிப்பவர், பயங்கொள்ளிகள், ம்ருது கோஷ்டமுள்ளவர்,[2] தோஷங்களால் சொற்பமாகப் பீடிக்கப்படுபவர், மெலிந்த தேஹத்தையுடையவர் இவர்களுக்கும் பிரயோஜனமாகும்; உஷ்ணகாலத்திற் பிரயோகிக்கவும் அது ஏற்றதாகும். 18—20½.

ஸ்நேஹத்தை உபயோகிக்கும் தருணங்களும் பிரயோஜனங்களும்:—அந்த ஸ்நேஹம் ஆஹாரத்திற்கு முன்பாகவும், ஆஹாரத்தினிடையிலும், ஆஹாரத்திற்குப் பிறகும் உபயோகிக்கப்படுமானால், அது முறையே தேஹத்தின் கீழ் அவயவங்களின் வியாதிகளையும், மத்திம அவயவங்களிலுண்டாகும் வியாதிகளையும், மேல் அவயவங்களின் வியாதிகளையும் போக்கும்; க்ரமமாக அந்தந்த அவயவங்களுக்கு வன்மையையும் உண்டாக்கும்.—21½.

அச்ச ஸ்நேஹத்திற்கு அநுபானமும் அதன் உபயோகமும்:—அச்சஸ்நேஹத்தை உட்கொள்ளும்போது, ஸ்நேஹம் எளிதில் நன்கு ஜீர்ணமாவதற்காகவும், வாயிலுள்ள எண்ணெய்ப்பிசுக்கு விலகி முகம் சுத்தமாவதற்காகவும் வெந்நீரை அநுபானமாகப் பருக

1. சோதக அச்சபேயா, சமக அச்சபேயா, ப்ருஹ்மண அச்சபேயா என்று அச்சபேயாஸ்நேஹம் மூன்று விதம். [சமகம் முதலியவைகளைப்பற்றி 10-ம் பக்கம் பார்க்க.]

2. ம்ருது கோஷ்டம்—4-ம் பக்கம் டிப்பணியைப் பார்க்க.



வேண்டும். ஆனால் நீரடிமுத்துத் தைலத்திற்காவது, சேங்கொட்டைத் தைலத்திற்காவது உஷ்ணஜலம் அநுபானமாக உபயோகிக்கத் தகுந்ததல்ல[1]. உட்கொண்ட ஸ்நேஹபதார்த்தம் ஜீர்ணமானதும் ஆகாததும் ஸந்தேஹமாயிருந்தால் அப்பொழுது மீண்டும் உஷ்ணஜலத்தைப் பானம் செய்யலாம்; அதனால் முன் வந்துகொண்டிருந்த ஏப்பமும் நிவ்ருத்தியாகும்; பிறகு உடலுக்கு இலகுவும் ஆஹாராதிகளில் ருசியும் விருப்பமும் உண்டாகும். 22—23½.

ஸ்நேஹபானத்தில் உபசாரக்ரமங்கள்:—மறு நாள் ஸ்நேஹபானம் செய்யப்போகிறவனும், அன்றைய தினம் பானஞ்செய்திருப்பவனும், முன்பே ஸ்நேஹபானம் நிறைவேற்றியிருப்பவனும் பின்வருமாறு ஆஹாராசாரங்களை உபயோகிக்கத் தகுந்தவனாகிறான்:—த்ரவமும், உஷ்ணமும், அபிஷ்யந்தியென்னும்[2] குணத்தைப் பெறாததும், அதிக ஸ்நிக்தமல்லாததும், பத்தியமும் அபத்தியமுமான பலவகைப்பட்ட பதார்த்தங்கள் கலவாததுமான ஆஹாரம் புஜிக்கத் தகுந்தது; உஷ்ண ஜலத்தைக் கொண்டே எல்லாக் காரியங்களையும் நிறைவேற்றிக்கொள்ள வேண்டும்; பிரஹ்மசர்ய விரதமுடையவனாகவும், இரவில் உற்ற நேரத்திற் படுத்து நித்திரைசெய்து வருவதுடன் வேகங்களை அடக்காதவனாகவும் இருந்துவரவேண்டும்; வியாயாமம், கோபம், துயரம் இவற்றையும், பனி, வெயில், பெருங்காற்றுக்கு எதிரில் ஸஞ்சரிப்பது, வாஹன மேறுவது, வழி நடப்பது, அதிகமாகப் பேசுவது, அதிகநேரம் உட்கார்ந்திருப்பது, நிற்பது, மிக உயரமான அல்லது மிகத் தாழ்வான தலையணையுபயோகிப்பது, பகலில் தூங்குவது, புகை, புழுதி இவற்றையும் ஸ்நேஹம் எவ்வளவு நாட்கள் உபயோகிக்கப் படுகின்றதோ அவ்வளவு நாட்களும் விலக்க வேண்டும்; மேலும் ஸ்நேஹத்தை நிறுத்தியபிறகும் அவ்வளவு நாட்கள் அவற்றை விலக்கிவிடவேண்டும்.[3] அந்த பத்தியமுறையானது ஸ்நேஹபானத்திற்கு மட்டுமல்ல, மற்றும் எல்லாச் சிகித்

1. நீரடிமுத்துத்தைலமும், சேங்கொட்டைத் தைலமும் விஷகுணமுள்ளவைகளாதலால் உஷ்ணஜலம் ஆகாதென்று கூறப்பட்டது. [விஷகுணமுள்ள சரக்குகளுக்கு அல்லது ஔஷதங்களுக்கு உஷ்ணபதார்த்தம் அநுபானமாக உபயோகிக்கத் தகாது என்பது விதி. உஷ்ணம் விஷத்தை விருத்தி செய்யுமென்பது கொள்கை.]

2. அபிஷ்யந்தி—43-ம் பக்கம் டிப்பணியைப் பார்க்க.

3. சிகித்ஸை செய்து கொள்ளப்படும் நாட்களில் அநுஸரிக்கப்படும் பத்தியக்கிரமங்கள் யாவும் சிகித்ஸைக்குப் பிறகும் அவ்வளவு நாட்கள்வரையில் அநுஸரிக்கப்படுவது அஸாத்மியத்தைக் கிரமமாக விடுவதும், ஸாத்மியத்தைக் கிரமமாக உபயோகிப்பதுமான முறைகூறியுள்ள விதியை அநுஸரித்துக் கூறப்பட்டதாகும். இது மறுபத்தியம் என்று தமிழரால் வழங்கப்படுகிறது.

ஸைகளிலும், வியாதியினால் இளைத்து பலஹீனமடைந்தவர்களுக்கும் பெரும்பாலும் அநுகூலமானது. 24—27½.

சமன ஸ்நேஹோபசாரம்:—சமன ஸ்நேஹத்தைப் பிரயோகிக்கும் போது, விரேசசிகிச்சையை செய்து கொண்டவனுக்கு எவ்வித உபசாரம் செய்யப்படுமோ அவ்விதமான உபசாரம் பண்ணவேண்டும்.[1]—28.

மிருதுகோஷ்ட-க்ரூரகோஷ்டங்களுக்கு ஏற்ற ஸ்நேஹபான முறை:—(1) மிருதுகோஷ்டமுள்ளவன் அச்சஸ்நேஹத்தை மூன்று தினங்கள் உட்கொள்ளவேண்டும். (2) க்ரூரகோஷ்டமானால் ஏழு நாட்கள் அதை உட்கொள்ளுவது அவசியம்; அல்லது எவ்வளவு நாட்கள் உபயோகித்தால் நன்றாக ஸ்நிக்தமாகக்கூடுமோ[2] அவ்வளவு நாட்களும் உட்கொண்டுவரலாம்; அதற்கு மேல் ஸ்நேஹத்தை உபயோகித்தால் அது ஸாத்மியமாக[3] ஆய்விடும்.—29.

ஸ்நிக்த-ரூக்ஷ-அதிஸ்நிக்தங்களின் குறிகள்:—(1) வாதம் இயற்கையான நிலைமைக்கு வருவதும், ஜாடராக்னி உத்தீபனமாவதும், மலம் கெட்டியாயில்லாமல் இளகி எண்ணெய்ப் பசையோடு கூடியிருப்பதும், ஸ்நேஹத்தினிடம் வெறுப்புண்டாவதும், உடலில் வாட்டம் ஏற்படுவதும் நன்றாக ஸ்நிக்தமானதற்கு ஏற்ற அறிகுறிகளாகும். (2) ரூக்ஷமாயிருந்தால் இதற்கு நேர் எதிரிடையான குணங்கள் உண்டாயிருக்கும். (3) அதிஸ்நிக்தமானால் உடல் வெளுத்துவிடும்; மூக்கிலிருந்தும், வாயிலிருந்தும், குதத்திலிருந்தும் ஒருவிதமான துர்நீர் கசியும்.—30, 30½.

ஸ்நேஹத்தை முறைகேடாயுபயோகிப்பதாலான கெடுதிகள்:—அளவுமீறியோ, அகாலத்திலோ உபயோகிக்கப்படும் ஸ்நேஹமும், எவனுக்கு எது ஆகாது என்று கூறப்பட்டிருக்கிறதோ அவ்வித ஸ்நேஹமும், பிரதிகூலமான ஆஹாரங்களோடும் ஆசாரத்தோடும்[4] உபயோகிக்கப்படும் ஸ்நேஹமும் பின்கூறப்படும் விகாரங்களையுண்டுபண்ணும்; அவையாவன:—சோகை, மூலம், சோம்பல், திமிர், மூர்ச்சை, சொறி, குஷ்டம், ஜ்வரம், குமட்டல், வயிற்றுவலி, வயிற்றுப்பொருமல், தலைசுற்றல் முதலியவையாம்.—31, 32.

1. விரேசனத்தில் செய்யப்படும் உபசாரக்கிரமங்களை 18-வது அத்தியாயத்தில் பார்க்க.

2. நன்றாக ஸ்நிக்தமாதல்—அடுத்தாற்போல் கூறப்படும் ஸ்நிக்த லக்ஷணங்களைப் படிக்க.

3. ஸாத்மியம்—91-ம் பக்கம் பார்க்க. [ஸ்நேஹம் ஸாத்மியமாய்விட்டால் மலத்தை வெளிப்படுத்தாது; அதிகமாயுபயோகிப்பதாலான அவக்குறிகள் அநேகம் உண்டாகும் என்று அஷ்டாங்க ஸங்கிரஹம்.]

4. இதற்குமுன் 24-முதல் 27½-வரை ச்லோக மொழிபெயர்ப்பிலும் விவரிக்கப்பட்டுள்ள ஆஹாராசாரங்களுக்குப் பிரதிகூலமானவை யென்று கருத்து.



முறைதவறின ஸ்நேஹப்பிரயோகத்தாலான கோளாறுகளுக்குப் பரிஹாரம்:—முறைதவறாக ஸ்நேஹத்தைப் பிரயோகிப்பதாலுண்டாகும் கோளாறுகளில் அடியில் வருமாறு பரிஹாரங்களைச் செய்யவேண்டும்: அவையாவன:—பசியையும் தாஹத்தையும் அடக்குதல், வாந்தியுண்டாக்குதல், ஸ்வேத சிகித்ஸை, ரூக்ஷகுணமுள்ள அன்ன-பான-ஔஷதங்களை உபயோகித்தல், மோர், அரிஷ்டங்கள்,[1] கலம்-உத்தாலம்[2]-வாற்கோதுமை-சாமை-வரகு என்னும் தானியங்கள், திப்பிலி, த்ரிபலை, தேன், கடுக்காய்,[3] பசுவின் மூத்திரம், மஹிஷாக்ஷி குக்குலு இவைகளேயாம்; மேலும் ஸ்நேஹத்தை முறைதவறாக உபயோகித்து உண்டாகும் வியாதி எவ்வெவ்விதமானதோ அந்தந்த வியாதிக்கு ஆங்காங்கு மொழியப்பட்டுள்ள சிகித்ஸைகளையும் செய்யலாம்.—33, 34.

ரூக்ஷசிகித்ஸையினாலுண்டாகும் குறிகள்:—ரூக்ஷ சிகித்ஸை[4] நன்றாக நிறைவேறியதிலும், அதை அதிக அளவாகச் செய்வதிலும் உண்டாகக்கூடிய குறிகள், நன்றாக நிறைவேற்றப்பட்ட அல்லது அதிக அளவாகச் செய்யப்பட்ட லங்கந சிகித்ஸைகளின்[5] குறிகளுக்கு முறையே ஸமானமாயிருக்கும்.—34½.

ஒரு முறை ஸ்நிக்தமானதும் செய்யக்கூடிய சிகித்ஸா க்ரமம்:—ஸ்நேஹ சிகித்ஸையினால் ஸ்நிக்தமானவன், பிறகு ஸ்நிக்தமாகவும் திரவமாகவும் ரஸத்திலும் வீர்யத்திலும் உஷ்ணமாகவுமுள்ள ஜாங்கல ஜந்துவின் மாம்ஸ ரஸத்தை உட்கொண்டு ஸ்வேத சிகித்ஸையைச் செய்துகொள்ளவேண்டும்; அப்பால் மூன்று நாட்கள் சும்மாயிருந்து விரேசனம் செய்துகொள்ளவேண்டும்; பின்பு மற்றொரு தினம் பொறுத்திருந்து கபத்தை விருத்திசெய்யும் வஸ்துக்களை யுபயோகித்து கபதோஷத்தைத் தூண்டிக்கொடுத்து வமனத்தை யுண்டுபண்ணவேண்டும்.—35, 36.

ஸ்நேஹ சிகித்ஸையினால் கெடுதி யுண்டாகாமற் செய்யுமுபாயம்:—சனை பருத்தும், கொழுத்தும், அதிக கபத்துடன் கூடி-

1. அரிஷ்டம்—53-ம் பக்கம் பார்க்க.

2. கலம் என்பதே காம் எனவும் கூறப்படும். காம், உத்தாலம் என்னும் தானியங்களைப்பற்றி 58-ம் பக்கத்தில் "மஹாவ்ரீஹி" வகுப்பைப்பார்க்க.

3. இங்கு முன்பே த்ரிபலையென்று குறிக்கப்பட்டு அதில் கடுக்காயும் சேர்ந்திருக்க, மறுபடியும் கடுக்காயைப் பிரயோகிக்க வேண்டுமென்று கூறுவதற்குக் காரணம், த்ரிபலையையாவது அல்லது நெல்லிக்காய் தான்றிக்காய்களைத் தவிர்த்து கடுக்காயை மட்டுமாவது உபயோகிக்கலாமென்னும் கொள்கையேயாம்.

4. ரூக்ஷசிகித்ஸை—முன் குறிப்பிட்ட பசி-தாஹம் முதலியதை அடக்குவதேயாம்.

5. லங்கந சிகித்ஸையின் குறிகளை 154-157-ம் பக்கங்களில் 'லங்கநம் நிறைவேறியது, அதிலங்கநம்' என்பவற்றின் குறிகளைப்பற்றிய விவரங்களில் காணலாம்.

யும், ஜாடராக்னி விஷமித்தும் இருக்கிற மனிதர்களும், முன்னமே ஸ்நேஹ சிகித்ஸையை அப்யஸித்திருப்பவர்களும், ஸ்நேஹ சிகித்ஸையைச் செய்துகொள்ளத் தகுந்தவராகவும் இருப்பவர் எவரோ அவர்களுக்கு முதலில் ரூக்ஷண சிகித்ஸையைச் செய்து, பிறகு நன்கு ஸ்நேஹ சிகித்ஸையையும் செய்து, அப்பால் சோதன சிகித்ஸையையும் பண்ணவேண்டும்; இவ்வாறு செய்தால் ஸ்நேஹ சிகித்ஸையினால் சில ஸமயம் ஸம்பவிக்கக்கூடிய கெடுதிகள்[1] நேரிடமாட்டா.—37, 37½.

ஸ்நேஹம் அஸாத்மியமாவதாலான பயன்:—ஸ்நேஹம் அஸாத்மியமாக ஆய்விடுமானால்,[2] அது வாதாதி தோஷங்களையும் மலங்களையும் அதிகமாய் வெளிப்படுத்துவதற்குப் போதுமான சக்தியுடையதாகும்.—38.

அச்சஸ்நேஹம் ஸஹியாதவருக்கு ஸத்யஸ்நேஹமான உணவுகள்:—ஸ்நேஹத்தைப் பிரயோகித்துச் செய்யப்படும் சிகித்ஸையைச் சஹிக்கமுடியாதவரான பாலர்களுக்கும் கிழவர்முதலானவர்களுக்கும் உடனே ஸ்நேஹகாரியத்தை நிறைவேற்றவல்லவையான அடியிற் கூறப்படும் யோகங்களைப் பிரயோகிக்கலாம்: அவையாவன:—ஏராளமான மாம்ஸரஸங்கள், ஸ்நேஹ பதார்த்தங்களைச் சேர்த்துத் தாளித்த பேயா,[3] நெய் முதலிய ஸ்நேஹமும் கற்கண்டு அல்லது வெல்லப்பாகும் கூடிய எள்ளுப்பொடி, அவ்வாறே[4] பக்குவம் செய்த க்ருஸரா[5], இருதம் நிரம்பிய உஷ்ணமான பால் சேர்த்த பேயா[6], வெல்லம் சேர்த்த தயிரின் மேலுள்ள தெளிவுநீர், நெய்-எண்ணெய்-கொழுப்பு-வஸா-அரிசி ஒவ்வொன்றும் இரண்டிரண்டு பலம் சேர்த்துப் பக்குவம் செய்த பேயா, என்கிற இவ்வேழுவிதமான ஸ்நேஹ குணமுள்ள உணவு வகைகளை வேண்டியவளவு உப்பையும் சேர்த்து உட்கொண்டால் அவை உடனே தேஹத்தில் ஸ்நிக்த்த குணத்தை விருத்தி செய்யும்; ஆகவே ஸத்யஸ்நேஹங்கள் என்றும் இவை வழங்கப்படும், இவ்வணமானது அபிஷ்யந்தியாகவும், ரூக்ஷகுணமற்றதாகவும்,

1. ஸ்நேஹத்தினாலுண்டாகக்கூடிய கெடுதிகள் இதற்கு முன் 31, 32-வது பத்தியங்களின் மொழிபெயர்ப்பில் குறிப்பிடப்பட்டன.

2. ஸ்நேஹம் தேஹத்தில் பற்றுதலடையாமற்போவது அஸாத்மியம் என்பதால் குறிக்கப்படுகிறது.

3. பேயா—இதைப்பற்றி 62-ம் பக்கத்தில் விவரம் காண்க.

4. அவ்வாறே யென்பதால், வெல்லப்பாகும் அல்லது கற்கண்டும் ஸ்நேஹமும் சேர்ந்தது எனப் பொருள்.

5. க்ருஸரா—அரிசி, பயறு, உளுந்து, எள் இவற்றில் எதையாவது பொடித்து, அதற்கு ஆறுபங்கு ஜலம் சேர்த்து, சிறிது குழம்பாகக் காய்ச்சிய ஒருவித கஞ்சி; இதையே யவாகூ என்றும் கூறுவர்.

6. "பால் சேர்த்த பேயா" என்றதால், முன் கூறப்பட்டது மோர் சேர்த்த பேயா என்று அறிக.



ஸூக்ஷ்மம்-உஷ்ணம்-வ்யவாயி என்னும் குணங்களையுடையதாகவும் இருக்கிறதாகையால், ஸ்நேஹம் நிரம்பிய இவ்வேழு உணவுகளிலும் அதை விசேஷமாகச் சேர்க்கவேண்டுமென்று கூறப்பட்டது. 39—42.

குஷ்டப்-பிரமேஹாதிகளில் உதவாத ஸ்நேஹங்கள்:—வெல்லம், ஆநூபமாம்ஸம்,[1] பால், எள், உளுந்து, ஸுரை,[2] தயிர் இவற்றை குஷ்டரோகத்திலும், சோகையிலும், பிரமேஹத்திலும் ஸ்நேஹ சிகித்ஸையின் பொருட்டு உபயோகிக்கக் கூடாது.—43.

குஷ்டப்-பிரமேஹாதிகளில் உபயோகிக்கக்கூடிய ஸ்நேஹ முறைகள்:—த்ரிபலை, திப்பிலி, கடுக்காய்,[3] மஹிஷாக்ஷகுக்குலு முதலியவற்றால் பக்குவம் செய்யப்பட்ட ஸ்நேஹங்களை குஷ்டம், சோகை, பிரமேஹம் என்னும் இவற்றில் அந்தந்த வியாதிக்குத் தகுந்தவாறு உபயோகிக்க வேண்டும்.—44.

பிணிகளால் மெலிந்தவருக்கு ஏற்ற ஸ்நேஹங்கள்:—வியாதிகளால் வருந்தி மெலிவடைந்து பலங் குன்றியிருப்பவருக்கு ஜாடராக்னியைத் தூண்டக் கூடியவையும், தேஹத்தைப் போஷிக்கத் தகுந்தவையுமான ஸ்நேஹங்களைப் பிரயோகிக்க வேண்டும்.—45.

ஸ்நேஹமுபயோகிப்பதாலான பிரயோஜனங்கள்:—ஸ்நேஹத்தை அடிக்கடியும் தவறாமல் உபயோகித்து வரும் மனிதனுக்கு ஜாடராக்னி நன்கு உத்தீபனமாகும்; குடல்கள் சுத்தமாகும்; தாதுக்கள் யாவும் பழுதடையாமல் செழிப்படையும்; தேஹத்தில் பலமும் நிறமும் இயற்கைக்கு ஏற்றவாறு விருத்தியடையும்; இந்திரியங்கள் பலங்கொள்ளும்; கிழத்தனம் எளிதில் வாராததோடு வயது சென்றபிறகும் கிழத்தனக் குறிகள் அதிகமாகத் தோன்றா; நூறாண்டு காலம் சுகவாழ்க்கை அநுபவிக்கும் நிலைமையுமுண்டாகும்.[4]—46.

1. ஆநூபமாம்ஸம்—ஆநூபதேசத்தில் உண்டாய், அவ்விடத்திலேயே வளர்ந்து ஜீவித்துவரும் பிராணிகளுடைய மாம்ஸம். "ஆநூபம்" என்பதைப்பற்றி 10-ம் பக்கம் பார்க்க.

2. ஸுரை—இதைப்பற்றி 53-வது பக்கம் பார்க்க.

3. இங்கு "த்ரிபலை" என்று கூறியதாலேயே கடுக்காயும் கிரஹிக்கப்பட்டிருக்க, மறுபடி "கடுக்காய்" என்று கூறியதால், த்ரிபலையில்லாமல் கடுக்காயை மட்டும் தனியாகவும் இந்த யோகத்தில் உபயோகிக்கலாமென்பது கருத்து.

4. இங்கு கூறப்பட்டுள்ள பலன்களின் வரிசையைக் கிரமமாக உற்றுப்பார்த்தால் அடியில் குறிப்பிடப்படும் அபிப்பிராயத்தைக் கொண்டு இங்ஙனம் கூறப்பட்டதாக அறியலாம்: அதாவது:—ஸ்நேஹத்தின் குணத்தினால் ஜாடராக்னி விருத்தியாகுமென்று கூறப்பட்டது. ஜாடராக்னி விருத்தியாய் உணவு நன்கு ஜீர்ணமாவதால், மலங்களும் தானே நன்றாக வெளியாய்விடும்; ஆகவே அடுத்தாற்போல் குடல் சுத்தி குறிப்பிடப்பட்டது. குடலில் பழைய மலங்கள் சேராமல் ஆஹாரமும் நன்கு ஜீர்ணமாவதால்

# பதினேழாம் அத்தியாயம்.

## ஸ்வேத விதி.

இவ்வத்தியாயத்தில் ஸ்வேதவிதி[1] யென்னும் விஷயம் விவரிக்கப்படுகிறது :—

ஸ்வேதம் நான்கு விதம் :—ஸ்வேத சிகித்ஸையானது தாப ஸ்வேதம், உபநாஹ ஸ்வேதம், ஊஷ்ம ஸ்வேதம், திரவ ஸ்வேதம் என்று நான்கு பிரிவுகளாகப் பகுக்கப்பட்டிருக்கிறது.—½.

தாபஸ்வேதம் :—அக்னியினால் சூடுண்டாக்கப்பட்ட வஸ்திரத்தினாலோ, [illegible]களாலோ, கரத்தினாலோ, அல்லது வேறு வஸ்துக்களாலோ ஒற்றடம்கொடுப்பது 'தாபஸ்வேதம்'[2] எனப்படும்.—1

உபநாஹம் அல்லது ஸால்வணஸ்வேதம் :—உபநாஹஸ்வேதத்தை மூன்று தோஷங்களில் மூன்று வகையான முறைகளைக் கொண்டு நிறைவேற்ற வேண்டும்; எப்படியெனில் :—(1) வசம்பு, கிண்வம்,[3] சதகுப்பி, தேவதாரு, மற்றும் பல தானியங்கள், ஸுகந்த வஸ்துக்கள்,[4] சிற்றரத்தை, ஆமணக்கு, ஜடாமாம்ஸி, இறைச்சி இவற்றில் விசேஷமாக உப்பைக் கலந்து, ஸ்நேஹத்தையும் சுக்தத்தையும்,[5] மோரையும் சேர்த்து கனைத்து, வாதத்தினால் மட்டும் உண்டான விகாரங்களில் ஸ்வேதத்தின் பொருட்டுப் பிரயோகிக்க வேண்டும். கபத்துடன் கூடிய வாதத்தில் ஸுரஸாதி கணத்திற்[6] கூறியுள்ள சரக்குகளாலும், பித்தத்துடன் கூடிய வாதத்தில் பத்மகாதிகணத்திற் குறிப்பிட்டுள்ள சரக்குகளாலும்[7] உபநாஹம் செய்ய வேண்டும்; இதற்கே ஸால்வண ஸ்வேதம் என்னும் மற்றொரு பெயருண்டு. மேற்கூறிய வஸ்துக்களை இளஞ்சூடாகச் செய்து

---

தாதுக்களும் செழித்துப் புதியவையாகும்; தாதுக்கள் செழிப்பதால் தேஹபலமும் கிரமமும் விருத்தியாகும்; அதனால் இந்திரியங்களும் சுறுசுறுப்பாய் வன்மையடையவே கிழத்தனம் எளிதில் உண்டாகாது; கிழத்தனம் சீக்கிரம் நேரிடாமற் போகவே ஆயுளும் விருத்தியாகின்றது.

1. வியர்வையை உண்டாக்கி, வியாதிகொண்ட அவயவங்களை அல்லது முழுத்தேஹத்தையும் ஸ்வஸ்த நிலைமைக்குக் கொண்டுவரும் சிகித்ஸா கிரமங்களைக் கூறும் அத்தியாயம்.

2. தாபஸ்வேதம்—சூடுண்ட கவிடு ஓடு முதலியவற்றால் தேஹத்தில் ஒற்றடம் கொடுப்பது.

3. கிண்வம்—ஸுராவென்னும் மதுவின் அடியில் தங்கி நிற்கும் திப்பிகள்.

4. கோஷ்டம், அகில், சந்தனம் முதலிய ஸுகந்த வஸ்துக்கள்.

5. சுக்தம்—ஒருவாறு பதனழித்து நன்றாகப் புளித்துப்போன தேன் முதலிய இனிப்பான வஸ்துக்களாலான ஒருவித மது.

6. ஸுரஸாதி கணம்—இதைப்பற்றி 163-ம் பக்கம் பார்க்க.

7. பத்மகாதி கணம்—இதைப்பற்றி 160-ம் பக்கம் பார்க்க.



அவற்றால் அந்தந்த அவயவங்களில் பலமுறை ஒற்றடம் கொடுத்து, அவற்றின் சாற்றையும் பூசி[1] ஸ்நிக்தமாகவும், உஷ்ணவீர்யமுள்ளவையாகவும், மிருதுவாயிருப்பவையும் துர்நாற்றமுண்டாகாமல் பதன் செய்யப்பட்டவையுமான மிருதுவான சர்மங்களால் அவ்வவயவங்களைக் கட்ட வேண்டும்; அவ்வித தோல் இராவிட்டால், வாதஹரமான இலைகளாலோ, பட்டுவஸ்திரத்தினாலோ, கம்பளத்தினாலோ, ஸாதாரண வஸ்திரத்தினாலோ அவ்வவயவங்களைச் சுற்றிக் கட்டலாம்; இராத்திரியில் இடப்படும் கட்டை மறுநாள் உதயத்திலும், பகலில் கட்டுவதை இரவிலும் அவிழ்த்து விட வேண்டும். 2—5.

ஊஷ்ம ஸ்வேதம் :—உத்காரிகை,[2] மண்கட்டி, ஓடு, கல், மண், தழை, தானியம், வரட்டி, மணல், உமி இவற்றிற்கு அநேகவிதமான உபாயங்களால் சூடுண்டாக்கி, அவற்றால் தேசகாலங்களை அநுசரித்து ஊஷ்ம ஸ்வேதத்தைப் பிரயோகிக்க வேண்டும்[3].—6, 6½.

திரவஸ்வேதம் :—முருங்கை, விளாமிச்சை, ஆமணக்கு, புங்கை, செந்துளசி, வெள்ளைக் கஞ்சாங் கோரை, வாகை, ஆடாதோடை, மூங்கில், எருக்கு, ஜாதி யென்னும் ஜாஜி, பெருவாகை இவற்றின் இலைகளையும், வசாதி கணத்திற் குறிக்கப்பட்டுள்ள சரக்கு

---

1. "அந்தந்த அவயவங்களில் பலமுறை ஒற்றடம் கொடுத்து, சாற்றைப் பூசி" என்னும் விஷயம் அஷ்டாங்கஸங்கிரஹத்தை அநுஸரித்துக் குறிப்பிடப்பட்டது.

2. உத்காரிகை—பயதானியம், உளுந்து, ஆமணக்கு விதை முதலியவற்றை இடித்து வேகவைத்து எடுக்கப்படும் பிண்டம் போன்ற கல்கம். இதைக் கொண்டு ஒற்றடம் கொடுக்கலாம்.

3. மண்கட்டி, ஓடு, கல் முதலானவற்றைப் பழுக்கக் காய்ச்சி, இடித்தோ யாவெடுத்து, ஜலத்திலோ, காடியிலோ, கஷாயத்திலோ சேர்த்து, அதிலிருந்துவரும் ஆவியைச் சயநத்திற் படுத்திருக்கும் பிணியாளியின் தேஹத்தில் பாவச் செய்யலாம்; இதையே பாஷ்ப ஸ்வேதம் என்பார்கள். பசுவின் சாணம், அல்லது இடித்துக் கல்கமாகச் செய்த ஔஷதி முதலியவற்றை வெதுப்பி, வஸ்திரத்திற் கட்டி ஒற்றடம் கொடுக்கலாம்; இதற்கு பிண்ட ஸ்வேதம் என்று பெயர். ஆமணக்கிலை முதலியவற்றோடு யவதானியாதிகளைக் கலந்து, காடி அல்லது அம்லவஸ்துக்களையும் கூட்டி, ஒரு பானையிலிட்டு வாயைமூடி வேகவைத்து, அதிக காற்றில்லாத அறையில் கனத்த வஸ்திரத்திற் பரப்பி, அதன்மேல் கம்பளங்களையோ வேறு கனத்த வஸ்திரங்களையோ விரித்து, அதில் பிணியாளியைப் படுக்கச் செய்து, மேலே வஸ்திரங்களால் போர்த்து விடவும்; இந்த விதமாகச் செய்யப்படுவதற்கு ஸம்ஸ்தர ஸ்வேதம் என்று பெயர். அல்லது முன்போல் ஸ்வேதத்திற்கு உபயோகமான வஸ்துக்களைப் பெரியதோர் கலத்தில் சமைத்து எடுத்து, அதன் அருகில் பிணியாளியை உட்காரச் செய்து, கலத்தையும் பிணியாளியையும் சேர்த்து வஸ்திரத்தினால் போர்த்து வியர்வையுண்டாகச் செய்யலாம்; இவ்வாறு தோஷ-தாதுக்களின் கோளாறுகளால் ஸம்பவிக்கும் வியாதிகளின் நிவாரணத்திற்காக திரவஸ்வேதம் அநேக முறைகளின்படி பிரயோகிக்கப்படும்.

களையும், [1] ஆநூபதேசத்திலும் ஜலத்திலும் உண்டான ஜந்துக்களுடைய மாம்ஸங்களையும், தசமூலத்தையும் அந்தந்த தோஷங்களுக்குத் தகுந்தவாறு வெவ்வேறாகவோ ஒன்றாகச் சேர்த்தோ ஸ்நேஹத்தையும் கூட்டி, ஸுரை, சுக்தம், ஜலம், பால் முதலியவற்றால் பக்குவம் செய்து கொள்ளவும்; அவ்வித கஷாயத்தை ஏதேனும் கலயங்களிலாவது, திரவம் வடிக்கக்கூடிய துவாரங்களையுடைய பாத்திரங்களிலாவது நிரப்பி, வியாதியினால் பீடிக்கப்படும் அவயவத்தில் ஸ்நேஹம் ஏதாவது தடவி, வஸ்திரத்தினால் அவயவத்தை மறைத்து, தாங்கக்கூடிய சூட்டுடன் அந்த திரவத்தினால் ஸேசனம் கொடுக்கலாம்; அல்லது அவ்வவயவத்தின் மீது அத்திரவத்தை ஊற்றலாம். [2] தேஹமனைத்தையும் பற்றி யுண்டாகும் வாதரோகத்திலும், அர்சஸ்-மூத்திரக்ருச்ரம் என்னும் நீர்ச்சுருக்கு முதலான வியாதிகளிலும், பிணியாளி முற்கூறிய அந்த திரவபதார்த்தங்களை ஒரு கொப்பரையில் நிரப்பி, அதில் மூழ்கி வரலாம். [3] 7—11.

ஸ்வேதம் செய்து கொள்ளும் முறை:—உள்ளும் புறமும் நன்றாக ஸ்நிக்தமான பின்பு, அதற்கு முன்பு உட்கொண்ட உணவு நன்கு ஜீர்ணமானதும், காற்று வீசக்கூடாத வீட்டில் இருந்து கொண்டு, ஸ்வேத சிகித்ஸையைச் செய்து கொள்ள வேண்டும்.—11½.

வியாதி முதலானதின் நிலைமைகளுக்கேற்ற மூன்றுவித ஸ்வேதங்கள்:—வியாதியினுடையவும், பிணியாளியினுடையவும், வஸிக்கும் இடத்தினுடையவும், ருதுவினுடையவும் தன்மைகளை அநுஸரித்து உத்தம ஸ்வேதம், மத்யம ஸ்வேதம், ஹீனஸ்வேதம் என்கிற இவற்றில் ஏதேனும் ஒன்றைப் பிரயோகிக்க வேண்டும்.—12.

கபத்திலும், கப வாதங்களிலும் செய்யக் கூடிய ஸ்வேதங்கள்:—(1) கபத்தின் கோளாறால் பீடிக்கப்படுபவன் தேஹத்தை ரூக்ஷமாகச்செய்து கொண்டு, ரூக்ஷகுணமுள்ள பதார்த்தங்களைக் கொண்டே ஸ்வேத சிகித்ஸையைச் செய்து கொள்ள வேண்டும். (2) கபத்தினாலும் வாயுவினாலும் வருந்துபவன் சில அவயவங்களில் ரூக்ஷமாகவும், வேறு சில அங்கங்களில் ஸ்நிக்தமாகவும் உள்ள ஸ்வேதத்தைப் பிரயோகிக்க வேண்டும்.—12½.

வாதம் ஆமாசயத்திலும் கபம் பக்வாசயத்திலும் இருக்கும் போது செய்யக்கூடிய ஸ்வேதம்:—1) வாததோஷம் ஆமாசயத்தை யடைந்திருக்கையில் முதலில் ரூக்ஷகுணமுள்ள ஸ்வேதத்தைச் செய்து, பிறகு ஸ்நிக்த ஸ்வேதம் பண்ண வேண்டும். (2) கபதோ

1. வசாதிகணம்—இதைப்பற்றி 163-ம் பக்கம் பார்க்க.

2. இவ்வாறு திரவபதார்த்தை வியாதி கொண்ட அவயவங்களில் ஊற்றுவது என்னும் இவ்வித திரவஸ்வேதத்திற்கு பரிஷேக ஸ்வேதம் என்று பெயர்.

3. பலவகையான சரக்குகளைச் சேர்த்து பக்குவம் செய்த கஷாயம் முதலிய சூடான திரவத்தில் மூழ்கச் செய்வது என்னும் இந்த திரவஸ்வேதத்திற்கு அவகாஹ ஸ்வேதம் என்று பெயர்.



ஷம் பக்வாசயத்தை யடைந்தால் அப்பொழுது முதலில் ஸ்நிக்தகுணமுள்ள ஸ்வேதத்தையும், அப்பால் ரூக்ஷஸ்வேதத்தையும் செய்ய வேண்டும். ஸ்வேதசிகித்ஸையை இவ்வாறு ஸ்தானபேதங்களை அநுஸரித்து நிறைவேற்றுவது முறை [1].—13½.

ஸ்வேதத்தைச் சொற்பமாகச் செய்யக் கூடிய அல்லது விலக்கக் கூடிய அவயவங்கள்:—வங்க்ஷணங்கள் என்னும் தொடையிடுக்குகளில் ஸ்வேதத்தைச் சொற்ப அளவாகச் செய்யவேண்டும்; கண்கள், பீஜங்கள், இருதயம் இவற்றில் மிகவும் சொற்பமாகச் செய்ய வேண்டும்; அல்லது இம்மூன்று இடங்களிலும் ஸ்வேதம் செய்யாமலே இருக்கலாம்.—14.

ஸ்வேதம் நிறைவேறியதன் இலக்ஷணம்:—உடம்பில் உண்டாயிருந்த குளிர் அல்லது சைத்தியமும் வலியும் நிவ்ருத்தியாய், அவயவங்கள் அனைத்தும் மிருதுத் தன்மையை அடைந்திருந்தால், அப்பொழுது ஸ்வேதசிகித்ஸை நன்கு நிறைவேறியதாகக் கருத வேண்டும்.—14½.

ஸ்வேதம் நிறைவேறியதும் செய்ய வேண்டிய உபசாரம்:—பிறகு தேஹத்தை மெதுவாக மர்த்தனம் செய்வித்துக்கொண்டு, ஸ்நானம் பண்ணி, அப்பால் முறைப்படி ஸ்நேஹ சிகித்ஸையைப் பெற வேண்டும்.—15.

மிதமிஞ்சிய ஸ்வேதத்தினாலுண்டாகும் தீங்குகளும் பரிஹாரமும்:—ஸ்வேதசிகித்ஸை மிதமிஞ்சிச் செய்யப்படுமானால் அடியில் கூறப்படும் அவகுறிகள் உண்டாகும்; அவையாவன:—இரத்தபித்தம் உண்டாய் விருத்தியாகும்; தாவரட்சி, மூர்ச்சை, குரல் கம்மிப்போதல், தேஹம் இளைத்துப்போதல், தலைசுற்றல், கீல்களில் வேதனை, ஜ்வரம், ஒருவாறு கறுத்தும் சிவந்துமுள்ள தடிப்புகள் தோன்றுதல், வாந்தி இவைகளேயாம். இவ்விகாரங்கள் தோன்றினால், அவற்றிற்கு ஸ்தம்பக குணமுள்ள [2] ஔஷதத்தைப் பிரயோகிக்கவேண்டும். விஷபாதத்தினாலும், க்ஷாரப்பிரயோகத்தினாலும், தாஹ சிகித்ஸையினாலும், அதிஸாரத்தினாலும், வாந்தியினாலும், மூர்ச்சையினாலும் வருந்துபவருக்கும் ஸ்தம்ப ஔஷதம் கொடுப்பது நலம்.—16, 17.

ஸ்வேதந-ஸ்தம்பநங்களுக்கு ஏற்ற வஸ்துக்கள்:—குருகுணமும், தீக்ஷ்ணத்தன்மையும், உஷ்ண வீர்யமும் உள்ள வஸ்து அல்லது

1. வாததோஷத்திற்குப் பக்வாசயமும் அதற்குக் கீழுள்ள பாகமும் ஸ்தானமென்றும், கபத்திற்கு ஆமாசயமும் அதற்கு மேலுள்ள பாகங்களும் ஸ்தானம் என்றும் முன்பே கூறப்பட்டிருக்கிறது; அவை அவ்வாறு இயற்கை ஸ்தானங்களை விட்டு ஒன்றன் ஸ்தானத்தில் மற்றொன்று சேரும்போது தோஷத்தைப்பற்றியும் ஸ்தானத்தைப் பற்றியும் விசாரங்கள் வெவ்வேறுபடுவது இயல்பாகையால், அங்கு ஸ்தானத்தை அநுஸரித்தா, தோஷத்தை அநுஸரித்தா சிகித்ஸை செய்வது என்கிற ஸந்தேஹம் இதனால் விலக்கப்பட்டது.

2. ஸ்தம்பனம்—152-ம் பக்கம் டிப்பணியைப் பார்க்க.

கார்யம் பெரும்பாலும் ஸ்வேதகமாக இருக்கும்; இவற்றிற்கு நேர் எதிரிடையான குணமுள்ள பதார்த்தம் அல்லது கார்யம் ஸ்தம்பக சிகித்ஸைக்குத் தகுந்ததாம். மேலும் த்ரவம், ஸ்திரம், ஸரம், ஸ்நிக்தம், ரூக்ஷம், ஸூக்ஷ்மம் என்னும் இக்குணங்களையுடைய வஸ்து ஸ்வேதகமாக இருக்கும்; ச்லக்ஷ்ணம், ரூக்ஷம், ஸூக்ஷ்மம், ஸரம், த்ரவம் இக்குணங்களையுடையது ஸ்தம்பகமாகும்.—18, 18½.

ஸ்தம்பககுணமுள்ள வஸ்துக்களின் சுருக்கம்:—கைப்பு, துவர்ப்பு, இனிப்பு என்னும் இச்சுவைகளையுடைய பதார்த்தங்கள் பெரும்பாலும் ஸ்தம்பககுணமுள்ளவையென்று சுருக்கமாகக் கூறலாம்.—19.

ஸ்தம்பநம் முறைப்படி நிறைவேறியதன் குறிகள்:—தேஹத்திற்கு இயற்கையான பலம் உண்டாய் குறிப்பிட்ட வியாதிகளும் நிவ்ருத்தியானால் அப்பொழுது "ஸ்தம்பநம்" என்னும் சிகித்ஸை நன்கு நிறைவேறியதென்று அறியலாம்.—19½.

அதிஸ்தம்பநக் குறிகள்:—ஸ்தம்பக சிகித்ஸை அதிக அளவாகச் செய்யப்பட்டிருந்தால், அடியில் குறிப்பிடப்படும் கோளாறுகள் ஸம்பவிக்கும்: அவயவங்களை அசைக்க முடியாமற்போதல், சர்மமும் ஸ்நாயுவும் சுருக்கங்கொள்ளல், தேஹத்தில் நடுக்கம், மார்புப்பிடிப்பு, பேசமுடியாமற் போதல், முகவாய்க் கட்டைப் பிடிப்பு, பாதம்-உதடு-சர்மம்-கை இவை கறுத்துப்போதல் என்பவையாம். 20½.

ஸ்வேத சிகித்ஸைக்குத் தகாதவர்கள்.—அதிக ஸ்தூலதேஹிகள், ரூக்ஷமாயிருப்பவர், பலஹீனர்கள், மயக்கமுண்டவர், ஸ்தம்பக சிகித்ஸை செய்யக்கூடியவர், க்ஷதகாஸத்தினால் வருந்துபவர், மெலிந்திருப்பவர், மதுபானம் செய்து அதனாலுண்டான விகாரங்களுடன் கூடியவர், திமிரம் என்னும் கண்ணோயுள்ளவர், மஹோதரம் முதலிய வயிற்றைப்பற்றிய வியாதிகளாலும்-விஸர்ப்பத்தினாலும்-குஷ்டத்தினாலும்-க்ஷயத்தினாலும்-வாதரக்தத்தினாலும் வருந்துபவர், பால்-தயிர்-ஸ்நேஹம்-மது இவற்றைப் பானம் செய்தவர்கள், விரேசனம் செய்துகொண்டவர்கள், குதம் நெகிழ்ந்து வெளிப்பட்டோ அழற்சிகொண்டோ கஷ்டப்படுபவர், உடல் வாட்டமுற்றவர், கோபித்துக்கொண்டிருப்பவர், பயந்திருப்பவர், பசியினாலும்-தாஹத்தினாலும்-காமாலையினாலும்-பாண்டுரோகத்தினாலும்-மேஹரோகத்தினாலும்-பித்த விகாரங்களாலும் பீடிக்கப்படுபவர், கர்ப்பிணிகள், மாதவிடாய் நேரிட்டிருப்பவர், பிரஸவித்திருப்பவர் ஆகிய இவர்கள் யாவரும் ஸ்வேத சிகித்ஸைக்குத் தகாதவராவர். இவர்களுக்கு அபாயம் விளைவிக்கக்கூடிய வியாதி நேரிடுமாயின், அப்பொழுது அவசியமானால் ம்ருதுஸ்வேதம் செய்யலாம். 21—24.

ஸ்வேதசிகித்ஸைக்கான பிணியாளிகள்:—ச்வாஸம், காஸம், ப்ரதிச்யாயம் என்கிற நாசியைப்பற்றிய ஒருவித வியாதி, விக்கல், வயிற்றுப் பொருமல், மலச்சிக்கல், குரல் கம்மல், வாதரோகங்கள்,



கபரோகங்கள், ஆமதோஷத்தினாலான கோளாறுகள், அவயவங்களின் பிடிப்பு, குருவாயிருக்கும் நிலைமை, உடம்பெல்லாம் உண்டாகும் ஒருவித குடைச்சல், இடுப்பு-விலாப்புறம்-முதுகு-வயிறு-முகவாய்க் கட்டை இவற்றின் பிடிப்பு, பீஜங்கள் பருத்துப் போதல், வ்ருத்தியென்னும் வாதரோகம், ஆயாமம் என்னும் வலிப்பு, வாதகண்டகம் என்கிற ஒருவித வாயுதோஷம், மூத்ரக்ருச்ரம், அர்புதம், க்ரந்தி, சுக்லம் வெளிவராமல் தடைபடுதல், வாதரக்தம் இவ்வியாதிகளில், அந்தந்தப் பிரகரணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி[1] அததற்கு ஏற்ற ஔஷதங்களைப் பகுத்தறிந்துப் பிரயோகித்து ஸ்வேத சிகித்ஸையைச் செய்யலாம். 25—27.

அநாக்நேயஸ்வேதமும் அதற்குரிய நிலைமையும்:—வாததோஷமானது மேதஸ் என்னும் கொழுப்பாலும் கபத்தினாலும் சூழப்படுமானால்[2] அக்னி ஸம்பந்தமில்லாத ஸ்வேதசிகித்ஸை அநுகூலமானதாகும்; ஆகவே அவ்வித சிகித்ஸை அநாக்நேய ஸ்வேதம் எனப்படும். அதிக காற்றோட்டமில்லாத அறையில் இருத்தல், தேஹவுழைப்பு, கனமான வஸ்திரங்களால் போர்த்தல், நியுத்தம், பயமுண்டாக்குதல், வசைப்பு, கிணறு முதலியவைகளிலிருந்து செய்யப்படும் உபநாஹ ஸ்வேதம், புத்தம் செய்தல், கோபமுண்டாதல், பானவகைகளை அதிகமாகப் பருகுதல், பசி, வெயிலில் உலாவுதல் ஆகிய இவை அக்னிஸம்பந்தமில்லாமலே ஸ்வேதமுண்டாக்குவதற்கான உபாயங்களாம்.—28, 28½.

ஸ்வேத சிகித்ஸையின் பயன்:—முதலில் ஸ்நேஹசிகித்ஸையினால் ஒருவாறு கரையக்கூடிய நிலைமையை யடைந்த தோஷங்கள் கோஷ்டத்திலிருந்தாலும், தாதுக்களைப்பற்றியிருந்தாலும், ஸ்ரோதஸ்ஸுகளில் மறைந்து வியாபித்திருந்த போதிலும், கைகால்களில் சேர்ந்திருப்பினும், அஸ்திகளில் இருந்தாலும் அவற்றை ஸ்வேத சிகித்ஸையிற் கூறியுள்ள முறைகளால் த்ரவமாகச் செய்து, பின்பும் கோஷ்டம் என்னும் குடலுக்குள் கொண்டுவரலாம். இவ்வாறு செய்தபின்பு சோதந சிகித்ஸைகளால்[3] நன்றாக அத்தோஷங்களை எளிதில் வெளிப்படுத்தி விடலாம்.—29.

---

1. அந்தந்த வியாதிக்கு ஏற்ற பரிஹார முறைகள் சிகித்ஸா ஸ்தானத்திலும் உத்தரஸ்தானத்திலும் விவரிக்கப்படும்.

2. ஒரு தோஷத்தினால் அல்லது தாதுவினால் மற்றொரு தோஷம் ஆவரணம் செய்யப்படுமானால் அது ஆவரண தோஷம் என்று வழங்கப்படும்.

3. சோதந சிகித்ஸை—அடுத்த அத்தியாயங்களில் விவரிக்கப்படப் போகிற வமந-விரேசந-வஸ்திகர்மங்கள் முதலியன.

## பதினெட்டாம் அத்தியாயம்.

### வமந-விரேசந விதி.

இனி வமந-விரேசநவிதி[1] யென்னும் அத்தியாயம் விவரிக்கப்படும்:—

வமந-விரேசநங்களுக்கு ஏற்ற நிலைமைகளைப் பற்றிய பொது விதிகள்:—(1) கபதோஷம் கோபமடைந்த நிலைமையிலாவது, கபம் அதிகரித்துள்ள ஸம்யோகதோஷங்களிலாவது[2] வமநம் செய்விக்கலாம். (2) அவ்விதமே பித்தத்தில் விரேசநம் செய்விக்கலாம்.[3]—½.

வமநத்திற்கு ஏற்றவர்களைப் பற்றிய விசேஷ விதி:—விசேஷித்து அடியிற் குறிப்பிடப்படும் பிணிகளால் பீடிக்கப்படுகிறவர்கள் வமந சிகித்ஸைக்கு ஏற்றவராவர்; அவையாவன:—நவஜ்வரம்,[4] அதிஸாரம், கீழ் நோக்கும் இரத்தபித்தம், க்ஷயம், குஷ்டம், பிரமேஹம், அபசீ, கிரந்தி, பாதக்கால், பித்துப்பிடித்தல், காஸம், ச்வாஸம், இருதயத்தின் கோளாறடைந்த துடிப்பு, விஸர்ப்பம், ஸ்தந்ய தோஷம், மார்புக்கு மேலுள்ள அவயவங்களில் உண்டாகும் ரோகங்கள் இவைகளேயாம். 1—2½.

வமந சிகித்ஸைக்குத் தகாதவர்கள்:—கர்ப்பிணி, ருக்ஷதேஹமுள்ளவன்,[5] பசித்தவன், எப்பொழுதும் மனத்துயருற்றவன், பாலர், கிழவர், மெலிந்த தேஹமுடையவர், ஸ்தூலித்திருப்பவர், இருதயரோகமுள்ளவர், க்ஷதகாஸமுள்ளவர், துர்ப்பலர், வாந்தி செய்து கொண்டிருப்பவர், ப்லீஹமென்னும் மண்ணீரல் வியாதியுடையவன், திமிரம் என்னும் நேத்திரரோகமுள்ளவன், குடலில் கிருமி சேர்ந்திருப்பவன், வாயுவும் இரத்தமும் மேல்நோக்கி வாயினால் அல்லது நாசி முதலியதால் வெளியாய்க் கொண்டிருக்கும் பிணியாளி, வஸ்திசிகித்ஸை செய்து கொண்டவன், தொண்டைக் கம்மலுள்ளவன், மூத்திரம் அடைப்பட்டவன், மஹோதரம் முதலிய வயிற்றைப்பற்றிய வியாதிகளால் வருந்துபவன், குன்மரோகி, வெகு கஷ்டப்பட்டு வமநம் செய்பவன், அதிக பசியுள்ளவன், அர்சோரோகி, உதாவர்த்தரோகி, தலைச்சுற்றுள்ளவன், அஷ்டீலா என்னும் வாதரோகமுடையவன், பக்கச்சூலையினால் வருந்துபவன், வாதரோகங்களால் பீடிக்கப்படுபவன் ஆகிய இவர்கள் வமந சிகித்ஸைக்குத் தகாதவராவர். ஆனால் மேற்குறிப்பிட்ட பிணியாளிகள் ஸாதாரணவிஷம்,[1] கிருத்ரிமவிஷம்,[2] அஜீர்ணம், விருத்தாஹாரம்[3] இவற்றால் பீடிக்கப்படுபவர்களாயின், அப்பொழுதவர் வமந சிகித்ஸைக்குத் தகாதவர்கள் என்று விளம்புவது பிசகு. 3—6.

வமநத்திற்கும் வேறு சிகித்ஸைகளுக்கும் தகாதவர்கள்:—"வாந்தி செய்து கொண்டிருப்பவர்" என்பதற்கு முன்னால் குறிப்பிட்டுள்ள பிணியாளிகளும்,[4] ஆமஜ்வரத்தினால் வருந்துபவரும் பெரும்பாலும் "ஆமபாக விதி" வரையிலுமுள்ள சிகித்ஸைகளுக்கு விலக்கானவர்களாம்[5]; அஜீர்ண வியாதியுள்ளவரோ எல்லாச் சிகித்ஸைகளுக்குமே விலக்கானவராவர்.[6]—7.

விரேசநத்திற்கு ஏற்ற பிணியாளிகள்:—விரேசந சிகித்ஸையினால் ஸ்வஸ்தம் செய்யக்கூடிய பிணிகளாவன:—குன்மம், அர்சஸ், கொப்புளங்கள், வியங்கம் என்னும் வங்கு, காமாலை, நாட்பட்ட ஜ்வரம், உதரரோகங்கள், கிருத்ரிம விஷப்பற்று, வாந்தியாதல், ப்லீஹரோகம், ஹலீமகம் என்னும் முதிர்ச்சியடைந்த காமாலை, வித்ரதி, திமிரம் என்கிற கண்நோய், காசம் என்னும் கண்ணில் பூவிழுதல், கண்ணில் நீர்ப்பெருக்கு, பக்வாசயத்தில் வலி, யோநியையும் சுக்லமுண்டாகும் மர்மஸ்தலங்களையும் பற்றிய வியாதிகள், குடலிலுண்டாகும் கிருமிகள், விரணங்கள், மேற்கிளம்பி வரும் வாதரக்த வியாதி, மூத்திரம் அடைபடுதல், மலச்சிக்கல் ஆகிய இவையும், வமநசிகித்ஸைக்குத் தகுந்தவையென்று கூறப்பட்டுள்ள குஷ்டம்-மேஹம் முதலான[7] வியாதிகளுமாகும். 8—9¼.

விரேசநத்திற்குத் தகாதவர்கள்:—நவஜ்வரரோகியும், அக்னிமாந்தியமுள்ளவனும், கீழ் நோக்கிய இரக்தபித்த விகாரமுடை

1. வமநம்—வாந்தியாவது; விரேசநம்—குதமார்க்கத்தினால் மலத்தை வெளிப்படுத்தல்; இவற்றிற்கு வேண்டிய சிகித்ஸா கிரமங்களைக் கூறும் அத்தியாயம்.

2. 'ஸம்யோகம்' என்பதால் ஸம்ஸர்க்க ஸந்நிபாதங்கள் கூறப்பட்டன. கபம் சேர்ந்த இரண்டு தோஷங்களோ மூன்று தோஷங்களோ விருத்தியாயிருந்தால், அவற்றன் கபம் மற்றதைவிட அதிகமாக விருத்தியாயிருக்கும் நிலைமையில் வமநம் ஏற்றதாம்.

3. இங்கு 'அவ்விதமே' யென்றதால்—பித்தக்கோளாறிலும், பித்தம் அதிகரித்த ஸம்யோகதோஷங்களிலும் விரேசநம் செய்விக்கவேண்டும் என்று கருத்து.

4. நவஜ்ரம்—ஆரம்பஜ்வரம்; அல்லது ஆமஜ்வரம் என்றும் கூறலாம்; ஜ்வரம் உண்டானது முதல் ஏழுநாள்வரையில் அது நவஜ்வரம் என்று வியவஹரிக்கப்படும்.

5. 'ருக்ஷதேஹமுள்ளவன்' என்றதால், ஸ்நேஹ சிகித்ஸையைச் செய்து கொள்ளாதவன எனப் பொருள்.



1. ஸாதாரண விஷம்—ஸர்ப்பவிஷம் முதலியது.

2. கிருத்ரிமவிஷம்—இதுவே கரவிஷம் என்றும் கூறப்படும். 46-ம் பக்கம் மூலத்தையும் டிப்பணியையும் பார்க்க.

3. விருத்தாஹாரம்—89, 90, 91-ம் பக்கங்களில் விவரம் பார்க்க.

4. இதனால் "வமந சிகித்ஸைக்குத் தகாதவர்கள்." என்னும் தலைப்பில் குறிப்பிட்டுள்ள கர்ப்பிணி முதல், துர்ப்பலர் வரையிலுமுள்ள பிணியாளிகள் குறிக்கப்படுகின்றனர்.

5. 'ஆமபாகம் வரையிலும்' என்பதால் ஸ்நேஹம், ஸ்வேதம், வமந-விரேசநங்கள், வஸ்தி, நஸ்யம், ஆமபாகம் என்பவை குறிப்பிடப்படுகின்றன.

6. "எல்லாச் சிகித்ஸைகளும்" என்பதால், ஆச்யோதந-கண்டூஷாதிவிதி, தர்ப்பணவிதி முதலியவைகளும் குறிக்கப்படுகின்றன.

7. "குஷ்டம்-மேஹம் முதலான" என்பதால் முன்பு 2-வது பத்தியத்தின் மொழிபெயர்ப்பில் கூறியுள்ள பிணியாளிகள் கிரஹிக்கப்படுகின்றனர்.

யவனும், குதத்தில் அடிபுண்டவனும், அதிஸார ரோகியும், மேஹத்தில் உட்புகுந்த சல்யத்துடன் கூடியவனும், ஆஸ்தாபனவஸ்தி செய்து கொண்டவனும், [1] க்ரூரகோஷ்டமுள்ளவனும், அதிக ஸ்நிக்தமாக இருப்பவனும், க்ஷயரோகியும் விரேசக சிகித்ஸைக்குத் தகாதவர்கள்.—10, 11.

**வமனௌஷதத்தை உபயோகிக்கும் க்ரமம்:**—அப்பால் ஸாதாரண காலத்தில், [2] முறை தவறாமல் ஸ்நேஹசிகித்ஸையையும் ஸ்வேதசிகித்ஸையையும் செய்துகொண்டு, மறு நாள் வமந சிகித்ஸை செய்துகொள்வதற்குப் பிணியாளி ஸித்தமாயிருக்கையில், மத்ஸியம், உளுந்து எள் முதலியவற்றால் கபத்தைக் கிளறிவிட்டு, இரவில் நன்றாக நித்திரை செய்து, உணவு நன்கு ஜீர்ணமான பின்பு, காலையில் மங்களகரமான கிருத்யங்களைச் செய்துவைத்து, ஆஹாரமுட்கொள்ளாமல் இருக்கையில்—அல்லது பேயா என்னும் உணவோடு கிருதத்தைப் பானம் செய்து, சிறிது ஸ்நிக்த நிலைமையடைந்த பிறகு—வமனசிகித்ஸையைச் செய்யலாம்; ஆனால் வயது முதிர்ந்தவர்கள், பாலர்கள், துர்ப்பலர்கள், கடுபீலகர்கள், பயந்தவர்கள் இவர்களுக்கு ரோகங்களின் நிலைமைகளை அநுஸரித்து மது, பால், கருப்பஞ்சாறு, மாம்ஸரஸம் இவற்றை வேண்டியவளவு தொண்டைவரையில் பருகச்செய்வது நலம். அல்லது ரோகங்களின் தன்மைகளுக்கேற்றவாறு பக்குவம் செய்யப்பட்டதும், தேன் இந்துப்பு இவற்றுடன் கூடியதுமான ஔஷதத்தைக் கு—லின் ஸுபாவங்களைப் பகுத்தறிவுடன் கவனித்து அளவுப்படி அடியில் கூறப்படும் மந்திரங்களாலுபயோகிக்கவேண்டும். 12—15.

**வமனௌஷதம் பிரயோகிப்பதற்கான மந்திரம்:**—"பிரம்மதேவன், தக்ஷப்பிரஜாபதி, அச்வினிதேவர்கள், சிவபெருமான், இந்திரன், பூதேவி, சந்திரன், சூர்யன், வாயுதேவதை, அக்னிதேவதை, முனிவர்கள், இரளான ஓஷதிகள், பூதகணங்கள் இவர்கள் யாவரும் உம்மைக் காத்தருள்வாராக. இருஷிகளுக்கு இரஸாயனம்போலவும், தேவர்களுக்கு அமுதம்போலவும், உத்தமஜாதிகளான நாகங்களுக்கு ஸுதையென்னும் திவ்யான்னம் போலவும் உமக்கும் இவ்வௌஷதம் உபயோகமாகுக.[3]" என்று பிரார்த்தித்து, "ஓம் நமோ பகவதே பைஷஜ்ய குரவே வைதூர்யப்ரபாராஜாய ததாகதாய அர்ஹதே ஸம்யக் ஸம்புத்தாய; ஓம் பைஷஜ்யே பைஷஜ்யே மஹாபைஷஜ்யே ஸமுத்கதே ஸ்வாஹா" என்கிற மந்திரத்தை

1. ஆஸ்தாபகவஸ்தி—இதற்கே நிரூஹவஸ்தியென்று பெயர்.
2. ஸாதாரணகாலம்—ஸாதாரணருதுக்கள், 168-ம் பக்கமும் பார்க்க.
3. அஷ்டாங்க ஹ்ருதயத்திற்கு ஆசிரியரான வாக்படாசார்யர் பௌத்தராயிருந்தும், பிரம்மா-சிவன் முதலானதேவதைகளை இங்கு கொண்டாடுவதற்குக் காரணம், வைத்திய சாஸ்திரத்தை உலகத்தில் வியாபிக்கச் செய்வதில் அத்தேவர்கள் ஆசார்யர்களாயிருந்தனர் என்பதேயாம். ஆனால் அடுத்துவரும் முக்கியமான மந்திரம் மட்டும் புத்த தேவனைக் குறித்ததே.



யும் ஓதிக்கொண்டே, கிழக்கு முகமாயிருந்தவாறு ஔஷதத்தைப் பருகச்செய்யவேண்டும்.—16, 17.

**வமநம் செய்யும் முறை:**—(1) பிணியாளி முழங்காலுயரமுள்ள ஆஸனத்தில் உட்கார்ந்துகொண்டு, உட்கொள்ளப்பட்ட ஔஷதத்திலேயே மனதைச் செலுத்தி, முகூர்த்தநேரம் அதனால் வாந்தியாகப் போகிறதென்று ஆவலுடன் எதிர்பார்த்தவண்ணம் இருக்கவேண்டும். அடுத்தாற்போல் இருதயம் படபடத்துத் துடிக்க, வாயில் உமிழ்நீர் கசிய, வாந்தி செய்யவேண்டும். (2) வாந்தி சரியாக வராவிட்டால், இரண்டு விரல்களையாவது, மிருதுவான கொடி முதலியவற்றையாவது, குரல்வளையையும் உட்புறத்தவடைகளையும் தாக்கித் தொந்தரவுசெய்யாமல் தொண்டையினுள் பிரவேசிப்பித்து, தானே வெளிப்படாத வமநவேகங்களை வெளிப்படுத்துக; வெளிவரும் வேகங்களையும் தடுக்காமல் வெளிவரச் செய்யவேண்டும்.—18, 19½.

**வாந்தியாகும்போது செய்யுமுபசாரம்:**—பிணியாளி வமநம் செய்யும்போது அவனுடைய நெற்றிக்கட்டின் இரண்டு பாரிசங்களையும் கெட்டியாகப் பிடித்துக்கொள்ளவேண்டும்; மேலும் வாந்தியாகும் நேருக்கு எதிர்முகமாய் நாபியிலும் முதுகிலும் அழுத்தித் தடவவேண்டும்.—20½.

**தோஷங்களுக்கேற்ற வமனௌஷதங்களும் வமநத்தின் அளவும்:**- (1) கபரோகத்தில் தீக்ஷ்ணமும் கடுரஸமும் உஷ்ண வீர்யமுமுள்ள ஔஷதங்களாலும், (2) பித்தத்தில் மதுரமும் சீதவீர்யமுமுள்ள வஸ்துக்களாலும், (3) வாததோஷத்துடன் கூடிய கபரோகத்தில் ஸ்நிக்தமும் அம்லரஸமுமான சரக்குகளாலும் வமநம் செய்விக்கவேண்டும். வெளிவரும் வமநத்தில் பித்தம் தோன்றும் வரையிலுமாவது [1], கபம் முற்றிலும் பற்றற வெளியாய்விடும் வரையிலுமாவது வாந்தி செய்வது முறை.—21, 22.

**வமநத்தின் ஹீநயோகமும் அதில் செய்யவேண்டியஉபாயமும்:**—வாந்தியானது வேண்டியவளவு ஆகாமற் போனால் அதற்கு "ஹீந யோகம்" எனப் பெயர். அத்தகைய பிணியாளிக்கு திப்பிலி, நெல்லிக்காய், வெண்கடுகு, உப்பு, ஜலம் இவற்றைப் பிரயோகித்து அடிக்கடி வமநம் செய்விக்கவேண்டும்.—22½.

**வமநத்திற்கு அயோகமும் அதன் குறிகளும்:**—வமநவேகங்கள் உண்டாகாமற்போவதும், வமநத்தில் வரவேண்டிய அழுக்குகளில் சில பாகம் தடைப்பட்டு வெளிவருவதும், தோஷங்களின்றியே உட்கொண்ட ஔஷதம் மாத்திரம் வெளியாவதும் வமநத்திற்கு

1. கபாசயத்திற்குக் கீழே பித்தாசயம் இருப்பதால், வமநத்தில் கபம் முற்றிலும் வெளியான பிறகே பித்தம் தோன்றும்; ஆகவே கபம் முற்றிலும் வெளியானதற்கு பித்தம் சிறிது வாந்தியில் தோன்றுவது முக்கியமான அறிகுறியாகும். வாததோஷத்தில் வமநம்செய்யக்கூடாதாகையால், கபம், பித்தம், வாத கபம் இவைகளிற்கு மாத்திரம் இச்சிகித்ஸை கூறப்பட்டது.

"அயோகம்"[1] எனப்படும். அதனால் உமிழ்நீர் அதிகமாகச் சுரத்தல், சொறி, கோடம் என்னும் தடிப்புகள், ஜ்வரம் முதலியவை ஸம்பவிக்கும்.—23, 24.

வமனத்திற்கு ஸம்யக்யோகமும் அதன் குறிகளும் :—வமனம் நன்றாக நிறைவேறுமானால் அது "ஸம்யக்யோகம்" எனப்படும். இதில் கபம், பித்தம், வாயு என்னும் தோஷங்கள் முறையே ஒன்றன்பின் ஒன்றாக ஒருவித தடையுமில்லாமல் வெளியாய் வரும்.—24½.

வமனத்திற்கு அதியோகமும் அதன் குறிகளும்:—வமனம் மிதமிஞ்சி ஆகுமானால், அது வமனத்திற்கு "அதியோகம்" ஆகும். அப்பொழுது வமனத்தில் வரும் தோஷம் நுரைத்தும், சந்திரகங்கள் எனப்படும் மண்டலாகாரமான பற்பல நிறமுள்ள ரேகைகளுடையதாகவும், இரத்தத்துடன் கூடியதாகவும் இருக்கும்.—25, 26.

வமனம் நிறைவேறிய பிறகு செய்யவேண்டிய உபசார முறை:—ஸம்யக்யோக முறைப்படி வமனம் செய்விக்கப் பட்டவனை க்ஷண நேரம் ஆச்வாஸகம் செய்துவைத்து, மூன்றுவிதமான தூமங்களுள்[2] ஒன்றை உட்கொள்ளச் செய்து, பிறகு ஸ்நேஹ சிகித்ஸைக்கான உபசாரங்களை[3] அவனுக்குச் செய்விக்கவேண்டும். அப்பால் அந்தி நேரத்திலாவது, காலையிலாவது பசி உத்தேகமாயிருக்கையில் இளஞ்சூடான ஜலத்தினால் ஸ்நானம் செய்து, சிவப்புச்சம்பாவினாலான அன்னத்தைப் புசித்து, பேயா முதலிய திரவான்னங்களையும் கிரமமாக உபயோகித்துவரலாம்.—27, 28.

சுத்தியடைந்தவர்களுக்கான உணவுவகைகள் :—பிரதான சுத்தி, மத்திமசுத்தி, ஹீநசுத்தி என்று மேற்கூறப்படப்போகிற[4] லக்ஷணங்களின்படி சுத்தியடைந்தவன் பேயா, விலேபி, பக்குவம் செய்யப் படாத யூஷம், பக்குவம் செய்யப்பட்ட யூஷம், மாம்ஸரஸம் இவற்றை அந்தந்த நிலைமைக்கு ஏற்றவாறு முறையே மூன்று வேளையும், இரண்டு வேளையும், ஒரு வேளையும் உபயோகிக்கவேண்டும்.[5]—29.

1. அயோகம்—சிகித்ஸை நன்கு நிறைவேறாமை.
2. மூன்றுவிதமான தூமங்கள்—ஸ்நிக்த தூமம், மத்யம தூமம், தீக்ஷ்ண தூமம் என்பவையாம். இவற்றைப்பற்றிய விவரங்களை தூமபானவிதி அத்தியாயத்திற் காண்க.
3. ஸ்நேஹ சிகித்ஸையில் உபசாரம்—இதைப்பற்றி 16-ஆம் அத்தியாயம் 24—27½ பத்தியங்களின் மொழி பெயர்ப்புகளைப் பார்க்க.
4. பிரதான, மத்திம, ஹீநசுத்திகளைப் பற்றிய விவரங்கள் அடுத்தாற்போல் 31-வது பத்தியத்தின் மொழி பெயர்ப்பில் கூறப்படுகின்றன.
5. பிரதான சுத்தியின்படி சுத்தமானவன் மூன்று வேளையும், மத்திம சுத்தியின்படி சுத்தமானவன் இரண்டு வேளையும், ஹீநசுத்தியின்படி சுத்தமானவன் ஒரு வேளையும் கிரமமாக ஐந்து விதமான பேயா முதலியவற்றை உபயோகிக்க வேண்டும். அதாவது:—தினத்திற்கு இரண்டு வேளை ஆஹாரமே சாஸ்திரத்தினால் ஒப்புக்கொள்ளப்பட்டது. (1) பிரதான சுத்தி



பேயா முதலிய இலகுவான உணவுகளின் உபயோகம் :—மிகவும் ஸூக்ஷ்மமான நெருப்பானது உலர்ந்த சிறிய புற்களாலும், உலர்ந்த சாணங்களாலும், மற்றும் விறகு முதலியவற்றாலும் தூண்டப்பட்டு விருத்தியாய் பெரியதாகவும், நிலைநின்று ஜ்வாலை விட்டு எரியக்கூடியதாகவும், பிறகு எல்லாப் பொருட்களையும் எரித்துவிடத் தகுந்தவாறு அவ்வளவு மஹத்தாகவும் கிரமமாகப் பெரிதாவது போலவே, வமநாதிகளால் சுத்தியான மனிதனுடைய மந்த நிலைமையிலுள்ள ஜாடராக்னியும் பேயா முதலிய உணவுவகைகளால் கிரமமாகப் பெரிதும் விருத்தியாய், ஸ்திரப்பட்டு, அப்பால் எவ்வித உணவையும் ஜீர்ணம் செய்யக்கூடியவாறு அவ்வளவு விசேஷமான பலத்தைப் பெற்றுவிடும்.—30.

வமந-விரேசநங்களில் உத்தம மத்திம-ஹீநயோகங்கள். — வமந சிகித்ஸையில் நான்கு முறை வாந்தியானால் அது 'ஹீநவேகம்' என்றும், ஆறு முறை வாந்தியானால் அது 'மத்திமவேகம்' என்றும், எட்டு முறை வாந்தியானால் 'உத்தமவேகம்' என்றும் கருதப்படும். விரேசநத்தில் பத்துமுறை மலங்கழிந்தால் 'ஹீநவேகம்' என்றும்,

முறைப்படி சுத்தமானவன் முதல் நாள் மாலையில் ஒரு வேளை "பேயா" என்னும் உணவை உபயோகிக்க வேண்டும். (2) இரண்டாவது தினத்திலும் இரண்டு வேளை அதையே உட்கொள்க; ஆக மூன்று வேளை பேயா உட்கொள்ளலாம். பிறகு மூன்றாவது நாள் "விலேபியை" இரண்டுவேளையும் உபயோகிக்க வேண்டும்; நான்காவது நாள் காலையில் ஒரு வேளையும் அதையே உட்கொள்ள வேண்டும்; ஆக இவ்வாறு "விலேபி" மூன்றுவேளை உபயோகிக்கப்படுகிறது. (3) நான்காவது தினத்தில் மாலையில் ஒரு வேளை பக்குவம் செய்யப்படாத யூஷத்தை உட்கொள்ளவும்; ஐந்தாவது தினம் இரண்டு வேளையிலும் அதேவிதமான யூஷத்தைப் பருகவேண்டும்; ஆக பக்குவம் செய்யப்படாத யூஷம் மூன்று வேளை உபயோகிக்கப்பட்டதாகிறது. (4) ஆறாவது நாள் இரண்டு வேளை பக்குவம் செய்யப்பட்ட யூஷத்தை உபயோகிக்க; ஏழாவது தினம் காலையிலும் அதையே உட்கொள்க; ஆகப் பக்குவமான யூஷம் மூன்று வேளை உபயோகிக்கப் பட்டது. (5) மாம்ஸரஸத்தை ஏழாவது நாள் மாலையிலும், எட்டாவது நாள் காலை-மாலை இரண்டு வேளைகளிலும் உபயோகிக்கவேண்டும்; இவ்வாறு மாம்ஸரஸமும் மூன்றுவேளை உபயோகிக்கப்பட்டதாகிறது. பிரதானசுத்திமுறைப்படி சுத்தியடைந்தவனுக்கு பேயாமுதலியவைகளைத் தனித்தனியே மூன்று வேளை கொடுக்கும் வகை இவ்வாறு விவரிக்கப்பட்டது. மத்தியசுத்தி முறைப்படி சுத்தமானவன் அதே கிரமமாக பேயா முதலிய ஐந்துவிதமான ஆஹாரங்களையும் இரண்டு இரண்டு வேளைவீதம் எடுத்துவரவேண்டும். ஹீநசுத்தி முறைப்படி சுத்தமானவன் பேயாதிகளை ஒவ்வொரு வேளையும் உபயோகிக்கவேண்டும். [பேயா, விலேபீ இவ்விரண்டையும்பற்றிய விவரங்களை 62 வது பக்கத்தில் டிப்பணியில் பார்க்க. அரிசி முதலிய இவைகளையெடுத்து, பதினாறு பங்கு ஜலத்தில் சேர்த்து பக்குவம் செய்து,குழம்புபோல் வந்தபிறகு எடுத்துக்கொள்ளவும்; இவ்வாறு தயாரான கஞ்சி "யூஷம்" எனப்படும். இந்த யூஷத்திலேயே சுக்கு முதலியவைகளைப் பொடித்துச் சேர்த்து பக்குவம் செய்தால் அது பக்வ யூஷம் அல்லது ஸம்ஸ்கிருத யூஷம் எனப்படும்.]

இருபது முறையானல் 'மத்திமவேகம்' என்றும், முப்பது முறையானல் 'உத்தமவேகம்' என்றும் கருதப்படும். மேலும் வமநத்தில் வெளிவரும் தோஷம் ஒரு ப்ரஸ்தம் கொண்டதானல்[1] அது 'ஹீநயோகம்' என்றும், இரண்டு ப்ரஸ்தமானல் 'மத்திமயோகம்' என்றும், நான்கு ப்ரஸ்தமானல் 'உத்தமயோகம்' என்றும் கூறப்படும். விரேகத்தின் அளவுகளிலும் இவையே முறை.—31.

வமந-விரேசநங்களின் அளவுகளைப்பற்றிய விசேஷ விதிகள். — (1) வமந சிகித்ஸையைச் செய்துவருகையில் பித்தம் எப்பொழுது வெளியாகிறதோ, அதையே வமநத்திற்கு முடிவான அளவாகக் கூறுவர்; மேலும் அளவிலும் விரேசநத்தில் வெளியாகும் தோஷத்திலும் வமநத்தில் வெளிவருவது அரைப் பங்குதான் இருக்கவேண்டும்.[2] விரேகத்திலோ கபம் வெளியாவதே அதன் முடிவான அளவைத் தெரிவிப்பதாகும். (3) விரேகத்தில் மலத்துடன் கூடிய முதலாவதான இரண்டு மூன்று வேகங்களை விலக்கி, அதற்குமேல் உண்டாகும் வேகங்களையே எண்ணவேண்டும். வமநத்திலோ, வாந்தியாவதற்காக உட்கொண்ட ஔஷதம் முற்றிலும் வெளியாகும் வரையில் வேகங்களை எண்ணுமல், அதற்குப் பிறகு வெளியாகும் வேகம் முதற்கொண்டே எண்ணவேண்டும்.—32.

வமநத்தின்பின் விரேகம் செய்யவேண்டிய முறை:—அப்பால் முறைப்படி இவ்வாறு நன்கு வாந்தி செய்விக்கவனுக்கு, மறுபடியும் ஸ்நேஹசிகித்ஸை-ஸ்வேதசிகித்ஸைகளால் ஸம்ஸ்காரம் செய்து வைத்து, கபம் விருத்தியாவதற்கு அநுகூலமான காலம் கழிந்துவிட்டதும், பிணியாளியின் குடலுக்குள்ள சக்தியைப் பரீக்ஷித்து யுக்தப்படி நன்றாக விரேக சிகித்ஸையைச் செய்ய வேண்டும்.—33.

இரண்டுவித கோஷ்டங்கள் :—(1) பித்தம் அதிகரித்திருந்தால் அது ம்ருது கோஷ்டம் எனப்படும்; அவ்வித குடலுள்ளவர் பாலைப் பருகினலும் விரேசநம் எளிதில் ஆய்விடும். (2) வாயு குடலில் அதிகரித்திருந்தால் அது க்ரூரகோஷ்டம் என்று சொல்லப்படும்; சிவதைவேர் முதலானவைகளாலும் அவர்களுக்கு விரேசநம் ஆவது வெகு கஷ்டம்.—34.

தோஷங்களுக்கேற்ற விரேசந வஸ்துக்கள்:—(1) பித்த ஸம்பந்தமான வியாதியில் துவர்ப்பும் இனிப்பும் உள்ள வஸ்துக்களாலும், (2) கபரோகத்தில் கடுரஸமுள்ளவைகளாலும், (3) வாத ரோகத்தில் ஸ்நிக்தமும் உஷ்ண வீர்யமும் இவண ரஸமும் அடங்கிய பதார்த்தங்களாலும் விரேசநம் செய்விக்க வேண்டும்.—34½.

---

1. ப்ரஸ்தம்—பொதுவாகப் பதினறு பலங்கொண்ட ஓர் அளவு. [ஆனல் வமந-விரேகாதிகளில் பதின் மூன்றரை பலங் கொண்டது ஒரு ப்ரஸ்தம்.]

2. இங்கு முதலிற் கூறியது வேக எண்ணிக்கையையும், இரண்டாவது கூறியது வெளியாகும் தோஷங்களின் அளவையும் முறையே குறிப்பிடுகின்றன.



ஔஷத ப்ரயோகித்தும் விரேசநம் ஆகாவிட்டால் செய்யு முபாயம்:—(1) விரேசநத்திற்காக ஔஷதங்களை உபயோகித்தும் விரேசநம் ஆகாமற்போனல், வெந்நீரை உட்கொள்ளச் செய்யவேண்டும்; கையில் சூட்டை யுண்டாக்கி, அச்சூட்டுடன்கூடிய கையினல் வயிற்றின்மேல் ஒற்றடம் கொடுக்கவும். (2) விரேசநத்திற்காக ஔஷதப் ப்ரயோகம் செய்த தினத்தில், விரேசநம் சொற்பமாக ஆனல், அன்றையதினம் உணவைப் புசித்து, மறு நாள் மீண்டும் விரேசநத்திற்காக ஔஷதமுட்கொள்ள வேண்டும்.—35, 36.

கோஷ்டம் நன்கு ஸ்நிக்தமாகாத நிலைமையில் செய்யவேண்டிய சிகித்ஸை:—குடல் நன்றாக ஸ்நிக்தமாகாத பிணியாளி, ஸ்வேதங்களாலும், ஸ்நேஹங்களாலும் தேஹத்திற்கு ஸம்ஸ்காரஞ்செய்து கொண்டு, பத்து நாட்கள் கழித்து, முன்னல் கூறப்பட்டுள்ள க்ரமத்தை அநுஸரித்து[1] நன்கு ஆலோசனை செய்து முறைப்படி தயார் செய்த விரேக ஔஷதத்தை உட்கொள்ள வேண்டும்.—37.

விரேகத்தின் அயோகக் குறிகள்[2]:—மார்பினுள்ளும் வயிற்றினுள்ளும் நன்கு சுத்தியாகாத உணர்ச்சி, அரோசகம், கபம், பித்தம் இவை கிளர்ச்சி யடைதல், அரிப்பு, அழற்சி, கட்டிகள், பீநஸம், வயிற்றில் வாயுவும் மலமும் கட்டிப்போதல் ஆகியவை விரேகம் நன்றாக நிறைவேருததன் அறிகுறிகளாம்.—38, 38½.

விரேசநத்தின் ஸம்யக்யோக லக்ஷணங்கள்[3] :— முற்கூறிய அயோக லக்ஷணங்களுக்கு நேர் எதிரிடையான குறிகள் தோன்றினல் அவை விரேசநம் நன்கு நிறைவேறியதன் லக்ஷணங்களாகும்.—39.

விரேசநத்தின் அதியோகக் குறிகள்[4]:—முதலில் மலமும், அதன் பின் பித்தமும், அதன் பிறகு வாயுவும் க்ரமமாக வெளியான பின்பு, கப-பித்தங்களுடைய ஸம்பந்தமில்லாத ஜலம் போன்ற நீர்ப்பொருள் வெளியாகும்; அந்தத் த்ரவம் வெளுப்பாகவோ, கறுப்பாகவோ, செந்நிறமாகவோ, இறைச்சி கழுவிய நீருக்குச்சமமானதாகவோ, கொழுப்பின் கட்டிகளைப்போலவோ காணப்படும்; பிறகு குடல் வெளியில் தள்ளப்படும்; நாவரட்சியும், தலைச்சுற்றலும் காணும்; கண் ஆழத்தில் விழும்; இவை மிதமிஞ்சிய விரேகக் குறிகளாம்; மேலும் அதிவமநத்திற்குண்டாவதாகக் கூறப்பட்டுள்ள குறிகள் இதிலும் ஸம்பவிக்கும். 40—41½.

---

1. 183-ம் பக்கத்தில் "விரேசநத்திற்கு ஏற்ற பிணியாளிகள்" என்பது முதலாக, 185-ம் பக்கம் வரையிலும் கூறப்பட்டுள்ள வமந சிகித்ஸைக்குக் குறிப்பிட்டுள்ள நியமங்கள்.

2. அயோகம்—சிகித்ஸை நன்கு நிறைவேருமை; இதுவே ஹீநயோகம் எனப்படும்.

3. ஸம்யக்யோகம்—நன்கு முறைப்படி சிகித்ஸை நிறைவேறுதல்.

4. அதியோகம்—அளவு மீறிய சிகித்ஸை.

**விரேசநம் நிறைவேறிய பின்பு செய்யும் உபசாரம்:**—விரேசப் முறைப்படி நிறைவேறிய பிணியாளிக்கு வமநசிகித்ஸைக்குக் கூறியுள்ள உபசாரங்களையும் பத்தியக் கிரமங்களையும் செய்விக்க வேண்டும்; ஆனால் தூமபாநம் மாத்திரம் விலக்கத்தக்கதாகும். பிறகு, வமந சிகித்ஸையில் செய்வது போலவே, கிரமமாக பத்தியமான உணவுகளைப் புஜித்து, அப்பால் எப்பொழுதும் வழக்கமாயுள்ள ஆஹாரத்தை உட்கொள்ளவேண்டும்.—42, 43.

**விரேகத்தில் லங்கநமும் அதன் உபயோகமும்:**—விரேகத்திற்கு ஔஷதம் உட்கொண்ட பிறகு ஜாடராக்னி மந்தப்பட்டவனுக்கும், நன்கு சோதநசிகித்ஸை நிறைவேறாதவனுக்கும், இளைப்பு உண்டாகாதவனுக்கும், வாதாதிதோஷங்களால் பலஹீநமடைந்தவனுக்கும், உணவு ஜீர்ணமாவதற்கான குறிகள் உண்டாகாதவனுக்கும் லங்கநம் செய்விக்கவேண்டும். இவ்விதம் செய்வதால் ஸ்நேஹம் ஸ்வேதம், விரேகௌஷதம் இவற்றின் பிரயோகத்தினால் தோஷக் கிளர்ச்சியின் ஸம்பந்தமான கெடுதிகள் ஸம்பவிப்பதில்லை.—44, 44½

**சோதநாதிசிகித்ஸைகளுக்குப் பிறகு பேயாதிகளின் உபயோகம்:**—வமந-விரேசநங்கள் என்னும் சோதநசிகித்ஸைகளாலும் இரத்தமோக்ஷணத்தினாலும், ஸ்நேஹப் பிரயோகத்தினாலும், லங்கநசிகித்ஸையினாலும் ஜாடராக்னி மந்தப்படும்; ஆகையால் பேயா முதலிய இலகுவான ஆஹாரங்களை[1] உபயோகித்துவர வேண்டும்.—45½.

**விரேகத்தில் தர்ப்பணாதி கிரமத்திற்கு ஏற்றவர்கள்:**—பித்தமும் கபமும் சொற்பமாய் வெளியாயிருப்பவனுக்கும், மத்யபாநம் செய்பவனுக்கும், வாத-பித்தங்கள் அதிகரித்திருப்பவனுக்கும் பேயாதிகளை உட்கொள்ளக் கொடுக்கக்கூடாது; அவர்களுக்குத் தர்ப்பணம் முதலிய ஆஹாரக்கிரமம்[2] ஹிதமாயிருக்கும்.—46½.

**வமந-விரேசநங்களில் ஔஷதம் குடலில் பக்குவமாவதை எதிர்பார்த்தல்:**—உட்கொள்ளப்பட்ட வமநௌஷதமானது குடலில் சென்று பக்குவமாகாமலே தோஷங்களை வெளிப்படுத்தும், விரேசநௌஷதமோ குடலில் பக்குவமாய்க் கொண்டே தோஷங்களை வெளிப்படுத்தும்; ஆகையால் வமநௌஷதம் உட்கொண்ட பிறகு, அது பக்குவமாகவேண்டுமென்பதை எதிர்பார்க்கக் கூடாது.—47½.

---

1. பேயா, விலேபீ, பக்வமான யூஷம், அபக்வமான யூஷம், மாம்ஸரஸம் முதலியவை முன்னால் வமநப்பிரகரணத்தில் கூறப்பட்டவையே இங்குக் குறிக்கப்படுகின்றன.

2. முதல் ஆஹார வேளையில் நெற்பொரியாலாகிய கஞ்சி, இரண்டாவது ஆஹார வேளையில் மாம்ஸரஸம் என்கிற முறையில் செய்யப்படும் உபசாரக்கிரமம் இங்கு குறிப்பிடப்படுகிறது.



**துர்ப்பலனுக்கும் தோஷம் அதிகரித்தவனுக்கும் செய்யக்கூடிய விரேசந சிகித்ஸை:**—எவனொருவன் பலஹீநனாயும், தோஷங்கள் அதிகரித்தவனாயும் இருந்து, ஆகவே தோஷங்கள் பக்குவமாவதால் தனக்குத் தானே விரேசமாகும் நிலைமையைப் பெறுகிறானோ அவனுக்கு பேதநகுணமுள்ள[1] ஆஹாரங்களாலேயே விரேசநத்தை உண்டுபண்ணி சிகித்ஸை செய்யவேண்டும்.—48½.

**துர்ப்பலன் முதலியவர் விரேகத்திற்காக உபயோகிக்கும் ஔஷதப் பிரமாணம்:**—பலங்குன்றியவனும், முன்னால் சோதந சிகித்ஸை செய்து கொண்டவனும், தோஷம் சொற்பமாயிருப்பவனும், மெலிந்த தேஹமுள்ளவனும், உடல் இவ்விதமானது என்று அறியப்படாதவனும் முதலில் மிருதுவாகவும் அளவில் குறைந்ததாகவுமுள்ள ஔஷதத்தை உட்கொள்ளவேண்டும். விரேசந ஔஷதத்தை அத்தகைய நிலைமையிலிருப்பவர் அடிக்கடி உட்கொள்வதே நலம்; அப்படியின்றி பெரிய அளவுகளில் உபயோகித்தால் அது நன்மையை விளைவித்தாலும் விளைவிக்கும், தீமையை உண்டு பண்ணினும் உண்டுபண்ணும்; அடிக்கடி அற்ப அளவில் உபயோகிக்கும் ஔஷதமே வயற்றில் சேர்ந்துள்ள அதிக தோஷங்களையும் கிளப்பிவிட்டு, சிறுகச் சிறுக அவற்றையெல்லாம் நீக்கியும் விடும்.—49, 50½.

**துர்ப்பலனுக்கு மிருதுத்திரவ்யத்தினால் விரேசநம் செய்வித்தல்:**—தேஹத்தில் பலமில்லாதவனுக்கு அற்பமாகச் சேர்ந்துள்ள தோஷங்களையும் மிருதுவான ஔஷதங்களைப் பிரயோகித்து சமந சிகித்ஸையைக் கொண்டே வெளிப்படுத்திவிடவேண்டும்; அவ்வாறு செய்யாவிட்டால் அத்தோஷங்கள் வெகு காலளவும் கிலேசமுண்டுபண்ணிவரும்; அல்லது தேஹத்திற்குத் தீங்கை யுண்டு பண்ணும்.—51½.

**அக்னிமாந்த்யாதிகள் உள்ளவருக்கு விரேசநம் செய்விக்கு முறை:**—(1) அக்னிமாந்த்யமுள்ளவனுக்கும், க்ரூர கோஷ்டனுக்கும் க்ஷாரமும், இலவணமும் கூட்டி பக்குவம் செய்த க்ருத வகைகளால் அக்னியைத் தூண்டி, கபத்தையும் வாதத்தையும் போக்கி அப்பால் சோதநம் செய்யவேண்டும். (2) ரூக்ஷ தேஹிகளுக்கும், வாத தோஷம் அதிகமாய்ச் சேர்ந்துள்ளவருக்கும், க்ரூர கோஷ்டமுள்ளவருக்கும், அதிக வியாயாமம் செய்பவருக்கும், ஜாடராக்னி அதிகரித்தவருக்கும் உட்கொண்ட ஔஷதம் விரேசநமுண்டு பண்ணாமலே ஜீர்ணமாய்விடும், அவர்களுக்கு முதலில் வஸ்திப்பிரயோகம் செய்து, அதன் பிறகு ஸ்நிக்தமான விரேசகவஸ்துவைக் கொடுக்கவேண்டும்; அல்லது முதலில் தீக்ஷ்ண வீர்யமுள்ள மருக்காரை முதலியவற்றால் செய்த வர்த்திகளை குதத்தினுள் பிரயோகித்து சிறிது மலத்தை வெளிப்படுத்தி, அதன் பிறகாவது விரேச

---

1. பேதநம்—கடினமான மலங்களை உடைத்து வெளிப்படுத்துங்குணம்.

நம் செய்விக்கலாம். ஒருவாறு மலம் சிறிது வெளிவர ஆரம்பித்ததும் அப்பால் ஸ்நிக்த்தமான விரேசந ஔஷதத்தைக் கொடுத்தால், அது எளிதில் மலத்தை வெளிப்படுத்தும். (3) விஷப்பற்றுள்ளவருக்கும், அபிகாதப்பட்டவருக்கும், பிடகைகள் என்னும் கட்டிகள் உண்டானவருக்கும், குஷ்டரோகிக்கும், மனத்துயரமுள்ளவருக்கும், விஸர்ப்பரோகிக்கும், காமாலையென்ன-பாண்டுவென்ன-மேஹரோகமென்ன இவற்றால் வருந்துபவருக்கும் அதிக ஸ்நேஹ சிகித்ஸையைச் செய்யாமலே விரேசசிகித்ஸையை நிறைவேற்ற வேண்டும். 52—56.

**ஸ்நேஹவிரேகமும் ரூக்ஷவிரேகமும் செய்விக்கத் தகுந்தவர்கள்:**—விஷப்பற்றுள்ளவர் முதலிய முற்கூறிய பிணியாளிகளுக்கும், மற்றவருக்கும் ஆக அனைவருக்குமே ஸ்நிக்த்தமான ஔஷதங்களால் விரேகம் செய்விக்கலாம். ஸ்நேஹ சிகித்ஸையினால் முன்னமே ஸம்ஸ்காரம் செய்யப்பட்டவர்களுக்கு ரூக்ஷகுணமுள்ள வஸ்துக்களால் விரேசநம் செய்விக்கவேண்டும்.—56½.

**வமநாதிசிகித்ஸைகளில் இடையிடையே ஸ்நேஹ-ஸ்வேதங்களைச் செய்வது:**—வமநம் முதலிய சிகித்ஸைகளைச் செய்து வருகையில் மீண்டும்அடிக்கடியும் இடையிடையே ஸ்நேஹசிகித்ஸையையும் ஸ்வேத சிகித்ஸையையும் பிரயோகிக்கவேண்டும். வமநாதி சிகித்ஸைகள் நன்கு நிறைவேறிய பிறகு முடிவில் தேஹத்திற்கு வன்மையின்பொருட்டு ஒரு முறை ஸ்நேஹ சிகித்ஸையைச் செய்ய வேண்டும். வஸ்திரத்திற் பற்றியுள்ள அழுக்கை எண்ணெய்ப் பொருட்களாலும், ஸ்வேதமென்னும் ஆவியில் வைப்பதாலும் கசக்கி விலக்குவதுபோலவே, தேஹத்திற் பற்றியுள்ள மலங்களும் ஸ்நேஹ-ஸ்வேதங்களால் கிளப்பப்பட்டு சோதந சிகித்ஸையினால் வெளிப்படுத்தப் படுகின்றன. 57—58½.

**ஸ்நேஹ-ஸ்வேதமின்றி சோதநசிகித்ஸை செய்வதாலான தீங்கு:**—ஸ்நேஹ சிகித்ஸையும் ஸ்வேத சிகித்ஸையும் செய்யாமலே சோதந சிகித்ஸையை யாதொருவன் செய்துகொள்கிறானோ, அவனுடைய தேஹம், இரு முனைகளையும் பிடித்து வளைக்கப்படும் உலர்ந்த கழியைப் போல் எளிதில் விறிந்து விடும்.—59½.

**சோதந சிகித்ஸை நன்கு நிறைவேறியதன் பயன்:**—சோதந சிகித்ஸை நன்கு முறை தவறாது அப்யஸிக்கப்படுமானால், புத்திக்குத் தெளிவும், இந்த்ரியங்களுக்கு வன்மையும், தாதுக்களுக்கு தார்ட்யமும், ஜாடராக்னிக்கு விருத்தியும் உண்டாகும்; வயதும் முதிர்ச்சி பெறாமலிருந்து நீடித்த காலம் ஆரோக்கியமும் விருத்தியடையும்.—60.



# பத்தொன்பதாம் அத்தியாயம்.

## வஸ்தி விதி.

அப்பால் வஸ்தி விதி[1] யென்னும் அத்தியாயம் விவரிக்கப்படுகிறது:—

**வஸ்தியின் மேன்மையும் அதன் மூன்று பேதங்களும்:**—தோஷங்கள் அதிகம் கோளாறடைந்திருக்கையில், அவற்றுள் வாத தோஷம் அதிகமாக மேலோங்கி யிருந்தாலும், அல்லது வாதம் மட்டும் பிரகோபித்திருந்தாலும் வஸ்திசிகித்ஸை செய்யவேண்டுமென்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. எல்லாச் சிகித்ஸைகளிலும் வஸ்தியே உபயோகத்தில் முதன்மையானது. அது "நிரூஹவஸ்தி" என்றும், "அநுவாஸந வஸ்தி" என்றும், "உத்தர வஸ்தி" என்றும் மூன்று விதமானது.—1½.

**நிரூஹவஸ்தியால் நிவ்ருத்திக்கக் கூடிய கோளாறுகள்:**—குன்மம், வயிற்றுப்பொருமல், ஆமவாதம் என்னும் கீல்வாயு, பிளீஹ ரோகம், இரத்தம் சீதம் முதலியவற்றின் கலப்பில்லாத அதிஸாரம், வயிற்றுவலி, நாட்பட்ட ஜ்வரம், பிரதிச்யாயம், சுக்லம் கட்டுப்பட்டுப் போதல், அபாநவாயு தடைப்படுதல், மலச்சிக்கல், குடலிறக்கம், அச்மரியென்னும் மூத்திரத்தில் கல்லடைத்தல், மாதவிடாய் நின்று போதல் என்னும் இரஜோநாசம், தீவ்ரமான வாதரோகங்களையும் நிரூஹவஸ்தியினால் பரிஹரிக்கலாம்.—2, 3.

**நிரூஹ வஸ்திக்குத் தகாதவர்கள்:**—மிகவும் ஸ்நிக்த்தமானவன், உரக்ஷத ரோகி, மிகவும் இளைத்திருப்பவன், ஆமாசயமுள்ளவன், வாந்தி செய்பவன், சோதந சிகித்ஸை செய்து கொண்டவன், நஸ்யம் செய்து கொண்டவன், காஸரோகி, ச்வாஸரோகி, பிரமேஹரோகி, அர்சோரோகி, விக்கலுள்ளவன், பொருமலோடும் மலம் நன்கு வெளிப்படாமலும் துன்பமநுபவிப்பவன், குதம் வீங்கியிருப்பவன், உணவுண்டவன், குதம் அடைப்பட்டவன், குடலில் த்வாரம் விழுந்தவன், ஜலோதரமுள்ளவன், குஷ்டரோகி, மதுமேஹரோகி, ஏழு மாதத்திய கர்ப்பிணி இவர்கள் நிரூஹவஸ்திக்குத் தகாதவர்கள்.—4, 5.

**அநுவாஸந வஸ்திக்குத் தகுந்தவர்கள்:**—ஆஸ்த்தாபந வஸ்திக்குத்[2] தகுந்தவர்களே அநுவாஸநத்திற்கும் ஏற்றவராவர்; விசேஷமாக ஜாடராக்னி அதிகரித்தவர்களும், ரூக்ஷதேஹிகளும், வாத

1. வஸ்தி விதி—வஸ்தியென்றால் மூத்திரப் பைக்குப் பெயர்; மூத்திரப் பையைக் கருவியாக வைத்துச் செய்யப்படும் சிகித்ஸையும் வஸ்தி என்று கூறப்படுகிறது; அதை விவரிக்கும் அத்தியாயம் "வஸ்தி விதி" எனப்படுகிறது.

2. ஆஸ்த்தாபந வஸ்தி—நிரூஹ வஸ்திக்கே மற்றொரு பெயர்; நிரூஹமானது கஷாயவகைகளைக் கொண்டு செய்யப்படுவதால், இதை கஷாய வஸ்தி யென்றும் கூறுவர்.

தோஷத்தினால் மட்டும் பீடிக்கப்படுபவரும் அநுவாஸநவஸ்திக்குத்[1] தகுந்தவர்களாம்.—$6\frac{1}{2}$.

அநுவாஸநத்திற்குத் தகாதவர்கள் :—ஆஸ்தாபந வஸ்திக்குத் தகாதவர் எவரோ அவர்களே அநுவாஸநத்திற்கும் தகாதவர்; மேலும் பாண்டுரோகம், காமாலை, மேஹரோகம், பீநஸம், இலங்கநம், ப்லீஹரோகம், மலக்கழிவு, கோஷ்டம் குருவாயிருத்தல், கபதோஷம் கொளாறு, மஹோதரம், அபிஷ்யந்தம் என்னும் கண்ணோய், தேஹ பருமை, தேஹம் ஸ்தூலித்தல், குடலில் கிருமி சேருதல், ஊருஸ்தம்பம் என்னும் வாயு, எதனாலும் விஷம் உட்கொண்டு விடுதல்,[2] க்ருத்ரிமவிஷப்பற்று,[3] அபசீ என்னும் ருதீத கிரந்தி விரணம், யானைக்கால், களகண்டம் என்னும் கழுத்திலுண்டாகும் நோய் இவற்றுள் எதனாலாவது பீடிக்கப்படுபவர் அநுவாஸநவஸ்திக்கு உரியவரல்லர். $7$—$8\frac{1}{2}$.

நேத்திரத்திற்கு ஏற்ற வஸ்துக்களும் அதன் உருவமும் :—நிரூஹ வஸ்தியும் அநுவாஸந வஸ்தியும் செய்வதற்கான கருவிக்கு அவசியமான நேத்திரத்தைத்[4] பொன் முதலிய தாதுப்பொருட்களாலாவது, மரத்தினாலாவது, எலும்பினாலாவது, மூங்கிலாலாவது செய்யலாம்; பசுவின் வால்போல் அடி பருத்து நுனி சிறுத்து, பக்கங்களில் த்வாரம் இல்லாமலே, மேடுபள்ளமில்லாமல் சமமாகவும், ஒழுங்காகவும், அதன் முனை கூர்மையாயில்லாமல் குளிகையைப் போல் உருண்ட வடிவமாகவும் இருக்க வேண்டும்.—$9\frac{1}{2}$.

வயதுக்குத் தகுந்தவாறு நேத்திரத்தின் பிரமாணங்கள் :—ஒரு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்குப் பிரயோகிக்கப்படும் நேத்திரம் ஐந்து அங்குலம் நீளமாகவும், ஐந்து வயது நிறைந்து ஏழாவது வயது வரையில் ஆறு அங்குலம் நீளமாகவும், ஏழாவது வயது முடியவும் ஏழு அங்குலமும், பன்னிரண்டாவது வயதில் எட்டு அங்குலம் நீளமாகவும், பிறகு பதினாறுவது வயதில் ஒன்பது அங்குலமும், பிறகு இருபது வயதுக்கு மேல் எல்லா வயதினருக்கும் பன்னிரண்டு அங்குல நீளமுமாகத் தயார் செய்யப்படவேண்டும். மேற்கூறிய வயதுகளுக்கு இடையிலுள்ள மற்ற வயதுகளிலும் அவரவருடைய பிராயம், தேஹபலம், சரீரப்பிரக்ருதி இவற்றைப்பார்த்து, அதற்கு ஏற்றவாறு நேத்திரத்தின் அளவை விருத்தி செய்து கொள்ளலாம். அதன் பருமன் அடியில் அவ

1. அநுவாஸந வஸ்தி—ஸ்நேஹ வஸ்துக்களால் செய்யப்படுவதால் அநுவாஸந வஸ்தியை ஸ்நேஹ வஸ்தி யென்றும் கூறுவர்.

2. விஷம் என்பதால் ஸாதாரணமான அலரி, பாஷாணம் முதலிய இயற்கை விஷங்கள் குறிப்பிடப்படுகின்றன.

3. க்ருத்ரிமவிஷம்—செயற்கை விஷம்; இதை காவிஷம் என்றும் கூறுவர்; 88-வது பக்கம் மூலமும் டிப்பணியும் பார்க்க.

4. நேத்திரம்—வஸ்தியென்னும் கருவியில் இணைக்கப்பட்டு, குதத்தில் உட்செலுத்தி, மருந்துகளைப் பீச்சுவதற்கு உபயோகமான குழல்.



ரவருடைய பெருவிரலுக்குச் சமானமாகவும், முனையில் சுண்டு விரலுக்குச் சமானமாகவும் இருக்க வேண்டும். நேத்திரத்தின் அடிப்புறத்து த்வாரம் ஒரு வயது நிரம்பியவருக்கு ஒரு அங்குலம் விசாலமுள்ளதாய் அமைக்கப்பட வேண்டும்; அதன் பிறகு கால் கால் அங்குலமாகப் பெரிதாகச் செய்து கொண்டு வந்து, மூன்று அங்குலத்தோடு[1] நிறுத்திக் கொள்ள வேண்டும். நேத்திரத்தின் முனையிலுள்ள த்வாரமோ முதல் வயதில் பயறு புகும்படியாகவும், ஏழு வயது வரையில் உளுந்து புகும்படியும், பன்னிரண்டாவது வயது வரையில் சிறு கடலை புகும்படியாகவும், பதினாறுவது வயது வரையில் ஜலத்தில் ஊறிய சிறு கடலைப் பிரவேசிக்கும்படியும், இருபது வயதுக்குமேற் பட்டவருக்கு சிறு இலந்தக் கொட்டை நுழையும்படியும் கிரமமாக நிர்மாணம் செய்யப்படவேண்டும். அடிப்புறத்து த்வாரத்திற்குச் சமானமான அளவில் கர்ணிகை யென்னும் வரம்பு ஒன்றை இடையில் அமைக்கவும்; மற்றொரு வரம்பையும் அதனதன் அளவுக்குத் தகுந்தவாறு மற்றொரு புறத்தில் அமைக்க வேண்டும்.[2] இவ்விரண்டு வரம்புகளுக்கும் மத்தியில் இரண்டு அங்குலப் பிரமாணம் இடைவெளியிருக்க வேண்டும். இதன் முனையிலுள்ள த்வாரத்திற்கு ஒரு வர்த்தியினால் மூடியிட வேண்டும். 10—15.

வஸ்தியென்னும் கருவிக்கு உபயோகமான வஸ்துக்கள் :—வெள்ளாடு, செம்மறியாடு, எருமை முதலியவற்றின் வஸ்தியென்னும் மூத்திரப்பை ஒன்று இதற்கு வேண்டும்; அது திடமாகவும் நன்கு மர்த்தனம் செய்யப்பட்டுப் பதனிடப்பட்டதாகவும், கஷாய வஸ்துக்களின் சேர்க்கையால் ஒருவாறு சிவந்தும், குறிப்பிட்ட இடந்தவிர மற்ற இடங்களில் த்வாரமாவது, கிரந்தியாவது, ஸிரைகள் என்னும் நாளங்களாவது இல்லாததாகவும், நாற்றமற்றதாகவும், அதிக பருமனல்லாததாகவும் இருக்கவேண்டும்; மேலும் ஔஷதங்களை எளிதில் நிரப்புவதற்கு ஏற்றதாகவும், நூலால் நன்கு நேத்திரத்துடன் இணைத்துக் கட்டப்பட்டதாகவும் இருக்க வேண்டும். இதற்காக மூத்திரப்பை கிடைக்காவிட்டால் மிருகங்களுடைய குடல் முதலியவற்றிற்குப் போர்வையா யமைந்துள்ள சவ்வு எனப்

1. நேத்திரத்தின் அடி த்வாரம், முதல் வருஷத்தில் ஒரு அங்குலம் விசாலமாகவும், ஏழாவது வயதில் $1\frac{1}{4}$-அங்குலமும், பன்னிரண்டாவது வயதில் $1\frac{1}{2}$-அங்குலமும், பதினாறுவது வயதில் $1\frac{3}{4}$-அங்குலமும், பதினேழாவதில் இரண்டு அங்குலமும், பதினெட்டாவதில் $2\frac{1}{4}$-அங்குலமும், பத்தொன்பதில் $2\frac{1}{2}$-அங்குலமும், இருபதாவது வயதில் $2\frac{3}{4}$-அங்குலமும், இருபதுக்கு மேற்பட்டால் 3-அங்குலமும் இருக்க வேண்டும் என்பது கருத்து.

2. நேத்திரத்தில் கர்ணிகைகள் (வரம்புகள்) இரண்டு ஏற்படுத்துவதற்குக் காரணம் :—நேத்திரத்தின் அடிப்பாகம் வஸ்தியினுள் அளவுக்கு மிஞ்சி நுழையாமலிருப்பதற்கும், நேத்திரத்தின் முனை குதத்தினுள் வேண்டியதைத் தவிர அதிக அளவாகப் பிரவேசிக்காமலிருப்பதற்கும் இரண்டு முனைக்கும் சற்றுத் தூரத்தில் வரம்புகள் அமைக்கப்படுகின்றன.

படும் சர்மத்தையாவது, கனமற்ற வஸ்திரத்தையாவது உபயோகிக்கலாம்.—16, 17.

வயதுக்குத் தகுந்தவாறு நிரூஹத்திரவ்யத்தின் அளவுகள் :— முதல் வயதில் நிரூஹ வஸ்திக்கு வேண்டிய திரவங்களின் அளவு ஒரு பலம் ; ஒரு வயதுக்கு மேல் ஒவ்வொரு வருஷமும் ஒவ்வொரு பலம் வீதம் பன்னிரண்டு பலம் ஆகும் வரையில் விருத்தி செய்து கொண்டு வரவும் ; பன்னிரண்டு வயது முதல் பதினெட்டாவது வயது வரையில் இரண்டு பலம் வீதம் வஸ்திக்கு வேண்டிய திரவ வஸ்துவை கிரமமாக விருத்தி செய்து வரவேண்டும் ; எழுபதாவது வயது வரையில் இதே அளவு தான் உபயோகிக்கப் படவேண்டும் ; அதற்குமேற்பட்ட வயதினருக்கு இருபது பலம் அளவே போதுமானது.—18, 19.

வயதுக்குத் தகுந்தவாறு அநுவாஸநத் திரவ்யத்தின் அளவு :— நிரூஹ வஸ்தியில் அந்தந்த வயதுக்குத் தகுந்தவாறு உபயோகிக்கப்படும் வஸ்துக்களின் அளவில் கால் பாகமே அநுவாஸந வஸ்தியில் பிரயோகிக்கப் படவேண்டும்.—19½.

அநுவாஸநத்திற்கு ஏற்ற நிலைமைகளும் காலங்களும் :—ஆஸ்தாபநவஸ்தி செய்ய வேண்டியவனுக்கு முதலில் ஸ்நேஹசிகித்ஸையும், பிறகு ஸ்வேத சிகித்ஸையும், வமந-விரேக சிகித்ஸைகளும் செய்து வைத்து, மீண்டும் தேஹத்தில் பலம் வந்த பிறகு, அநுவாஸநவஸ்திக்குத் தகுந்த நிலைமையுண்டாயிற்று என்று அறிந்து கொண்டு, நிரூஹவஸ்திக்கு முன்பே அநுவாஸந வஸ்தியைச் செய்யவேண்டும். ஹேமந்தருதுவிலும், சிசிரருதுவிலும், வஸந்தருதுவிலும் அநுவாஸநவஸ்தியைச் செய்யலாம் ; அவற்றிலும் பகல் வேளையில் செய்ய வேண்டும். அவற்றைத் தவிர மற்ற ருதுக்களில் இரவில் செய்யலாம் என்று சிலர். அப்யங்கம் பண்ணி ஸ்நாநம் செய்த பின்பு, இலகுவாகவும் ஸ்நிக்தமல்லாமலும் ரூக்ஷமில்லாததும் ஆகிவை கடித்தமான குணமுள்ளதுமான உணவை, வழக்கமாய் உபயோகிக்கப்படுவதிலும் கால் பங்கு குறைவாகவே திரவரூபமாக அநுபானத்துடன் உட்கொண்டு, இங்குமங்குமாக உலாத்திவந்து, மலமூத்திர விஸர்க்கம் செய்து, இத்தகைய நிலைமைகளைப் பெற்றுள்ள பிணியாளியை, அதிக உயரமல்லாததும், மிக மேலெழுந்த தலையணையுடையாததும், ஸுகம் தரக்கூடியதுமான சயனத்தில் இடதுபுறமாக, வலது காலை மடக்கிக்கொண்டு, இடதுகாலை நீட்டியவாறு படுக்கச்செய்யவேண்டு. 20—23½.

அநுவாஸநம் செய்யும்முறை:—(1) பிறகு குதத்திலும் ஸ்நேஹ வஸ்துவைத் தடவி; நேத்திரத்தின் முனையையும் ஸ்நிக்தமாகச் செய்து, அதை குதத்தினுள் மெதுவாகப் பிரவேசிப்பிக்க வேண்டும்; வஸ்தியென்னும் துருத்தியின் வாயை முகத்தினால் ஊதி விசாலப்படுத்தி இறுகக் கட்டியானதும், கை நடுங்காமலும் முள்ளந்தண்டை நோக்கினாற்போல இதை அழுத்திப் பிழிய வேண்டும்;



அதிக துரிதமாகவும் இல்லாமல், அதிக மெதுவாகவும் இல்லாமல், வின் தர்மதங்களுக்கு இடங் கொடுக்காமல் ஒரே முறையில் அதை அழுத்த வேண்டும் ; அவ்வஸ்தியிலுள்ள சிறிது திரவத்தை மிச்சமிருக்கும்படிச் செய்யவும் ; ஏனெனில், மிகுந்துள்ள பாகத்தில் வாயு தங்கியிருக்கும். (2) அநுவாஸநம் பிரயோகிக்கப் பட்டதும், பிணியாளியை நிமிர்த்துப் படுக்கச் செய்து, கையினால் இடுப்புக்குக் கீழ் இரு புறங்களிலும் நன்றாகத் தட்டிக்கொடுக்கவும் ; மேலும் பிணியாளியானவன் தனது குதிகால்களால் பிருஷ்ட பாகத்தை அடித்துக் கொள்ளவும் ; பாதங்களால் படுக்கையை மிதித்துக் கொண்டவாறு மூன்று முறை எழும்பி எழும்பி சயனிக்கச் செய்ய வேண்டும். அதன் பிறகு அங்கங்களை நீட்டித், தலையணையின் மேல் தலைவைத்துப் படுத்துக் கொண்ட ரோகி தன் குதிகால்களாலும் முஷ்டியினாலும் பிருஷ்ட பாகத்தைக் குத்த வேண்டும் ; வேதனை மேலிட்டிருக்கும் தேஹத்தில் ஸ்நேஹவஸ்து எதையாவது தகுந்தவாறு தடவி அதை நன்கு மர்த்தநம் செய்வது நலம் ; இவ்வாறு செய்தால் வஸ்தியினால் உட்செலுத்திய ஸ்நேஹமானது சீக்கிரம் வெளிவராது ; சீக்கிரம் வெளிவந்துவிட்டால் மறுபடி மேற்கூறிய வஸ்திப் பிரயோகம் செய்யவேண்டும் ; ஏனெனில், ஸ்நேஹம் சில நேரமாவது உள்ளே தங்கிவிடாவிட்டால் அதைப் பிரயோகிப்பதால் பயனுண்டாவதில்லை. 24—29.

அநுவாஸநத்தில் போஜநம் செய்விக்கும் நிலைமை :—ஜாடராக்னிக்கு உத்தீபகமாய், ஸ்நேஹமும் தேஹத்தில் நன்றாகப் பற்றி, உடல் ஸ்நிக்தமானவனுக்கு அன்றையதினம் மாலையில் இலகுவான ஆஹாரத்தைக் கொடுத்து போஜனம் செய்விக்கலாம்.—29½.

அநுவாஸநத்தில் ஸ்நேஹம் வெளியாகும் நேரமும், வெளியாகாவிட்டால் செய்யவேண்டிய பரிஹாரமும் :—உட்செலுத்திய ஸ்நேஹம் வெளியாவதற்கு, அதிக நேரம் வேண்டுமென்றால், மூன்று யாமகாலம் போதுமானது; அதன் பிறகும் ஓர் இராப்பகல் முழுவதும் ஸ்நேஹம் வெளியாகிறதென்று எதிர்பார்த்துக்கொண்டு சும்மாயிருக்கலாம் ; அதற்குள்ளேயும் வெளிவராவிட்டால் மருக்காரை முதலிய கனிகளால் செய்யப்பட்ட குதவர்த்திகளைப் பிரயோகித்தாவது, தீக்ஷ்ணவீர்யமுள்ள வேறுவித வஸ்திகளைச் செய்தாவது ஸ்நேஹத்தை வெளிப்படுத்த முயலவேண்டும். உடல் மிகவும் ரூக்ஷமாயிருந்து ஸ்நேஹம் வெளிவராமற் போகும்போது, அதனால் தேஹத்தில் நிமிர் அக்னிமாந்தியம் முதலான தோஷங்கள் ஸம்பவிக்காமலிருக்கும் வரையில், அது விஷயமாக கவனம் செலுத்தாமலே சும்மாயிருக்கலாம் ; அப்பொழுது இரவில் ஒன்றும் போஜனம் செய்யாமலிருந்து, மறு நாட் காலையில் சுக்கையும் கொத்துமல்லி விதையையும் சேர்த்துக் காய்ச்சிய ஜலத்தை இளஞ்சூடாகப் பருகவும் ; அல்லது ஸாதாரண உஷ்ண ஜலத்தையாவது உட்கொள்ளலாம். 30—32½.

அநுவாஸநத்தை மறுமுறைகளில் ப்ரயோகிக்கும் க்ரமம் :—அப்பிணியாளிக்கு மறுபடியும் மூன்றாவது தினத்திலாவது, ஐந்தாவது தினத்திலாவது, அல்லது உட்செலுத்திய ஸ்நேஹம் சூட்டில் பக்குவமாய் தேஹத்தில் ஊறுவதற்குத் தகுந்த விதமாயாவது அநுவாஸநம் செய்விக்கலாம். ஆகவே வாயு மிகவும் அதிகரித்தவர்களுக்கும், தினந்தோறும் வியாயாமம் செய்துவருபவருக்கும், ஜாடராக்னி விசேஷமாய் விருத்தியடைந்திருப்பவருக்கும், ரூக்ஷ தேஹிகளுக்கும் பிரதி தினமும் அநுவாஸநம் ப்ரயோகிக்கலாம். 33, 34.

அநுவாஸநத்தினால் ஸ்நிக்த்தமானவனுக்கும் ஆகாதவனுக்கும் செய்யவேண்டிய சிகித்ஸை :—இவ்வாறு மூன்று நான்குமுறை அநுவாஸநம் செய்து அதனால் தேஹம் ஸ்நிக்த்தமாய் விட்டதும், ஸ்ரோதஸ்ஸுகள் சுத்தமாவதற்காக சோதககுணமுள்ள நிரூஹ வஸ்தியைப் பிரயோகிக்கவேண்டும்; ஸ்நிக்த்தமாகாவிட்டால், தேஹத்திற்குச் சாதாரணமாய் ஸ்நேஹசிகித்ஸையைச் செய்யவேண்டும்.—35.

நிரூஹவஸ்தியைப் ப்ரயோகிக்கும் நிலைமையும் முறையும் :—அப்பால் ஐந்தாவது தினத்திலோ, அல்லது மூன்றாவது தினத்திலோ, சுபமான வேளையில், பகற்பொழுது சிறிது கழிந்த பிறகு, பூஜை முதலிய மங்களகரமான விதிகளை நிறைவேற்றியதும் நிரூஹவஸ்தியைப் பிரயோகிப்பதற்கு முயலவேண்டும். அதற்கு முன் பிணியாளி அப்யங்கம் செய்துகொண்டு, ஸ்வேதசிகித்ஸையும் பண்ணிக்கொண்டு, மலவிஸர்க்கம் செய்து அதிக பசியில்லாதவனாயிருக்கக் கண்டு, அவனுடைய தேஹத்திற் கோளாறடைந்துள்ள தோஷங்களையும், உபயோகிக்கப்போகிற ஒளஷதங்களையும் சிரத்தையோடு நன்கு பரீக்ஷித்தும் பார்த்து, வைத்தியன் வஸ்திப்பிரயோகங்களில் அறிவும் அநுபவமும் வாய்ந்த வேறு சில வைத்தியர்களையும் உதவியாக வைத்துக்கொண்டு நிரூஹத்தைப் பிரயோகிக்கவேண்டும். 36—37½.

நிரூஹத்திற்கான க்வாத கல்பனை :—நிரூஹவஸ்திக்கு வேண்டிய கஷாயத்தின் பொருட்டு த்ரவ்யங்களை[1] இருபது பலம் சேர்த்து, மருக்காரையின் எட்டுக் கனிகளையும் சேர்த்து க்வாதம்[2] செய்யவேண்டும். வாதம் பிரகோபித்திருப்பவருக்காகப் பக்குவம் செய்யப்படும் க்வாதத்தில் காலில் ஒரு பங்கு ஸ்நேஹ பதார்த்தமும், பித்தம் பிரகோபித்தவனுக்கும் ஆரோக்கிய நிலைமையிலிருப்பவனுக்

1. நிரூஹத்திற்கு வேண்டிய கஷாயத் திரவ்யங்கள் இன்னவை யென்று கல்பஸ்தானத்தில் கூறப்படுகின்றன; அவையாவன—சிற்றாமுட்டி, சீந்தில், த்ரிபலை, சிற்றரத்தை, தசமூலம் முதலியவை.

2. க்வாதம் என்பது ஐந்துவித கஷாயங்களில் ஒன்று. [ஸ்வரஸம், பாண்டம், கல்கம், ஹிமம், க்வாதம் என்பவை பஞ்ச கஷாயங்கள்.]



கும் ஆறில் ஒரு பங்கு ஸ்நேஹமும், கபம் அதிகரித்தவனுக்கு எட்டில் ஒரு பங்கு ஸ்நேஹமும் சேர்த்துக் கஷாயத்தைப் பக்குவம் செய்யவேண்டும். எல்லா நிலைமையிலும்[1] கல்கத்தை க்வாதத்திலும் எட்டில் ஒருபங்காகச் சேர்க்கவேண்டும்; வஸ்தியில் உபயோகிக்கப்படும் க்வாதம் அதிக தடிப்பாகவும் இல்லாமல் அதிக தெளிவாகவும் இல்லாமல் மத்தியமாயிருக்கும்படி பக்குவம் செய்யப்படவேண்டும். வெல்லம் ஒரு பலமும், தேன்-இந்துப்பு முதலிய மற்றும் அவசியமாயுள்ள வஸ்துக்களை[2] எவ்வித அளவில் சேர்த்தால் முறைப்படி ஒன்றாகச் சேர்க்கூடுமோ அவ்வாறும் சேர்க்கவேண்டும். 38—40½.

நிரூஹ க்வாதத்தின் தன்மையும் அதை வஸ்தியில் பிரயோகிப்பதும் :—முற்கூறிய எல்லாவற்றையும் ஒருமிக்கச் சேர்த்து, உஷ்ணஜலம் நிரம்பிய குடத்திலிருந்து எழும்பும் ஆவியினால் சூடாக்கி, மத்தினால் கடைந்து, அப்பால் வஸ்தியில் அதை நிரப்பி, இளஞ்சூடாகக் குதத்தின் நேத்திரத்தின் மூலமாய் பிரயோகிக்கவேண்டும்; அந்தத் திரவத்திரவ்யம் அதிக ஸ்நிக்த்தமாகவும் இருக்கக்கூடாது; அதிக ரூக்ஷமாகவும் இருக்கலாகாது; அதிக தீக்ஷ்ண வீர்யமுள்ளதாகவும் அதிக மிருதுவாகவும் இருக்கக் கூடாது; அதிக தடிப்பாகவும் இல்லாமல் அதிக தெளிவாகவுமில்லாமல், அளவில் மிதமிஞ்சியுமில்லாமல், குறைவாகவுமில்லாமல், அதிக இலவண ரஸமுமில்லாமல், இலவண ரஸம் குறைவாகவும் இல்லாமல், அவ்விதமே அம்ல ரஸத்திலும் மத்தியமாகவும் அக்கஷாயம் பக்குவம் செய்யப்பட்டிருக்க வேண்டும். 41—42½.

நிரூஹ க்வாதத்தில் சேர்க்கக் கூடிய வஸ்துக்களின் அளவைப் பற்றிய மதபேதம் :—வஸ்திவிதியில் நிபுணரான வேறு சிலர் கூறுவதாவது :—ஸ்நேஹம், தேன் இவ்விரண்டையும் தனித்தனியே மும்மூன்று பலம் அளவில் சேர்க்கலாம்; இந்துப்பு அரைக்கால் பலமும், கல்கம் இரண்டு பலமும், மற்றத் திரவ பதார்த்தங்கள் எல்லாம் பத்துப் பலமும் சேர்க்கவேண்டும். ஆரோக்கிய நிலைமையிலிருப்பவருக்கு இது ஏற்ற முறையாம். 43—44½.

நிரூஹவஸ்துக்களை ஒன்றோடொன்று சேர்த்துக் கலக்கும் முறை:—நிரூஹத்திற்கான திரவம் செய்யு முறை பின்வருமாறு:—முதலில் பாத்திரத்தில் தேனை ஊற்றி அதன் மேல் இந்துப்பைப் பொடித்துச் சேர்த்து ஒருமிக்க இரண்டையும் கலக்கவும்; பிறகு அவற்றோடு ஸ்நேஹ வஸ்துவையும், அதன் மேல் கல்கத்தையும்; அப்பால் கஷாயத்தையும் ஊற்றி, அனைத்தையும் நன்றாகக் கலந்து விடவும். 45—46½.

1. வாத-பித்த-கபங்கள் கோளாறடைந்த நிலைமையிலும், ஆரோக்கிய நிலைமையிலும் எனக் கருத்து.

2. ஸுரா, ஆஸவம், மாம்ஸ ரஸம், காடி முதலானவைகள் மற்றவை யென்பதால் குறிக்கப்படுகின்றன.

நிரூஹம் பிரயோகித்ததும் இருக்கவேண்டிய நிலைமை :—(1) நிரூஹவஸ்தியைப் பிரயோகித்ததும், அப்பிணியாளி தலை நிமிர்ந்து அதே மனதாய் படுத்துக்கொண்டு தலையணையில் சாய்ந்தவாறு, மலம் வெளிவருவதற்கான வேகம் உண்டாகையில் முக்கி முக்கி அதை வெளியிடவேண்டும். (2) குடலிற் செலுத்திய நிரூஹத் திரவ்யம் திரும்பவும் வெளிவருவதற்கு முகூர்த்தநேரமே பரமாவதியான காலமாம்; அதற்குமேல் அப்பதார்த்தம் உள் தங்கியிருந்தால் அபாயம் விளைவிக்கக் கூடியதாயிருக்கும். அவ்வித நிலைமையில் ஸ்நேஹம், க்ஷாரம், கோமூத்திரம், காடி இவற்றின் சேர்க்கையாலானதும், ஸ்நிக்த குணமும் தீக்ஷணத்தன்மையும் உஷ்ணவீர்யமுமுள்ளதும், ஆகவே அநுலோமக குணமுடையதுமான[1] வேறொரு வஸ்தியை துரிதமாய் குதத்தினுள் பீச்சிடவேண்டும்; அல்லது பலவர்த்தியையாவது பிரயோகிக்கவேண்டும்; ஸ்வேதம் என்னும் ஒற்றடமாவது கொடுக்கலாம்; திடுக்கிடும்படியாவது விரட்டலாம்; மற்றும் வேறேதும் உபாயத்தினாலாவது மலம் முதலியவற்றை வெளிப்படுத்த முயலலாம். 47—48½.

நிரூஹம் தானே வெளியாய்விட்டால் பிறகு செய்யவேண்டிய கிரமம் :—பிரயோகித்த நிரூஹம் தனக்குத் தானே வெளியாய்விட்டால் இரண்டாவது வஸ்தியும் பிரயோகிக்கலாம்; அவசியமானால் மூன்றாவது முறையும், நான்காம் முறையுங்கூட வஸ்தியைப் பீச்சிடலாம்; அல்லது எத்தனை முறை பிரயோகித்தால் நிரூஹ கிரித்யை நன்கு நிறைவேறியதாக அறியப்படுமோ அத்தனை முறையும் அதைச் செய்யலாம். 49½.

நிரூஹத்தின் ஸம்யக் யோகாதி லக்ஷணங்கள் :—நிரூஹம் நன்கு நிறைவேறுவதாலும், மிதமிஞ்சி செய்யப்படுவதாலும், குறைவாகச் செய்யப்படுவதாலும் உண்டாகும் ஸம்யக்யோக-அதியோக-ஹீநயோக லக்ஷணங்கள் விரேசகிகித்ஸையில் கூறப்பட்டுள்ள[2] மாதிரியே இருக்குமென்று அறிக. 49¾.

நிரூஹவஸ்தி நிறைவேறியதும் செய்யவேண்டிய பத்தியம் :—நிரூஹவஸ்தி நன்கு நிறைவேறியதும், பிணியாளி இளஞ்சூடான ஜலத்தில் ஸ்நானம் செய்து, ஜாங்கலபூமியைச் சேர்ந்த ஜந்துக்களுடைய மாம்ஸரஸங்கலந்த இலகுவான அன்னத்தைப் புசிக்கலாம். 50½.

நிரூஹத்தினால் சஞ்சலமான தோஷங்களுக்கு ஏற்ற பரிஹாரம்:—நிரூஹ கிரித்யை செய்ததும் மிகவும் நிலையற்ற நிலைமையிலுள்ள

1. அநுலோமகம்—குடலுக்குள்ள இயற்கையான அசைவைத் தூண்டி மலத்தை வெளிப்படுத்தல்.

2. விரேசனத்தின் ஸம்யக்யோகாதி விவரங்களைப் பற்றி 18-ம் அத்தியாயம் 39, 40-ம் ச்லோகங்களின் மொழி பெயர்ப்பைப் பார்க்க.



தோஷங்களால் எக்கோளாறுகள் ஸம்பவிக்கின்றனவோ, அவை இளஞ்சூடான ஜலத்தில் குளித்து ஆஹாரமும் உட்கொண்ட பின்பு தானே நிவிருத்தியாகும்.—51½.

நிரூஹத்தினால் பிரகோபித்த வாதத்திற்குப் பரிஹாரம் :—நிரூஹம் செய்தபிறகு பிரகோபமடைந்த வாதத்தினால் பீடிக்கப்படும் பிணியாளிக்கு மீண்டும் உடனே அநுவாஸந வஸ்தியைச் செய்யவேண்டும்.—52.

அநுவாஸநத்தில் ஸம்யக்-ஹீந-அதியோகக்குறிகள் :—அநுவாஸந வஸ்தி செய்துகொண்டவனுக்கு ஸம்யக்யோகமென்ன, ஹீநயோகமென்ன, அதியோகமென்ன இவை, ஸ்நேஹபானம் செய்தவனுக்கு எவ்வித குறிகளுடன் கூடியனவாயிருக்குமென்று கூறப்பட்டிருக்கின்றனவோ அவ்விதமாகவே இருக்கும்.—52½.

அநுவாஸநம் நன்கு நிறைவேறியதன் குறிகள் :—அநுவாஸந வஸ்தி முறையில் பீச்சிடப்பட்ட யாதொரு ஸ்நேஹமானது சிறிது நேரம் குடலில் தங்கியிருந்து மலத்துடன் வெளியாகின்றதோ, அத்துடன் அபானவாயுவும் கிரமப்படி வெளிவருகின்றதோ அது நன்கு முறைப்படி நிறைவேறிய அநுவாஸநமாகும்.—53½.

வாத-பித்த-கபங்களில் அநுவாஸந முறை :—(1)கபம் அதிகரித்திருக்கும் வியாதியில் ஒரு ஸ்நேஹவஸ்தியையோ அல்லது மூன்று ஸ்நேஹவஸ்திகளையோ பிரயோகிக்கலாம். (2)பித்தம் அதிகரித்த ரோகத்தில் ஐந்து அல்லது ஏழு வஸ்திகளைச் செய்யலாம். (3) வாததோஷம் மேலிட்ட வியாதியில் ஒன்பது அல்லது பதினொரு வஸ்திகளைப் பிரயோகிக்கலாம். ஒவ்வொரு தோஷத்திலும் இவ்வாறாக அநுவாஸநம் செய்தும நல்ல பலன் உண்டாகாவிட்டால், கூறப்பட்டதற்கு மேல் ஒற்றைப்படையான எண்ணிக்கையில் இன்னும் அதிக அநுவாஸநங்களைச் செய்யலாம்; மேலும் அவற்றைச் செய்த பிறகு ஆஸ்த்தாபந வஸ்தியையும் பிரயோகித்து வரவேண்டும்.—54, 55.

அநுவாஸநத்திற்குப் பிறகு உபயோகிக்கத் தகுந்த பத்தியம்:—(1) கபம் பிரகோபித்துண்டான வியாதியில் யூஷம் என்கிற கஞ்சியும், (2) பித்தவியாதியில் பாலும், (3) வாதரோகத்தில் மாம்ஸ ரஸமும் உணவாக உபயோகிக்கத் தகுந்தவையாம்.—55½.

வாதாதி விகாரங்களில் நிரூஹ கிரமங்கள் :—(1) [illegible] இந்துப்பு இவற்றுடன் கூடியதும், வாதஹரமான ஔஷதச் சாரங்களாற் காய்ச்சப்பட்டதும்,[1] மதுர ரஸமும் அம்லரஸமும் கலந்து உஷ்ணமாயிருப்பதுமான ஸ்நிக்த குணமுள்ள கஷாயத்தினால் வாத வியாதிகளில் நிரூஹ வஸ்தியைப் பிரயோகிக்கலாம். (2) இலவங்கபத்திரி, சர்க்கரை முதலியவைகளும், நெய்யும், பாலும், கருப்பஞ்சாறும், தேனும் கலந்து, மதுர ரஸமும் குளிர்ச்சியும்

1. வாதஹரமான ஔஷதச்சாரங்கள்—தசமூலம் (தசமூலத்தைப்பற்றி 161-வது பக்கத்தில் டிப்பணியைப் பார்க்க); பத்ரதார்வாதிகணம் முதலியவை (159-ம் பக்கம்,) வாதஹரமானவை.

பொருந்திய ந்யக்ரோதாதி கணத்தின்[1] கஷாயத்தைக்கொண்டு இரண்டு ஆஸ்தாபந வஸ்திகளை பித்தவிகாரத்தில் பிரயோகிக்கலாம். (3) ஆரக்வதாதிகணம்,[2] வத்ஸகாதிகணம்[3] இவற்றால் கபவிகாரங்களில் நிரூஹம் செய்யவேண்டும். பக்குவமான கஷாயத்தில் தேனையும் கோமூத்திரத்தையும் கலந்து, தீக்ஷ்ண குணமும் உஷ்ண வீர்யமும் கடுரஸமும் ரூக்ஷத்தன்மையும் பொருந்தியிருக்குமாறு தயார் செய்து, அக்கஷாயத்தினால் கபவிகாரத்தில் மூன்று முறை நிரூஹவஸ்தியைப் பிரயோகிக்கவேண்டும். ஏனெனில், மூன்று முறை செய்யப்படும் நிரூஹமானது முறையே மூன்று தோஷங்களாலுண்டான கோளாறுகளையும் நிவ்ருத்திசெய்பவைகளாயிருக்கின்றன. 56—59.

நிரூஹம் மூன்று முறை செய்வதன் அவசியம்:—(1) ஆகவே வேறு சில வைத்தியர்களும் நிரூஹவஸ்தியை மூன்று தடவைக்கு மேல் பிரயோகிப்பதை அங்கீகரிக்கவில்லை; ஏனெனில் மூன்று முறைக்குமேல் நிரூஹம் பிரயோகித்து நிவ்ருத்திசெய்யக்கூடிய நான்காவது தோஷம் ஒன்று கிடையாதல்லவா? (2) நிரூஹவஸ்தியைப் பிரயோகிக்கையில் முதல் வஸ்தியை தோஷங்கள் உத்க்லேசமாவதற்காகவும், இரண்டாவது வஸ்தியை தோஷங்கள் சுத்தியாவதற்காகவும், மூன்றாவது வஸ்தியை தோஷங்களுடைய சமநத்திற்காகவும்—இவ்வாறு மூன்றுவிதமாக நிரூஹத்தைச் செய்யவேண்டுமென்று—வேறு சில வைத்தியர்களும் கூறுகின்றனர்.—60, 61.

நிரூஹம் நிறை வேறுவதற்கான போதுப் பிரமாணம்:—தோஷங்களுடைய பலத்தையும், ஔஷதங்களின் தன்மையையும், பிணியாளியின் பிரக்ருதி முதலியவற்றையும் நன்கு ஆலோசித்து, இதையெல்லாம் சிகித்ஸையில் பிரமாணமாகக் கொள்ளவேண்டும். எது எவ்வாறாயினும் நிரூஹம் நன்கு நிறைவேறியதற்கான குறிகள் முற்றிலும் உண்டாகாத வரையில் அவ்வஸ்தியை பிரயோகித்து வருவதை நிறுத்திவிடக்கூடாது.—62.

கர்மவஸ்தி:—முதலில் ஒரு ஸ்நேஹ வஸ்தியைச்செய்ய வேண்டும்; பிறகு பன்னிரண்டு நிரூஹவஸ்தியும், பன்னிரண்டு அநுவாஸநவஸ்தியும் ஒன்று மாற்றி ஒன்றாகச் செய்யவும்; இறுதியில் ஐந்து ஸ்நேஹவஸ்தியையும் வரிசையாகப் பிரயோகிக்கவேண்டும். இவ்வாறு முப்பது வஸ்திகள் பிரயோகிக்கப்படுமானால் அது 'கர்மவஸ்தி' என்று கூறப்படும்.—63.

காலவஸ்தி:—முதலில் ஒரு ஸ்நேஹவஸ்தியைச் செய்யவும்; பிறகு ஆறு ஸ்நேஹவஸ்திகளைப் பிரயோகிக்கவும்; இந்த ஆறு ஸ்நேஹவஸ்திகளுக்கும் இடையிடையே ஒவ்வொரு கஷாயவஸ்தி

1. ந்யக்ரோதாதிகணம்—164-வது பக்கம் பார்க்க.
2. ஆரக்வதாதிகணம்—161-வது பக்கம் பார்க்க.
3. வத்ஸகாதிகணம்—163-ம் பக்கம் பார்க்க.

18



வீதம் ஐந்து நிரூஹங்களைப் பிரயோகித்து வரவும்; இறுதியில் வரிசையாக மூன்று அநுவாஸநங்களைச் செய்யவேண்டும். ஆகப் பதினைந்து வஸ்திகள் ஆயின. இந்த முறையில் நிறைவேற்றப்படும் வஸ்திசிகித்ஸைக்கு 'காலவஸ்தி' என்று பெயர்.—63½.

யோகவஸ்தி:—முதலில் ஒரு ஸ்நேஹவஸ்தியை பிரயோகிக்கவும்; பிறகு மூன்று நிரூஹவஸ்திகளையும், மூன்று அநுவாஸநவஸ்திகளையும் மாற்றி மாற்றிப் பிரயோகிக்கவும்; அப்பால் முடிவில் ஒரு ஸ்நேஹவஸ்தியைச் செய்யவேண்டும்; ஆக எட்டு வஸ்திகள் ஆயின. இந்த முறைக்கு 'யோகவஸ்தி' என்று பெயர்.64½.

அநுவாஸந நிரூஹங்களை மாற்றி மாற்றிப் பிரயோகிப்பதன் ஆவச்யகதை:—அநுவாஸநவஸ்தியையாவது நிரூஹவஸ்தியையாவது தனியாக ஒன்றையே அதிகமாய் உபயோகிக்கக் கூடாது; அநுவாஸநத்தை அதிகமாய் உபயோகித்து வந்தால் தோஷங்கள் மேன்மேலும் கிளறப்பட்டு, அக்நிமாந்த்யமும் ஸம்பவிக்கும்; நிரூஹவஸ்தி அதிகமானால் வாததோஷம் பிரகோபித்து அதனால் ஆரோக்கியஹாநி உண்டாகும். ஆகையால் நிரூஹவஸ்தியினால் சிகித்ஸை செய்யப்பட்டவன் அநுவாஸநவஸ்தியையும் அடுத்தாற்போல் செய்துகொள்ள வேண்டியவனாகிறான்; அங்ஙனமே அநுவாஸநம் செய்துகொண்டவன் நிரூஹசிகித்ஸையைச் செய்துகொள்வதும் அவச்யம்.—65, 66.

வஸ்தி சிகித்ஸை த்ரிதோஷஹரம்:—இவ்வாறு வஸ்திசிகித்ஸையானது சரீரத்திற்கு ஸ்நிக்தத்தன்மையை விருத்தி செய்வதென்ன, தோஷங்களை வெளிப்படுத்தி சோதநம் செய்வதென்ன இவ்விதமான யுக்தியினால் இச்சிகித்ஸை மூன்று தோஷங்களின் கோளாறுகளையும் அகற்றி ஆரோக்கியமளிக்க வல்லது.—66½.

மாத்ராவஸ்தி:—ஸ்நேஹபாநத்திற்கு எது குறைந்த அளவாகக் கூறப்பட்டிருக்கிறதோ அந்த அளவில்[1] ஸ்நேஹவஸ்தியைப் பிரயோகித்தால் அது 'மாத்ராவஸ்தி' என்று வழங்கப்படும்.[2] அந்த வஸ்தியானது தோஷஹரம். இதைப் பிரயோகிப்பதில் எவ்வித நிர்ப்பந்தமும் கிடையாது; பலத்தை விருத்தி செய்வது; மலத்தை மெதுவாக வெளிப்படுத்தக் கூடியது; ஆகவே பாலர், வயது முதிர்ந்தவர், வழிநடத்தல் சுமையெடுத்தல் வியாயாமம் செய்தல் மனக்கவலை கொண்டு சிரமப்பட்டவர், வாததோஷத்தினால் பலங்குன்றியவர், அக்நிமாந்த்ய முள்ளவர், அரசர், செல்வவான்கள், ஸுகமாக ஜீவிப்பவர் இவர்களுக்குச் சுகம் தருவது; அவர்களுக்கு இவ்வஸ்தி எப்பொழுதும் உபயோகிக்கத்தகுந்ததாகும். 67—69.

1. இரண்டு யாமங்களில் ஜீர்ணமாகக் கூடிய அளவில் யாதொரு ஸ்நேஹம் உட்கொள்ளப்படுமோ அந்த அளவு என்று அறிக.
2. ஆறு பலம் உத்தமமாத்திரை, மூன்று பலம் மத்திமமாத்திரை, ஒன்றரை பலம் அதமமாத்திரை; இவ்வாறு மாத்ராவஸ்தியின் அளவு வேறு விதமாகவும் கூறப்படுவதுண்டு.

உத்தரவஸ்தி. :—(1) வஸ்தியை ஆச்ரயித்து உண்டாகும் ரோகங்களிலும், ஸ்த்ரீகளுக்கு யோனியும் கருப்பையையும் பற்றியுண்டாகும் வியாதிகளிலும், இரண்டு மூன்று நிரூஹவஸ்திகளைப் பிரயோகித்து சோதனம் செய்து உத்தரவஸ்தியைப் பிரயோகிக்க வேண்டும். (2) உத்தரவஸ்தியில் இணைக்கக்கூடிய நேத்திரமானது பிணியாளியினுடைய அங்குலியின் அளவுப்படி பன்னிரண்டு அங்குலம் நீளமாகவும், இரண்டு கோபுச்சம்போல் அடி பருத்து நுனி சிறுத்து, அடியிலும் இடையிலும் கர்ணிகை யென்னும் வரம்புகள் அமைக்கப்பட்டு, ஒரு வெண்கடுகு நுழையும் படியான முனைத்துவாரத்தை யுடையதாய், வழுவழுவென்று, பொன் முதலிய லோஹத்தினால் ஆக்கப்பட்டிருக்கவேண்டும்; மேலும் அதன் முனை, கூர்மையாயில்லாமல் முல்லை மொட்டு, அலரிப்பூ இவற்றின் பூந்தாது போன்றதாகவும் இடமாகவும் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். இந்த நேத்திரத்தில் சேர்க்கப்படவேண்டிய வஸ்தியானது மிருதுவாகவும், இலகுவாகவும், அரைப்பலம் அல்லது அந்தந்த நிலைமைகளுக்கு ஏற்ற அளவான ஔஷதங்கொள்ளும் படியாகவும் இருக்கவேண்டும். 70—72½.

உத்தரவஸ்தியைப் பிரயோகிக்கும் முறை. :—பிணியாளியானவன், அநுவாஸனவஸ்திக்கு விதிக்கப்பட்டபடி ஸ்நானம் செய்து, ஆஹாரமுட்கொண்டு, முழங்காலுயரமுள்ள மிருதுவான ஆஸனத்தின்மேல் உடம்பு அசையாமல் நிமிர்ந்து ஸுகமாக உட்காரவேண்டும்; பின்பு நேராக நீண்ட ஆண்குறியில், அவ்வவயவ த்வாரம் சுத்தமாவதற்காக மெதுவாய் ஸ்நிக்தமான சலாகையை உட்செலுத்தவேண்டும்; அதனால் த்வாரம் நேரே சுத்தமானதும், ஸேவநீ யென்னும் ஆண்குறியின் கீழ், தெருக்கத் தையலைப்போன்ற குறி எந்த வாட்டத்தில் அமைந்திருக்கிறதோ அந்த வாட்டமாக ஆண்குறியின் உள்ளே அதன் முடிவுவரையில் குதத்தினுள் செலுத்தியது போல் நேத்திரத்தை நுழைக்கவேண்டும்; பிறகு வஸ்தி யென்னும் பையினுள் அடங்கிய ஸ்நேஹத்தைப் பீச்சிடவும்; அடுத்தாற்போல் ஸ்நேஹவஸ்திக்குக் கூறப்பட்டுள்ள உபசாரக்கிரமத்தைச் செய்வது உசிதமாயிருக்கும். இந்த விதமாக உத்தரவஸ்தியை மூன்று நான்கு முறை பிரயோகிக்கலாம்; மற்ற பத்தியாதிக் கிரமங்களை யெல்லாவற்றையுமே அநுவாஸனத்திற் செய்தது போலவே நிறைவேற்றி விடலாம்.—73, 76½.

ஸ்த்ரீகளுக்கு உத்தரவஸ்திக்கு ஏற்ற நிலைமைகள் :—ஸ்த்ரீகளுக்கு ருதுகாலத்தில் யோனியானது நன்கு விசாலிக்குமாகையால், அந்தச்சமயத்தில் பிரயோகிக்கப்படும் வஸ்தியை அவ்வவயவம் நன்றாகக் கிரஹிக்கும்; ஆகவே அச்சமயத்தில் உத்தரவஸ்தியைச் செய்யவேண்டும்; யோநி நெழுகிவிடுதல், யோநியில் வலி, இரத்தப்பெருக்கு, மற்றுமுள்ள யோநி ஸம்பந்தமான ரோகங்கள் இவ்விதமான அபாயகரமான நிலைமைகள் ஸம்பவிக்கும்போது



ருதுவில்லாத இதர ஸமயங்களிலும் ஸ்த்ரீகளுக்கு உத்தரவஸ்தியைச் செய்யலாம்.—77, 78.

ஸ்த்ரீகளுக்கு உத்தரவஸ்தியில் நேத்திரப்பிரமாணம் முதலியது :—கருப்பையில் உபயோகிக்கவேண்டிய நேத்திரம் பத்து அங்குலம் நீளமாகவும், ஒரு பயறு நுழையக்கூடிய த்வாரமுள்ளதாகவும் இருக்கவேண்டும்; அதில் நாலு அங்குலம் கர்ப்பாசயத்தினுள் வஸ்திப் பிரயோகம் செய்கையில் செலுத்தலாம். மூத்திரமார்க்கத்தில் இரண்டு அங்குலம் செலுத்தலாம். மூத்ரக்ருச்சிரமென்னும் நீர்க்கடுப்பு முதலான விகாரங்களில் பாலர்களுக்கு ஒரு அங்குலம் உட்செலுத்தலாம்.—79, 79½.

உத்தரவஸ்தியில் ஔஷத அளவு:—ஸ்த்ரீகளுக்குப் பிரயோகிக்கப்படும் உத்தரவஸ்தியில் பொதுவாக ஒரு பலம் ஔஷதம் மத்திம மாத்திரையாகும். சிறுவர்களுக்கோ அரைக்கால் பலம் மத்திம மாத்திரையாம்.—80.

ஸ்த்ரீகளுக்கு உத்தரவஸ்தி பிரயோகிக்கும் முறை :—உத்தரவஸ்தி செய்துகொள்பவள், தொடைகளிரண்டையும் நன்றாக மடக்கிக்கொண்டு, முழங்கால் உயர்ந்து நிற்க நிமிர்ந்து சயனித்துக்கொள்ளவும்; பிறகு தினம் ஒன்றுக்கு மூன்று நான்கு முறை உத்தரவஸ்தியைப் பிரயோகிக்கலாம்; இவ்வாறு மூன்று நாள் உத்தரவஸ்தி செய்வது முறை; ஒவ்வொரு நாளும் உத்தரவஸ்திக்கு அவசியமான ஸ்நேஹத்தை அளவில் கிரமமாக விருத்திசெய்து வரவும்.[1] இங்ஙனம் செய்ததும் மூன்று நாட்கள் விட்டு மறுபடியும் மூன்று நாள் முன்போலவே பிரயோகிக்க வேண்டும்.—81, 82.

வமந-விரேக வஸ்திகளுக்கு இடையில் இருக்க வேண்டிய கால அளவு:—வமநசிகித்ஸையைச் செய்த பிறகு ஒரு பக்ஷம் கழித்து விரேகம் செய்விக்கவேண்டும்; பிறகு ஒரு பக்ஷம் கழித்து நிரூஹவஸ்தியைப் பிரயோகிக்கலாம்; நிரூஹசிகித்ஸையைச் செய்துகொண்டவன் உடனே அநுவாஸனம் செய்துகொள்ளவேண்டும்; விரேகசிகித்ஸை செய்துகொண்டவனோ ஒரு வாரத்தில் அநுவாஸனம் செய்து கொள்ளவேண்டும்.—83.

வஸ்தியினால் தோஷங்கள் பரிஹரிக்கப்படும் வகை :—குஸும்பம் முதலிய நிறப்பொருட்களைக் கரைத்த ஜலத்திலிருந்து வஸ்திரமானது வர்ணத்தைக் கிரஹிப்பது போலவே, வமந விரேகாதிகளுக்குரிய ஔஷதப்பிரயோகங்களால் இளகிய தேஹத்திலிருந்து வஸ்தியானது தோஷங்களைப் பிரித்து வெளிப்படுத்தும் இயல்புடையதாம்.—84.

---

1. முதல் நாள் அரைக்கால் பலமும், இரண்டாவது நாள் கால்பலமும், மூன்றாவது நாள் அரைப்பலமும் பிரயோகிக்கவேண்டும். பிறகு மூன்று நாள் இடையில்விட்டு மீண்டும் மூன்று நாள் உத்தரவஸ்தியைச் செய்யும் போது முதல்நாள் அரைப்பலமும், இரண்டாவது நாள் முக்கால் பலமும் மூன்றாவது நாள் ஒரு பலமும் பிரயோகிக்கவேண்டும்.

வாதத்திற்கு வஸ்தியே சிறந்த பரிஹாரம்.—கை கால்களைப்பற்றியும், கோஷ்டம் என்னும் குடலைப்பற்றியும், மர்மஸ்தானங்களென்ன சிரஸ் என்ன மற்றுமுள்ள அகில அங்கங்களென்ன இவற்றை ஆச்ரயித்தும் எந்த ரோகங்கள் உண்டாகின்றனவோ அவையெல்லாம் உற்பத்தியாவதற்கு வாயுவைத் தவிர வேறு காரணம் ஒன்றுமில்லை. வாயுவானது சயாவஸ்தையடைந்த மலம், கபம், பித்தம் முதலிய தோஷங்களை ஆகர்ஷித்தும் தேஹமெங்கும் அவற்றைப் பரப்பியும் கோளாறுகளை யுண்டுபண்ணும் சக்தியுடையதாகையால், அதிகமாய் விருத்தியடைந்த அவ்வாத தோஷத்தைச் சமனம் செய்வதற்கு வஸ்தியைத் தவிர்த்து வேறொரு ஒளஷதமும் கிடையாது. ஆகையால் வஸ்தி தமாயுள்ள சிகித்ஸைகள் யாவும் ஒரு பாகமாகவும், வஸ்திசிகித்ஸை ஒன்றுமாத்திரம் ஒரு பாகமாகவும் சில வைத்தியர்களால் கூறப்படுவதன்றி[1], அங்ஙனமே நிஜரோகங்களுக்கும்[2] ஆகந்துக ரோகங்களுக்கும்[3] ஆச்ரயமாயுள்ள இரத்தத்திற்கு[4] விராவ்யதையும்[5] பிரதானமான அவை வஸ்தி சிகித்ஸையாகக் கருதப்படுகிறது. 85—87.

## இருபதாம் அத்தியாயம்
### நஸ்யவிதி

இனி நஸ்யவிதி[6] என்னும் அத்தியாயம் விவரிக்கப்படும்:—

நஸ்யத்தின் பொது உபயோகம்:—தோளுக்கு மேற்பட்ட அவயவங்களைப்பற்றி யுண்டாகும் வியாதிகளில் விசேஷமாக நஸ்யம் பிரயோகிக்கலாம் என்று விதிக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில், நாசிதான் சிரஸுக்கு வாயிற்படி யென்னத்தகும் த்வாரமாய் அமைந்திருக்கின்றது; நஸ்யமானது அந்த த்வாரத்தின் வழியாய் சிரஸில் பரவி அதைச் சார்ந்த வியாதிகளைப் போக்குகின்றது.—1.

1. வாதத்தினால் 80-வித வியாதிகளும், பித்தத்தால் 40-வித வியாதிகளும், கபத்தால் 20-வித வியாதிகளும் உண்டாவதால், பெரும்பான்மையான வியாதிகளுக்கு வாததோஷமே காரணமாகவும், அதைப் பரிஹரிக்கக் கூடியதாயிருப்பதால் வஸ்தி சிகித்ஸையே மற்றெல்லாவற்றிலும் சிகித்ஸையில் அதிக உபயோக முள்ளதென்றும் கருதி இங்ஙனம் கூறப்படுகிறது.

2. நிஜரோகங்கள்—வாத-பித்த-கபங்களால் ரோகமுண்டாகும் வியாதிகள்; பாண்டுரோகம், காமாலை, அதிஸாரம் முதலியவை.

3. ஆகந்துகரோகங்கள்—விஷப்பற்று, அபிகாதம் முதலிய வெளிக் காரணங்களால் உண்டாகும் வியாதிகள்.

4. இங்கு இரத்தம் என்பதால் அசுத்தமான இரத்தம் குறிப்பிடப்படுவதாய் அறிக.

5. விராவ்யதை—விரை யென்னும் காரீரத்தக் குழாயைக் கீண்டு அசுத்தரத்தத்தை வெளிப்படுத்தும் சிகித்ஸை.

6. நாஸிகையின் மூலமாய் பிரயோகிக்கப்படும் ஒளஷதம் "நஸ்யம்" எனப்படுகிறது; அவ்விஷயமான நியமங்களைக் கூறும் அத்தியாயம் "நஸ்ய விதி" என்று சொல்லப்படுகிறது.



நஸ்யம் மூன்றுவிதம்:—அந்த நஸ்யசிகித்ஸையானது 'விரேசன நஸ்யம்' என்றும், 'பிருஹ்மண நஸ்யம்' என்றும், 'சமன நஸ்யம்' என்றும் மூன்று வகைப்படும்.—1½.

மூன்றுவித நஸ்யங்களையும் உபயோகிப்பதற்கான வியாதிகள்:—(1) தலைவலி, [illegible], கண்ணோய், தொண்டையைப் பற்றிய வியாதிகள், வீக்கம், கண்டம் என்னும் கட்டி, கிருமி சம்பந்தமான வியாதி, கிரந்தி, குஷ்டம், அபஸ்மாரம், பீனஸம் இவற்றில் விரேசன நஸ்யம் உபயோகமானது. (2) வாதத்தினால் உண்டாகும் வலி, ஸூர்யாவர்த்தம்[1], தொண்டைக்கம்மல், காசி உலர்ந்து போதல், நாக்கு உலர்தல், வாய் பேசமுடியாமற்போதல், நித்திரையிலிருந்து கண் விழிக்கக் கஷ்டப்படுதல், அபபாஹுகம்[2] என்னும் இக்கோளாறுகளில் பிருஹ்மண நஸ்யம் உபயோகமானது. (3) நீலிகா என்னும் ஒருவித பிறவி மரு, வியங்கம் என்கிற ஒரு வகையான தேமல், தலைமயிர் உதிர்தல், நேத்திரத்தில் உண்டாகும் கொடிபோன்ற மாம்ஸ வளர்ச்சி என்னும் இக்கோளாறுகளில் சமன நஸ்யம் உபயோகிக்கத் தகுந்ததாம். 2—4.

மூன்று நஸ்யங்களுக்கும் ஏற்ற ஒளஷதச்சரக்குகள்:—(1) அந்த வியாதி முதலியவற்றைப் பரிஹரிப்பதற்கு ஏற்ற ஒளஷதச் சரக்குகளால் பக்குவம் செய்யப்பட்ட ஒளஷதமுறைகளுக்கு அநுகூலமான ஸ்நேஹபதார்த்தங்களாலும், கல்கம்-க்வாதம்-தேன்-இந்துப்பு-ஆஸவம் என்னும் மதுவகை இவை முதலியவற்றாலும் அந்தந்த நிலைமைகளுக்குத் தகுந்தவாறு முதலிற் கூறிய விரேசந நஸ்யத்தைப் பிரயோகிக்கவேண்டும். (2) ஜாங்கலபூமியில் வசிக்கும் பிராணிகளுடைய மாம்ஸத்தினின்று காறப்பட்ட இரஸத்தினாலும், இரத்தத்தினாலும்[3], கடிரம் என்னும் ஒருவித குங்குலியத்தாலும் பிருஹ்மண நஸ்யத்தைப் பிரயோகிக்கலாம். (3) தோஷமில்லாமல் பக்குவம் செய்த முற்கூறிய ஸ்நேஹ வஸ்துக்களாலும், மாம்ஸரஸம் முதலியவற்றாலும், பாலாலும், ஜலத்தினாலும் சமன நஸ்யத்தைப் பிரயோகிக்கலாம்.—5, 6.

மர்ச-பிரதிமர்ச நஸ்யங்கள்:—இச்சிகித்ஸையில் உபயோகிப்பதற்கான ஸ்நேஹ நஸ்யமே அந்தந்த அளவின் பேதத்தைக் கொண்டு 'மர்சம்' என்றும், 'பிரதிமர்சம்' என்றும் இரண்டு விதமாக விவரிக்கப்படும்.[4]—6½.

1. ஸூர்யாவர்த்தம்—காலையிலிருந்து சூரியன் மறையும் வரையில் அதிகரித்து, அதன் பிறகு கிரமமாகக் குறைந்து வரும் ஒருவித கடுமையான தலைவலி.

2. அபபாஹுகம்—கையில் உண்டாகும் ஒருவித வாத நோய்.

3. ஜாங்கல மாம்ஸ ரஸாதிகளைப்போல இரத்தத்தன்மையற்ற ஸ்நேஹம் முதலியவற்றாலும் பிருஹ்மண நஸ்யத்தை நிறைவேற்றலாம் என்பது கருத்து.

4. மர்சநஸ்யத்தில் ஸ்நேஹத்தை விசம் பலமும், பிரதிமர்சத்தில் இரண்டு பிந்துக்களும் பிரயோகிப்பார்கள்.

அவபீட நஸ்யம் :—தீக்ஷ்ண குணமுள்ள கல்கம் முதலியவற்றால் 'அவபீட நஸ்யம்'[1] பிரயோகிக்கப்படும்; இதுவே 'மூர்த்த விரேசக நஸ்யம்'[2] என்றும் கூறப்படும்.—7.

த்மாந நஸ்யம்:—தோஷங்களை வெளிப்படுத்துவதற்காக நாசியினுள் உபயோகிக்கப்படும் சூர்ணரூபமான ஔஷதமானது 'த்மாநம்' என்று வழங்கப்படும்.—7½.

த்மாந நாடியும் த்மாந நஸ்யப் பிரயோகமும் :—அந்த சூர்ண நஸ்யத்தை அடியிற்கூறப்படும் வகையில் பிரயோகிக்கவேண்டும் :—ஆறு அங்குலம் நீளமுடையதும், இரண்டு முகங்களையுடையதுமான ஒரு குழாயை நிர்மாணம் செய்து, அதனுள் ஔஷதம் நிரப்பி, அவ்விரு முனைகளையும் நாசியின் இரண்டு த்வாரங்களிலும் வைத்து, குழாயின் அடிப்புறத்து த்வாரத்தில் வைத்யன் தனது வாயை வைத்து ஊதவேண்டும்; அவ்வாறு உட்செலுத்தப்படும் ஔஷதமானது சூர்ண ரூபமாயிருப்பதால், பெரும்பான்மையான தோஷத்தையும் ஆகர்ஷித்துப் போக்கவல்லது.—8, 8½.

மர்ச நஸ்ய கல்க நஸ்யங்களுக்கு ஔஷதப் பிரமாணங்கள்:—ஆள்காட்டி விரலை இரண்டு கணுக்கள் வரையில் ஒரு திரவத்தில் அமிழ்த்தியெடுத்தால், இதிலிருந்து விழும் துளியானது எவ்வளவு இருக்குமோ அது ஒரு பிந்து என்று கூறப்படுகிறது; அவ்வாறு பத்து பிந்துக்கள் பிரயோகிக்கப்படுமானால் அது மர்சத்திற்கு உத்தம மாத்திரையென்றும், எட்டு பிந்துக்களானால் மர்சத்திற்கு அது மத்திம மாத்திரை யென்றும், ஆறு பிந்துக்களானால் மர்சத்திற்கு அது ஹீநமாத்திரை யென்றும் கருதப்படும். ஸ்நேஹங்களைத் தவிர கல்கம் முதலியவற்றால் நஸ்யமிடுவதானால், மர்சத்திற்குக் குறிப்பிட்ட அளவுகளில், இரண்டிரண்டு பிந்துக்களைக் குறைத்து உத்தம மத்திம-ஹீநமாத்திரைகளைப் பிரயோகிக்கவேண்டும்.[3] 9—10½.

நஸ்யத்திற்குத் தகாதவர்கள் :—அப்பொழுதே தண்ணீர் அருந்தியவர், மதுபானம் செய்தவர், விஷமுண்டவர், ஸ்நேஹபானம் செய்தவர், தண்ணீர் மது முதலியதை அருந்தப்போகிறவர், ஆஹாரம் புஜித்தவர், சிரஸ்நாநம் செய்தவர், ஸ்நாநம் செய்யப்போகிறவர், இரக்தமோக்ஷணம் செய்துகொண்டவர்,[4] புதியதாக பீநஸரோகத்தினால் வருந்துபவர், மல மூத்திராதி விஸர்க்கம் செய்யும் தருவாயிலிருப்பவர், பிரஸவித்திருப்பவள், ச்வாஸரோகிகள், காஸரோகி-

1. அவபீட நஸ்யம்—இந்த நஸ்யத்தைப் பிரயோகித்ததும் நாசியை அழுத்தி நன்றாகச் சிந்தவேண்டியிருப்பதால் இப்பெயர் வந்தது.
2. மூர்த்த விரேசக நஸ்யம்—அவபீட நஸ்யம் செய்வதில் சிரஸிலுள்ள தோஷங்கள் வெளிப்படுவதால் இப்பெயர் அதற்குக் கூறப்படுகிறது.
3. கல்க நஸ்யத்தில் எட்டு பிந்துக்கள் உத்தம மாத்திரையும், ஆறு பிந்துக்கள் மத்திம மாத்திரையும், நான்கு பிந்துக்கள் ஹீநமாத்திரையும் ஆம் என்றறிக.
4. இரக்தமோக்ஷணம்—இதுவே விராவ்யதை யென்றும் கூறப்படும்; இதைப்பற்றிய விவரங்களை 27-வது அத்தியாயத்தில் பார்க்க.

LC N30



கள், சோதநசிகித்ஸைசெய்துகொண்டவர், வஸ்திசிகித்ஸைசெய்துகொண்டவர் இவர்களுக்கு நஸ்யம் பிரயோகிக்கக் கூடாது. அகாலத்தில் மழை பெய்கையிலும் நஸ்யமிடத்தகாது; ஆனால் அபாயகரமான ஸம்பவங்களில் தவிர மற்ற ஸமயங்களில்தான் இவ்விதி கவனிக்கத் தக்கதாகும்.—11, 12½.

வாதாதி தோஷங்களுக்கேற்ற நஸ்யமிடும் காலங்கள் :—விடியற்காலத்தில் கபக்கோளாறுகளுக்கும், பகலில் பித்தக்கோளாறுகளுக்கும், மாலையிலும் இரவிலும் வாதக்கோளாறுகளுக்கும் நஸ்யமிடலாம். ஆரோக்கியநிலைமையிலிருப்பவனுக்கு சரத் வஸந்த ருதுக்களில் முற்பகலிலும், குளிர்காலத்தில் நடுப்பகலிலும், க்ரீஷ்மருதுவில் மாலைப்பொழுதிலும், வர்ஷருதுவில் வெயில்காயும் போதும் நஸ்யம் பிரயோகிக்கவேண்டும்.—13, 14½.

அந்தந்த வியாதிகளுக்கேற்ற நஸ்யமிடுங் காலங்கள் :—சிரஸ் வாத தோஷத்தினால் பீடிக்கப்படுகையிலும், விக்கலிலும், அபதாநகம் என்கிற வாதரோகத்திலும்,[1] மந்யாஸ்தம்பத்திலும்[2], தொண்டைக்கம்மலிலும் [3]நஸ்யப்பிரயோகத்தை தினந்தோறும் காலை மாலைகளில் இரண்டுவேளைகளிலும் செய்யவேண்டும்; வேறு வியாதிகளானால் ஒரு நாள் இடையே விட்டுவிட்டுப் பிரயோகிக்கவேண்டும். இவ்வாறு வரிசையாக ஏழு நாட்கள் நஸ்யமிடலாம்.—15, 16.

நஸ்யமிடுவதற்கு முன்பு நிறைவேற்ற வேண்டிய சிகித்ஸை :—[illegible] ஸ்நேஹ சிகித்ஸையையும் ஸ்வேத சிகித்ஸையையும் செய்துகொண்டுள்ள பிணியாளி, மலவிஸர்க்கம் முதலிய அவசிய கார்யங்களை முன்னதாக முடித்துக்கொண்ட பிறகு, அவனை விசேஷ காற்றோட்டமில்லாத அறையில் சயநத்தில் படுக்கச்செய்து, தோளுக்குமேற்பட்ட அவயவங்களில் மீண்டும் அவனுக்கு ஸ்வேதகர்மம் செய்யவேண்டும்.—17.

நஸ்யமிடும் வகை :—(1) பிறகு பிணியாளியானவன் மல்லாந்து நேர்மையாக உடம்பை நீட்டிக்கொண்டு கைகால்களை நன்கு நீட்டிக் கொள்ளவேண்டும்; கால் சிறிது உயரத்திலும், தலை சிறிது பின்பக்கமாகச் சாய்ந்தும் இருக்கவேண்டும். அப்பால் உஷ்ணஜலத்தில் வைத்துக் காய்ச்சிய ஔஷதத்தை[3] ஒரு சிறிய குழாய்போன்ற கருவியினாலாவது, பிசுவினாலாவது[4] எடுத்து, நாசியின் த்வா-

1. அபதாநகம்—அபஸ்மாரம் போன்ற ஒருவித வாதரோகம்.
2. மந்யாஸ்தம்பம்—கழுத்து நரம்புகளுக்கு [illegible]
3. நஸ்யௌஷதம் அடங்கிய பாத்திரத்தை ஜலமுள்ள மற்றொரு பாத்திரத்தினுள் வைத்து நன்றாகக் கொதிவரும்படியாகக் காய்ச்சவேண்டும். இவ்விதம் செய்வதால் அவ்வௌஷதம் நஸ்யமிடுவதற்கேற்றவாறு பக்குவமாய் [illegible] சக்தியையும் அடையும்.
4. பிசு—ஒற்றடம் கொடுப்பதற்கும், திரவங்களை நனைத்துக் குறிப்பிட்ட இடங்களில் பிழிவதற்கும் ஏற்ற பஞ்சு அல்லது அதுபோன்ற மிருதுவான வஸ்து.

12074
A. 27

ரத்தை மூடிக்கொண்டு இடது த்வாரத்திலும், இடது த்வாரத்தை மூடி வலது நாசியிலும் மாற்றி மாற்றி நஸ்யத்தைப் பிழியவும். (2) நஸ்யம் பிரயோகித்தானதும், பாதங்களையும், கைகளையும், தோள்களையும், மற்றுமுள்ள அவசியமான அவயவங்களையும் ஸுகமாக மர்த்தநம் செய்யவேண்டும். அப்பால் நாசியின் இரண்டு பக்கங்களையும் மெதுவாகப் பிடித்துச் சிந்தவும். (3) எவ்வளவு ஔஷதம் நஸ்யமிடவேண்டுமோ அவ்வளவையும் ஒரே தடவையில் பிரயோகிக்க முடியாதாகையால், அவ்வளவு ஔஷதமும் செலவழியும் வரையில் இரண்டு தடவையோ மூன்று தடவையோ முற்கூறிய விதமாகப் பிரயோகிக்கவேண்டு. 18—20½.

நஸ்யமிடுகையில் மூர்ச்சையுண்டானால் செய்யவேண்டிய பரிஹாரம் :—நஸ்யம் பிரயோகிக்கையில் மூர்ச்சையுண்டானால், பிணியாளியின் மேல் குளிர்ந்த ஜலத்தைத் தெளிக்கவும்; ஆனால் சிரஸ்ஸின் உச்சியில் மட்டும் குளிர்ந்த ஜலத்தை விடக்கூடாது.—21.

விரேசந நஸ்யத்திற்குப் பின் ஸ்நேஹநஸ்ய மிடுதல் :—விரேசந நஸ்யம் பிரயோகித்து முடிந்ததும், அவரவருடைய தோஷங்கள், பிரக்ருதி, தேச காலங்கள் முதலியவற்றின் நிலைமைகளை அநுஸரித்து ஸ்நேஹ நஸ்யத்தைப் பிரயோகிக்கலாம்.—21½.

நஸ்யம் நிறைவேறியதும் செய்யும் உபசாரம் :—நஸ்யம் முடிவு பெற்றதும் நூறு மாத்திராகாலம்[1] நிமிர்ந்த நிலைமையில் பிணியாளி படுத்திருக்கவேண்டும். பிறகு தூமபானம்செய்து, தொண்டை சுத்தியாவதற்காக இளஞ்சூடான ஜலத்தை வாய்நிரம்ப விட்டு சில நிமிஷம் வைத்துக்கொண்டிருந்து கொப்பளிக்கவேண்டும்.—22½.

நஸ்யத்தினால் நன்கு ஸ்நிக்த்தமானதன் குறிகள் :—நஸ்யத்தினால் சிரஸ் நன்றாக ஸ்நிக்த்தமானால், பிணியாளி ஸுகமாக ச்வாஸம் விடுவான்; நன்கு நித்திரையுறுவான்; தகுந்த காலத்தில் நன்கு நித்திரையிலிருந்து விழித்துக்கொள்ளுவான்; புலன்கள் தெளிவடையும்.—23.

நஸ்யத்தினால் ஸ்நிக்த்தமாகாமல் ரூக்ஷமாயிருப்பதன் குறிகள் :—சிரஸ் நஸ்யத்தினால் ஸ்நிக்த்தமாகாமல் ரூக்ஷ நிலைமையடைந்திருந்தால் கண்கள் விழித்துப் பார்க்க முடியாமல் ஸ்தம்பிக்கும்; நாசியும் வாயும் சுஷ்கிக்கும்; சிரஸ் சூன்யமாயிருப்பதாகத் தோற்றும். 23½.

நஸ்யத்தினால் அதிஸ்நிக்த்தமானதன் குறிகள் :—சிரஸ் மிதமிஞ்சி ஸ்நிக்த்தமானால் தலையில் தினவும், பாரமாயிருப்பது போன்ற உணர்ச்சியும், வாயில் அதிகமாக உமிழ் நீர் ஊறுவதும், அரோசகமும், பீநஸமும் உண்டாகும்.—24.

விரேசநநஸ்யம் நன்கு நிறைவேறியதன் குறிகள் :—சிரஸ் விரேசந நஸ்யத்தினால் நன்கு சுத்தமானால் நேத்திரங்களில் குருத்

1. மாத்திராகாலம்—அதிக வேகமில்லாமலும் அதிக மெதுவாகவுமில்லாமல் நூறு எண்கள் எண்ணுவதற்கு வேண்டிய கால அளவு.



தன்மை மாறி இலகுவான உணர்ச்சியுண்டாகும்; குரல் சுத்தமாகும்; முகமும் நிர்மலமாகும்.—24½.

முறைதவறின விரேசநநஸ்யத்தினால் உண்டாகும் குறிகள் :—விரேசந நஸ்யத்தினால் தோஷம் வேண்டியவளவு வெளியாகாவிட்டால், முன் இருந்த வியாதியே விருத்தியாகும். மிதமிஞ்சி வெளியானால் மிகவும் இளைப்பும் பலஹீனமும் ஸம்பவிக்கும்.—25.

பிரதிமர்ச நஸ்யத்திற்கு உரியவர்கள் :—பிரதிமர்சநஸ்யமானது உரக்ஷதரோகிகளுக்கும், இளைத்து பலஹீனமாயிருப்பவருக்கும், பாலருக்கும், வயது முதிர்ந்தவருக்கும், ஸுகஸ்திதிகளுக்கும் பிரயோகிக்கத் தகுந்தது; இதை அகால மழை பெய்கையிலும் உபயோகிக்கலாம்.[1]—25½.

பிரதிமர்ச நஸ்யத்திற்குத் தகாதவர்கள் :—கெட்டுப்போன பீநஸ ரோகத்தில் பிரதிமர்சம் தகாததாகும்; மேலும் மதுபானம் செய்தவன், செவி மந்தப்பட்டவன், தலையில் கிருமிகளுண்டாய் வருந்துபவன், மிகவும் பிரகோபித்த தோஷங்களையுடையவன், இடம் விட்டுக் கிளர்ச்சியடைந்த தோஷங்களுடன் கூடியவன் இவர்களுக்கும் பிரதிமர்சம் உதவாது; பிரதிமர்சம் அளவில் மிகவும் குறைவாதலால், இப்பிணியாளிகளுக்கு அது பிரயோஜனப்படக்கூடியதல்ல.—26, 27.

பிரதிமர்ச நஸ்யத்திற்குப் பொதுவான நேரங்கள்:—விடியற்காலம், மாலைநேரம், வமநத்தின் முடிவு, உணவு முடிந்த ஸமயம், பகலில் நித்திரையிலிருந்து எழும் ஸமயம், வழிநடந்தபிறகு, வேலைசெய்த சிரமம் நீங்கும் ஸமயம், புணர்ச்சியின் முடிவு, சிரஸ்ஸுக்கு அப்யங்கம் செய்துகொண்டபின்பு, கண்டூஷ சிகித்ஸையின் முடிவு, மூத்திர விஸர்க்கம் செய்த பிறகு, அஞ்ஜநப்பிரயோகத்திற்குப் பிறகு, மலவிஸர்க்கத்திற்குப் பிறகு, பல் துலக்கியபிறகு, சிரிப்புக்குப் பிறகு என்னும் இந்த ஸமயங்களில் இரண்டு பிந்து அளவில் பிரதிமர்சத்தைப் பிரயோகிக்கலாம்.—28, 28½.

பிரதிமர்சத்திற்கு ஒவ்வொரு ஸமயத்தில் ஒவ்வொரு விசேஷகுணம் :—(1) விடியற்காலத்திலும், ஸாயங்காலவேளையிலும், ஆஹாரத்திற்கும்-வமநத்திற்கும்-பகல் நித்திரைக்கும் முடிவிலும்—ஆக இவ்வைந்து நேரங்களில் பிரதிமர்சத்தைச் செய்வதால் ஸ்ரோதோமார்க்கங்கள் சுத்தியடையும்; (2) வழிநடத்தல், பலமான வேலைகளைச் செய்வதாலான சிரமம், புணர்ச்சி இவற்றின் முடிவில் பிரதிமர்சம் செய்வதால் தேஹவாட்டம் தீரும். (3) சிரஸ்நானம், கண்டூஷம், மூத்திரவிஸர்க்கம், அஞ்ஜனமிடுதல், மலவிஸர்க்கம் இவைகளைக்

1. பிரதிமர்ச நஸ்யம் வெகு சிறிய அளவில் மிருதுவான ஔஷதங்களால் செய்யப்படுவதால் எத்தகைய நிலைமையிலும் பிரயோகிக்கலாம் என்பதை அடுத்த வாக்கியத்தில் அறியலாம்.

திற்கும் முடிவில் பிரதிமர்சம் செய்வதால் கண்களுக்கு பலம் உண்டாகும். (4) தந்தசுத்தி செய்தபிறகு பிரதிமர்சம் செய்வதால் பற்கள் பலப்படும். (5) பெருஞ்சிரிப்புக்குப் பிறகு பிரதிமர்சம் பிரயோகிப்பதால் வாதம் சமாமடையும்.—29½.

நஸ்ய-தூமபாந கபள-சோதநங்களுக்குத் தகாத வயதினர்கள் :—(1) ஏழு வயதுக்குக் குறைந்தவர்களுக்கும், எண்பது வயதுக்கு மேற்பட்டவருக்கும் நஸ்யமிடக்கூடாது. (2) பதினெட்டு வயதுக்குக் குறைந்த வயதினர் தூமபாநம் செய்யக்கூடாது. (3) ஐந்து வயதுக்குக் குறைந்த சிறுவர்களுக்கு கபளக்ரஹம்[1] தகாது. (4) பத்து வயதுக்குக் கீழ்ப்பட்டவருக்கும், எழுபது வயதுக்கு மேற்பட்டவருக்கும் வமந- விரேசநம் முதலிய சோதநசிகித்ஸை தகாது.—30, 31.

பிரதிமர்சத்தின் மேன்மை :—பிரதிமர்சமானது வஸ்தி சிகித்ஸையைப் போல பிறந்தது முதற்கொண்டு இறக்கும் வரையில் எப்பொழுதும் நன்மை தரக்கூடியதாகும்; தினந்தோறும் உபயோகித்து வந்தால் அது மர்சநஸ்யத்திற்குண்டான குணங்களையும் உண்டுபண்ணும்; இதைச் செய்து வரும்போது வேறு விதமான எவ்வித நிர்ப்பந்தமும் கிடையாது; மர்சநஸ்யத்தைச் செய்து வருகையில் ஏற்படக்கூடிய விதேனும் தீமைகள் ஸம்பவிக்குமோ வென்கிற பயமும் இதிற் கிடையாது.—32, 32½.

ஆரோக்கிய சாலிகளுக்கேற்ற நஸ்யௌஷதம் :—ஆரோக்கிய நிலைமையி லிருப்பவன் எப்பொழுதும் உபயோகிப்பதற்குத் தைலமே சிறந்ததாகும். சிரஸானது கபத்திற்கு ஸ்தாநமாயிருப்பதால், வேறு விதமான ஸ்நேஹ வஸ்துக்கள் உபயோகிக்கத் தகுந்தவையாகா.—33½.

மர்ச-ப்ரதிமர்சங்களுக்குள்ள குணபேதங்கள் :—மர்சநஸ்யமானது வெகு சீக்கிரம் தனது செய்கையை நிறைவேற்ற வல்லதும், இதர குணங்களில் சிறப்புற்றதுமாயிருக்கும்; பிரதிமர்சமோ வேலையை வெகு மந்தமாகச் செய்வதுடன், குணத்திலும் அவ்வளவு சிறப்புடையதல்ல. மர்சத்திற்கும் பிரதிமர்சத்திற்கும் இவ்வித பேதங்கள் இல்லாவிட்டால், பலவித நிர்ப்பந்தங்களோடு பிரயோகிக்க வேண்டியதும், சிறிது முறைதவறினால் ஆபத்தை விளைவிக்கக்கூடியதுமான மர்சநஸ்யத்தை அப்பால் எவன் உபயோகிப்பான்? அச்சபாநஸ்நேஹமென்ன-வேறு பல வஸ்துக்களுடன் கலந்து உட்கொள்ளப்படும் ஸ்நேஹமென்ன இவ்விரண்டுக்கும், குடீப்ராவேசிக சிகித்ஸையென்ன-வாதாதபிக சிகித்ஸையென்ன இவ்விரண்டுக்

1. சிரஸ் கபஸ்தாநமாதலால், கபத்திற்குச் சமநம் அல்லது பரிஹாரம் செய்யக்கூடிய ஸ்நேஹம் தைலமே; அதிலும் முக்கியமாக இங்கு எள்ளெண்ணெயைக் குறிக்கப்படுகிறது என்றறிக. தைலத்தின் குணங்களையும் மற்ற விவரங்களையும் பற்றி 50-ம் பக்கம்பார்க்க.



கும்,[1] அநுவாஸநவஸ்தியென்ன-மாத்ராவஸ்தியென்ன இவற்றிற்கும் முறையே மர்ச-ப்ரதிமர்சங்களுக்குள்ள பேதங்கள் உண்டென்று கூறலாம். 34—36.

அணுதைலம் :—நிருநீர்ப்பாலை, வெட்டிவேர், தேவதாரு, கோரைக்கிழங்கு, இலவங்கப்பட்டை, குருவேர், நன்னாரி, சந்தநம், மரமஞ்சளின் மேற் புறணி, அதிமதுரம், பூவரசம்பட்டை, அகில், த்ரிபலை, நாமக்கரும்பு, பில்வம், நைதல், கண்டங்கத்திரி, கத்திரி, ஆனைவணங்கி, மல்லிகை, மோர்மல்லிகை, வாய்விடங்கம், இலவங்கப் பத்திரி, சிற்றேலம், அரேணுகம், தாமரைப்பூவின் தாது இச் சரக்குகளை இவற்றிற்கு நூறு மடங்கு அளவான ஹம்ஸோதகத்தில் சேர்த்துக் காய்ச்சவேண்டும். இவ்விதம் காய்ச்சி யெடுக்கப்படும் க்வாதமானது அதில் சேர்க்கப்படும் தைலத்தினும் அளவில் பத்து மடங்கு அதிகமானதாயிருக்கவேண்டும்; இக்கஷாயத்தில் தைலத்தை முற்கூறிய விதமே பத்து முறை பக்குவம் செய்து எடுக்கவும். பத்தாவது தடவை பக்குவம் செய்கையில், தைலத்திற்குச் சமான அளவில் வெள்ளாட்டுப் பாலைச் சேர்க்கவேண்டும். இது மிகச் சிறப்பான குணங்களைப் பெற்றதும் 'அணுதைலம்' என்னும் பெயருடையதென்றும்[2] நமது பெரியோர் கூறுவர்.—37, 38.

நஸ்யப் பிரயோகத்தின் பலன்கள் :—நஸ்யத்தை அப்யஸித்து வருபவர் உரத்துப் பருத்து அழகாகச் செழித்து வளர்ந்த சர்மத்துடன் கூடிய தோள்களையும் கழுத்தையும் முகத்தையும் மார்பையும் உடையவர்களாய், திடமான இந்த்ரியங்களைப் பெற்று, நரை திரையின்றி ஸுக சரீரிகளாயிருப்பர்.—39.

## இருபத்தோராம் அத்தியாயம்.

### தூமபாந விதி.

அப்பால் தூமபாந விதி[3] என்னும் அத்தியாயம் விவரிக்கப்படுகின்றது :—

1. கனமான இரண்டொரு சுவர்களால் சூழப்பட்டு, காற்றோட்டத்திற்கு அதிக அவகாசமில்லாமல் திடமாக (இச்சிகித்ஸைக் கென்று) கட்டப்பட்ட கர்ப்பக்ருஹத்தின் பின்பாகத்தில் இருந்துகொண்டு இரஸாயனௌஷதம் உபயோகிப்பதற்கான ஒருவித முறை குடீப்ராவேசிக சிகித்ஸை என்று சொல்லப்படும். வீட்டுக்கு வெளியில் விசேஷமாய் வாயுஸஞ்சாரமும் மந்தமான வெயிலும் வியாபிக்கும் இடங்களில் இருந்துகொண்டு செய்துகொள்ளும் இரஸாயந சிகித்ஸை வாதாதபிகம் எனப்படும்.

2. அணு என்றால் ஸூக்ஷ்மம்; மிகவும் ஸூக்ஷ்மமான இரத்தக்குழாய் முதலிய ஸ்ரோதஸ்ஸுகளில் உட்புகுந்து சென்று தாதுக்களில் பரவும் குணமுடையதென்று கருதி இத்தைலத்திற்கு "அணுதைலம்" என்று பெயரிடப்பட்டது. இது நஸ்யமிடுவதற்கு வெகு உபயோகமான தைலம்.

3. வியாதிநிவாரணத்தின் பொருட்டுப் புகையை உட்கொள்ளும் சிகித்ஸாக்கிரமத்தைக் கூறும் அத்தியாயம் 'தூமபாநவிதி' எனப்படுகிறது.

**தூமபானத்தின் உபயோகம்:**—தோளுக்கு மேற்பட்ட அவயவங்களில் கபம்-வாதம் இவற்றாலான வியாதிகள் உண்டாகாமலிருப்பதற்கும், உண்டான வியாதிகளைப் போக்குவதற்கும் தூமபானம் செய்யலாம். ஆனால் எப்பொழுதும் தனது நிலைமை யறிந்து அதை மிதமாயுபயோகித்து வரவேண்டும்.—1.

**மூன்றுவித தூமங்கள்:**—அதில் 'ஸ்நிக்த்த தூமம்' என்றும், 'மத்திமதூமம்' என்றும், 'தீக்ஷ்ண தூமம்' என்றும் மூன்று வகைகள் உண்டு; அவற்றுள் முதலிற் கூறியதை வாதவிகாரத்திலும், இரண்டாவது கூறியதை வாதகபங்களாலுண்டாகும் கோளாறிலும், இறுதியிற் கூறியதை கபக்கோளாறிலும் உபயோகிக்கவேண்டும்.—1½.

**தூமபானத்திற்குத் தகாதவர்கள்:**—இரக்த பித்தரோகி, விரேசக சிகித்ஸை செய்துகொண்டவன், மஹோதரம் முதலிய வயிற்றைப் பற்றிய வியாதிகளையுடையவன், பிரமேஹரோகி, திமிரம் என்னும் நேத்திரரோக முள்ளவன், கிரமப்பட்டுப் பெருமூச்செறிபவன், வயிற்றுப் பொருமலுள்ளவன், ரோஹிணீ ரோகமுள்ளவன்,[1] வஸ்திகிசித்ஸை செய்துகொண்டவன், மத்ஸ்யம்-மது-தயிர்-பால்-தேன்-ஸ்நேஹ வஸ்து-விஷப்பொருள் இவற்றை உட்கொண்டவன், தலையில் அடிபட்டவன், பாண்டுரோகி, இரவில் கண்விழிப்பவன் ஆகியவர்களுக்கு தூமம் உதவாது. 2—3½.

**தூமபானம் அகாலத்திலும் அளவு மீறியும் செய்வதாலான தீங்குகளும் பரிஹாரமும்:**—தூமபானத்தை அகாலத்திலாவது அதிக அளவாகவாவது உபயோகித்தால் இரக்தபித்தம், கண் தெரியாமை, செவிட்டுத்தனம், தாவரட்சி, மூர்ச்சை, வெறி, மயக்கம் இவற்றை உண்டு பண்ணும். அவ்வித முண்டானால், அதில் சீதோபசாரம் செய்வது ஹிதமாயிருக்கும்.—4½.

**மூன்றுவித தூமங்களையும் பிரயோகிக்கும் காலங்கள்:**—(1) தும்மல், கொட்டாவி விடுதல், மல மூத்திர விஸர்க்கம், புணர்ச்சி, சஸ்திர சிகித்ஸை, சிரித்தல், தந்ததாவநஞ் செய்தல் இக்காரியங்களின் இறுதியில் மிருதுதூமத்தைப்[2] பானம் செய்யலாம். (2) முற்கூறிய காலங்களிலும், விடியற்காலத்திலும், போஜனத்தின் முடிவிலும், நஸ்யம் செய்து முடித்த ஸமயத்திலும் மத்திமதூமம் பிரயோகிக்கலாம். (3) நித்திரை செய்து கண் விழிக்கையிலும், நஸ்யத்தின் முடிவிலும், அஞ்ஜனமிட்டானதும், ஸ்நாநம் செய்தபிறகும், வாந்தி யெடுத்து முடிந்ததும் விரேசநதூமத்தைப்[3] பிரயோகிக்கலாம். 5—6½.

---

1. ரோஹிணீ—அக்னிரோஹிணியென்றும் பெயர். விசேஷ ஜ்வரத்துடன் அக்குள் முதலான இடங்களில் உண்டாகும் பிளவை.
2. மிருது தூமம்—இதுவே ஸ்நிக்த்த தூமம் எனப்படும்.
3. விரேசக தூமம்—இதுவே தீக்ஷ்ணதூமம் எனப்படும்.



**தூமநேத்திரத்தின் அமைப்பு:**—வஸ்திநேத்திரம் செய்வதற்கு எவ்வித வஸ்துக்கள் கூறப்பட்டிருக்கின்றனவோ அதே வஸ்துக்களால் தூமபானம் செய்வதற்கும் நேத்திரத்தை நிர்மிக்கவேண்டும்; அந்த நேத்திரம் வளைவு முதலியது இல்லாமல், மூன்று அறைகள் உள்ளதாய்[1], அடியில் பெருவிரல் நுழையும்படியாகவும் முனையில் இலந்தங்கொட்டை நுழையும்படியாகவுமுள்ள த்வாரங்களுடன் கூடியதாய் அமைக்கப் படவேண்டும்.—7½.

**மூன்றுவித தூமங்களுக்கும் வெவ்வேறு நேத்திரங்கள்:**—(1) நேத்திரமானது தீக்ஷ்ணதூமத்திற்கு இருபத்துநான்கு அங்குல நீளமாகவும், (2) ஸ்நேஹ தூமத்திற்கு முப்பத்திரண்டு அங்குலம் நீளமாகவும், (3) மத்திம தூமத்திற்கு நாற்பது அங்குல நீளமாகவும் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.[2]—8½.

**தூமபானம் செய்யும் வகை:**—நேராக உட்கார்ந்துகொண்டு, வேறு விஷயத்தில் கவனம் செலுத்தாமல் அதே மனதாயிருந்து, வாயை மூன்று முறை திறந்துகொடுத்து, நாசியின் ஒவ்வொரு த்வாரத்தையும் மாற்றி மாற்றி மூடி தூமத்தை நாசியினாலேயே உறிஞ்சவேண்டும். தோஷமானது நாசியிலாவது சிரஸிலாவது இருந்தாலும், அது இடம் விட்டுக் கிளம்பப்பட்டிருந்தாலும் முதலில் தூமத்தை நாசியினாலேயே உறிஞ்சலாம். அதற்கு மாறாக தோஷம் தொண்டையைப்பற்றியிருந்தால் அதைக் கிளப்பி வெளிப்படுத்துவதற்காக முதலில் வாயினாலேயே தூமபானம் செய்யலாம். உட்கொண்ட தூமத்தை வாயினாலேயே வெளியிடவேண்டும்; நாசியினால் வெளியிட்டால் அது நேத்திரத்திற்குக் கெடுதியை உண்டு பண்ணும். தூமத்தை ஒவ்வொரு முறையும் மும்மூன்று தடவை உறிஞ்சு உறிஞ்சு வெளியிட்டுக்கொண்டே உபயோகிக்கவேண்டும். பகலில் தூமபானம் செய்தால் ஸ்நிக்த்த தூமம் இரண்டு முறையும், தீக்ஷ்ண தூமம் மூன்று அல்லது நான்கு முறையும் உபயோகிக்கக் கூடியதாம். 9—12.

**ஸ்நேஹதூமத்திற்கான சரக்குகள்:**—அகில், மஹிஷாக்ஷிகுக்குலு, கோரைக்கிழங்கு, சவிந்தி, கல்மதம், சவுட்டுக் கோரை, வெட்டிவேர், விளாமிச்சைவேர், கிராம்பு, தக்கோலம், அதிமதூரம், பில்வப்பிசின், சிற்றேலம், ஸாளமரப்பிசின், ஸர்ஜவிருக்ஷத்தின் பிசின், குவளம், மருக்காரை, பூவரசு, யானை வணங்கி, குங்குமப்பூ, உளுந்து, யவதான்யம், குந்துருகம் என்னும் வாஸனைத் திரவ்யம்,

---

1. மூன்று அறைகள் என்றால்—நேத்திரத்தில் இடையிடையே இரண்டு கணுக்களை அமைத்து, த்வாரத்தை ஒருவாறு சிறியதாகச் செய்தல்; இதனால் தூமம் ஒரே குவியலாக மேல் எழும்பாமல் சிறிது தடைப்பட்டு மேலேறும்.
2. இங்கு தூமநேத்திரத்திற்கு அநேக கணுக்களும், அதற்கு அதிக நீளத்தையும், ஸூக்ஷ்மமான த்வாரத்தையும் அமைப்பதால், தூமம் கண் காது முதலிய இந்த்ரியங்களுக்குத் தீங்குண்டுபண்ணாது என்பது கொள்கை.

ள், கனிகளுடையவும் பின் அல்லது ஸாரங்களுடையவும் ஸ்நேஹ பதார்த்தம், கொழுப்பு, மஜ்ஜை யென்னும் எலும்புக்குள்ளிருக்கும் ஒருவித கொழுப்பு, விளையென்னும் ஒருவித கொழுப்புவஸ்து, நெய் இப்பதார்த்தங்கள் மிருது தூமம் என்னும் ஸ்நேஹ தூமத்திற்கு உபயோகமானவையாம். 13—15.

மத்திம தூமத்திற்கான சரக்குகள்:—அலிவணங்கி, கொம்பரக்கு, ஏலம், தாமரை, கைதல், ஆல், அத்தி, அரசு, பூவரசு, வெள்ளிலோத்தி, சர்க்கரை, அதிமதுரம், சரக்கொன்னை, பத்மகம், மஞ்ஜிஷ்டி, கோஷ்டம் தகரம் இவ்விரண்டைத் தவிர மற்ற ஸுகந்த வஸ்துக்கள் இவை சமன தூமத்திற்கு[1] உபயோகமானவை. 16, 16½.

தீக்ஷ்ண தூமத்திற்கு உபயோகமான சரக்குகள்:—வாலுளுவை, மஞ்சள், தசமூலம், மனச்சிலை, தாளகம், கொம்பரக்கு, அதிவிடயம், த்ரிபலை, தீக்ஷ்ணவீர்யமுள்ள ஸுகந்த வஸ்துக்கள் என்னும் இவை விரோசனத்திற்கு உபயோகமான சரக்குகளாம்.—17, 18.

தூமவர்த்தி:—பன்னிரண்டு அங்குலம் நீளமான சர்க்கை ஒரு நாள் முழுவதும் ஜலத்தில் ஊறவைத்து எடுக்கவும்; முற்கூறிய தூமத்திற்கான சரக்குகளை நன்கு கல்கம்போல் அரைத்து அந்த சர்க்கின்மேல் ஐந்து முறை லேபநம் செய்யவும்; வர்த்தியானது பெருவிரலைப் பருமனுள்ளதாயும், யவத்தானியம் நுழையக்கூடிய த்வாரமுள்ளதாகவும் இருக்கும்படி கல்கத்தைப் பூசி, நிழலில் உலர்த்த வேண்டும்; உலர்த்தியபிறகு உள்ளடங்கிய சர்க்கை மெதுவாக இழுத்து வெளிப்படுத்திவிடவும். இந்த வர்த்தியை அந்தந்த வியாதிக்குத் தகுந்த வகைகளும் ஸ்நேஹத்தினால் நனைத்து, தூமபானஞ்செய்வதற்கென்று அமைக்கப்பட்டுள்ள நேத்திரத்தினுள் அதைச் செலுத்தி, அக்னியில் ஒரு முனையைக் கொளுத்தி தூமபானம் செய்யவும்.—19, 20½.

தூமபானத்திற்கு மற்றொரு முறை:—இரண்டு மண் அகல்களை எடுத்துக்கொள்ளவும்; ஒரு அகலில் புகையில்லாத நெருப்புத்தணல்களை யிட்டு, அதில் முற்கூறிய தூமத்திரவ்யங்களைப் பொடித்துச் சேர்த்து, அதன்மேல் இடையில் த்வாரமிட்ட இரண்டாவது அகலை மூடி, அந்த த்வாரத்தில் பத்து அல்லது எட்டு அங்குலம் நீளமான குழாயை வைத்து, காஸரோகி அதன்மூலமாய் வாயினுல் தூமத்தை உறிஞ்சவேண்டும்.—21½.

தூமபானத்தின் குணங்கள்:—காஸம், ச்வாஸம், பீநஸம், தொண்டைக் கம்மல், வாயில் துர்நாற்றம், முகம் வெளிறியிருத்தல், தலைமயிர் ஸம்பந்தமான தோஷம், காதில் சீழ்வடிதல், வாயில் உமிழ்நீர் அதிகமாகக் கசிதல், நேத்திரத்திலிருந்து கண்ணீர்வடிதல், உடம்பில் கனவு, உடம்புவலி, திமிர்த்துப்போதல், சோம்பல், விக்கல் இவ்வியாதிகள் தூமபானம் செய்பவரிடம் சிறிதும் அணுகா.—22.

1. சமனதூமம்—மத்திம தூமத்திற்கே மற்றொரு பெயர்.



# இருபத்திரண்டாம் அத்தியாயம்.

## கண்டூஷாதி விதி.

பிறகு கண்டூஷாதி விதி[1] என்னும் அத்தியாயம் விவரிக்கப்படுகின்றது:—

கண்டூஷம் நான்கு விதம்:—கண்டூஷமானது ஸ்நிக்தம் என்றும், சமனம் என்றும், சோதனம் என்றும், ரோபணம் என்றும் நான்கு விதமாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது.—½.

ஒவ்வொரு கண்டூஷத்தையும் பிரயோகிக்கத் தகுந்த தோஷங்கள்:—அவற்றுள் ஸ்நிக்த கண்டூஷம் வாதரோகத்திலும், சமனம் பித்தத்திலும், சோதனம் கபத்திலும் பிரயோகிக்கக் கூடியவையாம்; இறுதியிற் கூறிய ரோபண கண்டூஷம் விரணஹரமாய் உபயோகிக்கப்படுகின்றது.—1½.

கண்டூஷம் நான்கிலும் உபயோகமான சுவையுள்ள வஸ்துக்கள்:—மதுரசுவையும், அம்லசுவையும், லவணரஸமுமுள்ள பதார்த்தங்களால் பக்குவம் செய்யப்பட்ட ஸ்நேஹவஸ்துக்களால் ஸ்நிக்த கண்டூஷத்தை நிறைவேற்றலாம். கைப்பு, துவர்ப்பு, இனிப்பு என்னும் சுவைகளையுடைய ஔஷதங்களால் சமனகண்டூஷத்தைச் செய்யலாம். கைப்பும், கார்ப்பும், துவர்ப்பும், லவணரஸமும் உள்ள உஷ்ண வீர்யமுமுடைய ஔஷதங்களால் சோதன கண்டூஷத்தை நிறைவேற்றலாம். துவர்ப்பும் கைப்புமான வஸ்துக்களால் ரோபண கண்டூஷம் செய்யலாம்.—2, 2.

கண்டூஷத்திற்கான பலவித வஸ்துக்கள்:—அவ்வித கண்டூஷங்களில் ஸ்நேஹம், பால், தேன், ஜலம், சுக்தம்[2], மத்யம், மாம்ஸரஸம், கோமூத்திரம், காடி இவற்றுள் எதையாகினும் அந்தந்த நிலைமைகளுக்குத் தகுந்தவாறு கல்கங்களுடன் கலந்து பக்குவம் செய்தோ, பக்குவம் செய்யாமல் குளிர்ந்த நிலைமையிலோ அவரவருக்கு எவ்வித பரிசம் ஹிதமாயிருக்குமோ அவ்விதமாகவே கண்டூஷமாகப் பிரயோகிக்கலாம்.—3, 4.

திலகல்கத்தின் கண்டூஷம்:—பற்கள் கூசிப்போன நிலைமையிலும், பற்கள் ஆட்டங்கொண்டிருக்கையிலும், வாதஸம்பந்தமான முகரோகத்திலும் இளஞ்சூடாகவோ, அல்லது குளிர்ந்ததாகவோ உள்ள எள்ளின் கல்கம் கலந்த நீர் ஹிதமாயிருக்கும்.—5.

தைல-மாம்ஸரஸ கண்டூஷங்கள்:—எப்பொழுதும் ஸாதாரணமாய் கண்டூஷமாக உபயோகிப்பதற்குத் தைலம் அல்லது மாம்ஸரஸம் ஹிதமானதாம்.—5½.

1. கண்டூஷம் என்றால் வாயில் நிரம்பவும் திரவ வஸ்துவைச் சேர்த்துக் கொப்புளித்தல். ஔஷதகுணமுள்ள கண்டூஷங்களையும், கபளக்கிரஹத்தையும், பிரதிஸாரணத்தையும், மூர்த்த தைலம் முதலியவற்றையும் விவரிக்கும் விஷயங்கள் அடங்கிய அத்தியாயம் எனப் பொருள்.

2. சுக்தம் 54—ம் பக்கம் பார்க்க,

கிருத-க்ஷீர கண்டூஷங்கள் :—அழற்சியோடும் உஷ்ணஸம்பந்தமான எரிச்சலோடும் கூடிய வேக்காட்டிலும், அபிகாதத்தினாலுண்டான விரணத்திலும், விஷமாவது அக்கினியாவது க்ஷாரமாவது தாக்கியுண்டான தக்தத விரணத்திலும் கிருதமாவது பாலாவது கண்டூஷமாக உபயோகிக்கத் தகுந்ததாம்.—6½.

மதுகண்டூஷம் :—தேனை வாயில் கண்டூஷமாக விட்டுக்கொண்டு உபயோகித்தால், அது வாய்க்கு முரமுரப்பையுண்டு பண்ணும்; அழற்சியையும் வரட்சியையும் போக்கும்.—7½.

தான்யாம்ல கண்டூஷம் :—இலவணம் கலந்த காடியானது வாயின் அரோசகத்தையும், அழுக்கையும், துர்நாற்றத்தையும் போக்கும். அதை இலவணம் கலக்காமல் குளிர்ந்த நிலைமையில் உபயோகிக்க, வாயின் வரட்சியை நன்றாகப் போக்கும்.—8½.

க்ஷாரஜல கண்டூஷம் :—ஏதேனும் க்ஷாரவகைகள் கரைத்த ஜலத்தை கண்டூஷமாய் உபயோகித்தால் அது சடாவஸ்த்தையடைந்துள்ள கபத்தை சீக்கிரத்தில் நிவிருத்தி செய்யும்.—9.

ஸுகோஷ்ணோதக கண்டூஷம் :—இளஞ்சூடான ஜலத்தினால் கண்டூஷம் செய்தால், முகத்திலுண்டாயிருந்த அருவருப்புகள் நீங்கி ஒருவாறு இலாகவமும் உண்டாகும்.—9½.

கண்டூஷமுபயோகிக்கும் முறை :—விசேஷ காற்றோட்டமில்லாததும், சூர்யவெளிச்சமுள்ளதுமான பிரதேசத்தில், முன்னதாய் தோளிலும் கழுத்திலும் ஸ்வேதகர்மத்தைச் செய்து, அவ்விடங்களில் நன்கு மர்த்தநம் செய்தபிறகு, முற்கூறியவற்றுள் ஏதேனும் ஒன்றை வாயில் ஊற்றிக்கொண்டு, அந்த கண்டூஷத்தை விழுங்கிவிடாமல் தலையை நிமிர்த்தவாறு சிறிதுநேரம் அப்படியே வைத்திருக்கவேண்டும். வாய் நிரம்பவும் கபம் சுரந்து பூர்ணமாகும் வரையிலுமாவது, மூக்கிலும் கண்களிலும் ஜலம் பெருகும் வரையிலுமாவது, கண்டூஷத்தை வாயிலேயே வைத்திருக்கவேண்டும்.—10, 11.

கண்டூஷ கபளங்களின் பேதம் :—வாயில் நிரம்பவும் திரவத்திரவ்யத்தை ஊற்றிக்கொண்டு, அந்த திரவம் வாயினுள் சிறிதும் அசைவதற்கு முடியாமலிருந்தால் அது கண்டூஷம் ஆகும். அப்படியின்றி வாயினுள் திரவம் அசைவதற்கு இடம் இருந்தால் அதற்கு கபளம் என்று பெயர்.—11½.

கபளத்தினால் நிவிருத்திக்கக் கூடிய வியாதிகள் :—கபளத்தை வாயினுள் அடக்கிக் கொண்டிருந்தால் பிடரியிலுண்டாகும் வலியும், தலைவலியும், காதுநோவும், வாயினுள் உண்டாகும் நோய்களும், நேத்திர ரோகங்களும், வாயில் உமிழ்நீர் ஊறுவதும், தொண்டையிலுண்டாகும் வியாதிகளும், வாய் வரண்டு போவதும, இருதயத்தின் இயற்கைக்கு மாறான படபடத்த சலனமும், சோம்பலும், அரோசகமும், பீநஸமும் நிவிருத்தி செய்யக் கூடியவை.—12.



பிரதிஸாரணம் மூன்று விதம் :—பிரதிஸாரணம்[1] என்பது கல்கம்,[2] இரஸக்ரியை,[3] சூர்ணம் என்று மூன்று விதமாகும். கண்டூஷத்திற்குக் கூறப்பட்டுள்ள ஔஷதங்களைக் கொண்டே அதை கபரோகங்களில் பிரயோகிக்க வேண்டும்.—13.

முகலேபநம் மூன்று விதம் :—முகலேபநம்[4] மூன்று விதமாம்; அவையாவன, 'தோஷஹரம்'[5], 'விஷஹரம்'[6], 'வர்ணகரம்'[7], என்பவையாம். வாத-கப விகாரங்களில் உஷ்ணஸ்பர்சமுள்ளதும், மற்ற எல்லாவித தோஷங்களிலும் மிகவும் குளிர்ச்சியாயிருப்பதுமான முகலேபநத்தை உபயோகிப்பது நலம்.—14.

முகலேபநத்தில் மூன்றுவித அளவுகள் :—அந்த லேபநம் முறையே இரண்டு அங்குலம் பருமனாகவும், ஒன்றரை அங்குலம் பருமனாகவும், அரை அங்குலம் பருமனாகவும் ஆக மூன்றுவிதமான அளவில் பூசப்படலாம்.—14½.

முகலேபநம் ஈரமாயிருக்க வேண்டும் :—முகலேபநம் ஈரமாயிருக்கும் வரையில் அப்படியே முகத்தில் இருக்கலாம். அது உலர்ந்துவிட்டால் முகத்தின் பொலிவைப் பாழாக்கிவிடும். லேபநம் உலர்ந்து விட்டால் அதை ஈரமாகச் செய்து எடுத்துவிட வேண்டும். அதன் பிறகு அப்யங்கஸ்நாநம் செய்யவும்.—15½.

முகலேபநம் செய்துகொண்டவருக்குத் தகாதவைகள் :—முகலேபநம் செய்துகொண்டவர் பகலில் நித்திரையுறக் கூடாது; பிரஸங்கம் செய்வதும், அக்னிக்கு அருகிலிருப்பதும், வெய்யிலில் நடமாடுவதும், மனத்துயரமும், கோபமும் அவர்களுக்கு ஆகாது.—16.

முகலேபநத்திற்குத் தகாதவர்கள் :—பீநஸரோகிக்கும், அஜீர்ணத்தினால் வருந்துபவனுக்கும், நஸ்யசிகிச்சை செய்துகொண்டவனுக்கும், ஹநுக்கிரஹம் என்னும் வாதரோகத்தினால் பீடிக்கப்படுபவனுக்கும், அரோசகமுள்ளவனுக்கும், இரவிற் கண்விழித்தவனுக்கும் முகலேபநம் தகாது.—16½.

முகலேபநத்தினால் தீரும் வியாதிகள் :—முகலேபநம் நன்றாக உபயோகிக்கப்படுமானால், அது அகாலத்தில் மயிர்நரைத்தல்,

1. பிரதிஸாரணம்—வாயிலும் தொண்டையிலும் கபம் அதிகரித்துண்டாகும் வீக்கம், விரணம் முதலியவற்றைப் போக்குவதற்குப் பூசப்படும் ஔஷதம்.
2. கல்கம்—களிப்புபோல் அல்லது துவையல் போல் அரைக்கப்பட்ட ஔஷதம்.
3. இரஸக்ரியை—கஷாயம் முதலியதை மீண்டும் சுண்டக்காய்ச்சியெடுக்கப்படும் லேஹ்யம்போன்ற பாகம்.
4. முகலேபநம்—முகத்தின்மேல் பூசப்படும் மருந்து
5. தோஷஹரம்—வாத-பித்த-கபங்களைத் தணிக்கும் அல்லது சமநப்படுத்தும் ஔஷதம்.
6. விஷஹரம்—விஷத்தைப் போக்குதல்.
7. வர்ணகரம்—நல்ல இயற்கை நிறத்தை உண்டு பண்ணுதல்.

ஸியங்கம் என்னும் தேமல், சரீரத்தளர்ச்சி, திமிரம் என்னும் நேத்திர ரோகம், நீலிகா என்னும் மறு இவற்றைப் போக்கும்.—17½.

ஆறு ருதுக்களிலும் வெவ்வேறு முகலேபன முறைகள் :—(1) இலந்தக்கொட்டை, ஆடாதோடையின் வேர், வெள்ளிலோத்தி, வெண் கடுகு இவற்றின் லேபம் ஹேமந்தருதுவில் உபயோகிக்கத் தகுந்தது. (2) கண்டங் கத்திரியின் வேர், எள், திப்பிலி, மரமஞ்சளின் தோல், உமிநீங்கிய வாற்கோதுமை இவை சிசிரருதுவில் முகலேபனத்திற்கு ஏற்ற சரக்குகள். (3) தர்ப்பவேர், பன்னீர், வெட்டிவேர், காட்டு வாகை, ஜடாமாம்ஸீ, வெட்பாலரிசி இப்பதார்த்தங்கள் வஸந்தருதுவில் முகலேபனத்திற்கு உபயோகமானவை. (4) ஆம்பல், நைதல், செங்கழுநீர், அருகு, அதிமதுரம், சந்தனம் இச்சரக்குகள் கிரீஷ்மருதுவில் உபயோகமானவை. (5) மரமஞ்சள், எள், வெட்டிவேர், ஜடாமாம்ஸீ, கிரந்தி தகரம், பத்மகம் இவற்றை வர்ஷருதுவில் முகலேபனத்திற்கு உபயோகிக்கலாம். (6) தாளிசப் பத்திரி, முத்தக்காசு, நாமக்கரும்பு, அதிமதுரம், நாணல், நதமென்னும் ஸௌகந்தவஸ்து, அகில் இவை சரத்ருதுவில் முகலேபனத்திற்கு ஏற்ற ஔஷதச் சரக்குகளாம். 18—21.

முகலேபனத்தினால் உண்டாகும் குணம் :—முகலேபனத்தை வழக்கமாய் உபயோகித்துவருபவருடைய கண்பார்வை மேன்மேலும் திடமாகும்; முகமும் வாட்டமின்றி மழமழப்பாய் கமலமலரைப்போல அழகாகத் தோன்றும்.—22.

மூர்த்ததைலம் நான்கு விதம் :—மூர்த்ததைலம் என்னும் சிரஸில் தைலம் இடப்படும் முறையானது "அப்யங்கம்" என்றும் "ஸேகம்" என்றும், "பிசு" என்றும், "வஸ்தி" என்றும் நான்கு வகைப்படும். இவற்றுள் ஒன்றைவிட மற்றொன்று மேன்மேலும் முறையே குணத்தில் வெகு விசேஷித்ததாகும்.—23.

நான்குவித மூர்த்த தைலங்களின் உபயோகங்கள் :—(1) அவற்றுள் அப்யங்கமானது ரூக்ஷத்தன்மையிலும், சொறி அல்லது தினவு அதிகரிக்கையிலும், அழுக்கு அதிகம் சேர்ந்திருக்கையிலும், மற்றும் அதுபோன்ற வேறு நிலைமைகளிலும் உபயோகிக்கத் தகுந்ததாம். (2) தலையில் சிரங்கு உண்டாயிருக்கையிலும், தலைவலியிலும், அழற்சியிலும், வேக்காட்டிலும், மற்றும் சில விரணங்களிலும் ஸேகம் என்னும் மூர்த்ததைலம் உபயோகமானது. (3) தலைமயிர் உதிர்கையிலும், தலையின் சர்மம் வெடிக்கையிலும், கண்ணெரிதலிலும், நேத்திரம் ஸ்தம்பித்துப் போகையிலும் பிசு என்னும் மூர்த்த தைலம் பிரயோகிக்கக் கூடியதாம். (4) சிரஸின் ஸம்பந்தமான திமிர், அர்திதம், இரவிற் கண் விழித்தல், நாசி உலர்ந்து போதல், வாய் உலர்ந்துபோதல், திமிரம் என்னும் நேத்திர ரோகம், கடுமையான தலைவலி இவற்றில் வஸ்தி என்னும் மூர்த்த தைலத்தை உபயோகிக்க வேண்டும். 23½—25½.



சிரோவஸ்தியை நிறைவேற்றும் முறை :—சிரோவஸ்தியைச் செய்யும்முறை பின்வருமாறு:—சோதன சிகிச்சை செய்துகொண்டு ஸ்நேஹமும் ஸ்வேதமும் பண்ணி ஸம்ஸ்காரம் செய்துகொண்ட பிறகு, அப்பிணியாளி மாலை நேரத்தில், முழங்காலளவு உயரமான மிருதுவாயுள்ள ஓர் ஆஸனத்தில் உட்காரவேண்டும்; பன்னிரண்டு அங்குலம் அகலமுள்ளதும், சிரஸைச் சுற்றிலும் கட்டுவதற்குப் போதுமான நீளமுடையதும், காது வரையில் கட்டுவதற்கேற்றவாறு அமைந்த பந்தகஸ்தானத்தை யுடையதுமான தோல் பட்டை யொன்றை யெடுத்து, நெற்றியின் மேலாகத் தலையைச் சுற்றிலும் வஸ்திரத்தைச் சுற்றி, அதன்மேல் சர்மப்பட்டத்தைச் சுற்றி, நாடாவினால்[1] அதைக் கட்டி, உளுந்தின் கல்கத்தினால் அதன் மேல் நன்றாய்ப் பூசிடவேண்டும். அப்பால் அந்தந்த வியாதிக்குத் தகுந்தவாறு காய்ச்சி பக்குவம் செய்யப்பட்ட ஸ்நேஹத்தை இளஞ்சூடாகச் சிரஸில் ஊற்றவேண்டும்; அந்த ஸ்நேஹம் தலைமயிர்களின் அடித்தட்டிலிருந்து மேலே இரண்டு அங்குலம் உயரமளவும் தேங்கி நிற்கவேண்டும். வாயிலும் நாசியிலும் ஜலம் ஊறிவரும் வரையில் ஸ்நேஹத்தை அப்படியே சிரஸில் தாங்கிக்கொண்டிருப்பது பொதுவான முறை; வாததோஷத்தில் பதினாயிரம் மாத்திராகாலமும், பித்தத்தில் எண்ணாயிரம் மாத்திரா காலமும், கபத்தில் ஆறாயிரம் மாத்திரா காலமும் ஸ்நேஹத்தைத் தாங்கிநிற்பது விசேஷ முறையாம்; ஆரோக்கியநிலைமையில் இருப்பவனுக்கோ ஆயிரம் மாத்திராகாலம் போதுமானது. ஸ்நேஹத்தை யெடுத்து சிரோவஸ்தியை விலக்கியதும், தோள் முதலிய அவயவங்களைச் சுகமாக மர்த்தனம் செய்யவேண்டும். இவ்வாறு சிரோவஸ்தியை அதிகமாய்ப் பிரயோகிக்கவேண்டுமானால் ஏழு நாட்கள் உபயோகிக்கலாம். 26—30½.

கர்ணபூரண முறை :—செவியினுள் "கர்ணபூரண ஔஷதத்தை"[2] ஊற்றி, காதின் அடிப்புறத்தைக் கையால் தேய்த்துக்கொண்டே, வலிகுறையும் வரையில் அப்படியே வைத்துக்கொண்டிருக்கவேண்டும். வேதனையில்லாமல் செவியின் பலத்திற்காக உபயோகப்படுத்தினால் அதை நூறு மாத்திராகாலம் வைத்திருக்கலாம்.—31; 31½.

மாத்திராகால அளவு:—ஒரு முறை நேத்திரத்தை மூடித் திறப்பதற்குள் வலது கையை வலது முழங்காலைச் சுற்றிவரச் செய்யவும்; அவ்வாறு செய்வதற்கு எவ்வளவு நேரம்வேண்டியிருக்கிறதோ அந்த நேரம் ஒரு மாத்திராகாலம் என்று வழங்கப்படுகிறது.—32½.

மூர்த்ததைலத்தின் உபயோகம் :—தலைமயிர் உதிர்தல், வெளுத்துப்போதல், பொன்னிறமாதல், மண்டையில் சர்மம் வெடித்

1. நாடா என்பதற்கு ஸம்ஸ்கிருதமூலத்தில் கேசவேணிகை என்று பிரயோகிக்கப்பட்டிருக்கிறது.

2. கர்ணபூரணம்—காதில் மருந்துகளை விட்டு நிறைத்தல்.

தல், தலையில் உண்டாகும் வாதரோகங்கள்; இவற்றை மூர்த்தனைதலம் நிவ்ருத்திசெய்வதுடன், இந்த்ரியங்களுக்கு நல்ல தெளிவையும், தொண்டையென்ன, முகவாய்க்கட்டையென்ன இவற்றிற்கு வன்மையையும் உண்டுபண்ணும்.—33.

---

# இருபத்து மூன்றும் அத்தியாயம்.

## ஆச்சியோதந-அஞ்ஜநவிதி.

இனி ஆச்சியோதந-அஞ்ஜநவிதி[1] என்கிற அத்தியாயம் விவரிக்கப்படுகின்றது:—

**ஆச்சியோதநத்தின் உபயோகம்:**—எல்லா நேத்திர ரோகங்களுக்குமே ஆதியில் "ஆச்சியோதநம்" என்னும் ஔஷதப்பிரயோகம் அநுகூலமானதாம். அது கண்ணிலுண்டாகும் குத்தல் வலிகளையும், அரிப்பையும், உறுத்தலையும், கண்ணீர் சொரிவதையும், அழற்சியையும், மற்றுமுள்ள பிணிகளையும் போக்கவல்லது.—1.

**வாதாதி தோஷங்களில் ஆச்சியோதநத்திற்கு வேண்டிய சூட்டின் நிலைமை:**—வாததோஷத்தில் சூடான ஆச்சியோதநமும், கபதோஷத்தில் இளஞ்சூடான ஆச்சியோதநமும், இரத்தத்தின் கோளாறிலும் பித்தத்தின் கோளாறிலும் குளிர்ச்சியான ஆச்சியோதநமும் பிரயோகிக்கத் தகுந்தனவாம்.—1½.

**ஆச்சியோதநம் பிரயோகிக்கு முறை:**—பிணியாளியை விசேஷக் காற்றோட்டமில்லாத இடத்தில் இருக்கச் செய்து, வைத்தியன் தனது இடது கையால் ரோகியின் நேத்திரத்தைத் திறந்து, மற்றொரு கரத்தில் கவிழ்த்துப் பிடித்த சுக்தியினாலாவது[2] பிசுவர்த்தியினாலாவது[3] கருவிழியில் அதற்கு இரண்டு அங்குலம் உயரத்திலிருந்து ஔஷதத்தைப் பத்துப் பன்னிரண்டு துளிகளாக விடவேண்டும். பிறகு மிருதுவான வஸ்திரத்தினால் நேத்திரத்தைத் துடைத்துவிடவும். கபவாததோஷங்களால் வியாதி ஏற்பட்டிருக்குமானால் இளஞ்சூடான ஜலத்தில் நனைத்த வஸ்திரத்தினால் மெதுவாக ஸ்வேதகம் செய்யவேண்டும். 2—4.

**முறை கேடாக ஆச்சியோதநம் உபயோகிப்பதால் உண்டாகும் தீங்குகள்:**—ஆச்சியோதந ஔஷதமானது அதிக உஷ்ணமாகவும் அதிக தீக்ஷ்ணமாகவும் இருந்தால் நேத்திரத்தில் குத்தல் குடை-

1. ஆச்சியோதநம்—ஏதேனும் திரவமான ஔஷதத்தை நேத்திரத்தில் மெல்லிய தாரையாக ஊற்றுவது. அஞ்ஜநம்—ஔஷத ரூபமான மைகளையிடுவது; இவ்விஷயங்களுக்கான விதிகளைக் கூறும் அத்தியாயம்.

2. சுக்தி—சிப்பி, அல்லது திரவ பதார்த்தத்தை எடுத்து மெல்லிய தாரையாக விடுவதற்கு உபயோகமான நீண்ட மூக்குள்ள பாத்திரம்.

3. பிசுவர்த்தி—பஞ்சுமுதலியதால் செய்த திரவம் எடுத்துப் பிழியக் கூடிய வர்த்தி.



த்தல்களையும், சிவப்பையும், சில ஸமயம் திருஷ்டிக்கே அழிவையும் உண்டுபண்ணும். அதிக குளிர்ச்சியாயிருந்தால் அவ்வௌஷதமானது விசேஷ குடைச்சலையும், திமிர்த்து அசைக்க முடியாத நிலைமையையும், மற்றும் பல வேதனைகளையும் கொடுக்கும். ஆச்சியோதந ஔஷதம் அளவில் அதிகப்பட்டால் இமைப்பையினுள் கலக்கத்தையும், கரகர வென்கிற அரிப்பையும், திறப்பதற்கு அதிக சிரமத்தையும் உண்டுபண்ணும். அது அளவில் மிகவும் சொற்பமானால் வியாதி விருத்தியாய், தோஷம் வெளிப்படாமல் அதிக தொந்தரவும் ஸம்பவிக்கும்.—5, 6.

**ஆச்சியோதநாதி ஔஷதம் தோஷங்களை வெளிப்படுத்தும் வகை:**—நேத்திரத்தினுள் விடப்படும் ஔஷதமானது சிருங்காடகம்[1] என்னும் ஸந்திபாகத்திலும், சிரஸிலும், நாசியினுள்ளும் ஸம்பந்தப்பட்ட ஸ்ரோதஸ்ஸுகளில் பரவி, தோளுக்கு மேற்பட்ட அவயவங்களில் வியாபித்துள்ள தோஷங்களை வெளிப்படுத்திவிடுகின்றது.—7.

**அஞ்ஜநமிடுவதற்கேற்ற நிலைமை:**—அப்பால் பிணியாளி சோதந சிகித்சை செய்துகொண்டபிறகு அஞ்ஜநம் பிரயோகிக்கலாம். பித்தத்தினாலாவது - கபத்தினாலாவது, இரத்தத்தினாலாவது-முக்கியமாய் வாதத்தினாலாவது நேத்திரம் பீடிக்கப்படுமானால், தோஷமும் நேத்திரத்தைமட்டும் ஆச்ரயித்து உண்டாயிருக்கும்போது, வீக்கம் தினவு பிசுபிசுப்பு இவை அற்பமாயிருப்பதாகத் தோன்றி பிணியும் பக்குவநிலைமையடைந்திருந்தால், அரிப்பு கண்ணீர் முதலியவற்றுடன் நோக்கும் குறைந்திருக்கையில், கண்பிளிச்சை அதிகமாயிருந்தால் அப்பொழுது அஞ்ஜநம் பிரயோகிக்கவேண்டும்.—8, 9.

**அஞ்ஜநம் மூன்றுவிதம்:**—அஞ்ஜநமானது லேகநம் என்றும், ரோபணம் என்றும், பிரஸாதநம் என்றும் மூன்று வகைப்படும். அவற்றுள் (1) துவர்ப்பும், புளிப்பும், இலவணரஸமும், கார்ப்புமுள்ள வஸ்துக்களால் லேகநாஞ்ஜநம் பிரயோகிக்கலாம். (2) கைப்பான வஸ்துக்களால் ரோபணாஞ்ஜநமும், (3) மதுரரஸமும் குளிர்ச்சியும் பொருந்தியவற்றால் பிரஸாதநாஞ்ஜநமும் பிரயோகிக்கலாம்.—10, 10½.

**மூன்றுவித சலாகைகள்:**—அஞ்ஜநமிடுவதற்குச் சலாகை வேண்டும்; அது பத்து அங்குலம் நீளமாகவும், இடையில் மெல்லியதாகவும், முனைகள் கூர்மையின்றி வழு மூண்டதாகவும் இருக்கவேண்டும். (1) லேகநாஞ்ஜநத்திற்குச் செப்புச்சலாகையும், (2) ரோபணாஞ்ஜநத்திற்கு எஃகுக் கம்பியினாலான சலாகையும், (3) பிரஸாதநாஞ்ஜநத்திற்கு பொன் அல்லது வெள்ளியாலாகிய சலாகையும் சிறந்ததாகும்.—11, 12.

1. சிருங்காடகம்—நாசி, செவி, கண் இவற்றின் த்வாரங்கள் ஒருமிக்கக் கூடும் தொண்டைப் பக்கமாயுள்ள ஸந்தி பாகம்.

அஞ்ஜனௌஷத முபயோகிக்க மூன்றுவித நிலைமைகள் :—அஞ்ஜனௌஷதமுறையானது "பிண்டம்" என்றும், "ரஸக்ரியை" என்றும், "சூர்ணம்" என்றும் உருவத்தினால் மூன்றுவகைப்படும்.[1] (1) அவற்றுள் பிண்டாஞ்ஜநத்தை தோஷம் பலமாயிருக்கையிலும், (2) ரஸக்ரியாஞ்ஜநத்தை தோஷம் மத்திம நிலைமையில் இருக்கையிலும், (3) சூர்ணாஞ்ஜநத்தை தோஷம் இலகுவாயிருக்கையிலும் பிரயோகிக்கலாம்.—13.

பிண்டாதி அஞ்ஜநங்களை உபயோகிக்கும் அளவு :—பிண்டாஞ்ஜநத்தை ஓர் அரேணுகத்திற்குச் சமானமான அளவிலும், ரஸக்ரியாஞ்ஜநத்தை அதற்கு இரண்டு மடங்கான வல்லம் என்கிற அளவிலும் உபயோகிக்கவேண்டும்; தீக்ஷணவீர்யமுள்ள சரக்குகளால் பக்குவம் செய்யப்பட்ட பிண்டாஞ்ஜநத்திற்கே முற்கூறிய அளவு; அது மிருதுகுணமுள்ள சரக்குகளால் தயார் செய்யப்பட்டதானால் முன்னிலும் இரண்டு பங்காகப் பிரயோகிக்கப்படவேண்டும். சூர்ணாஞ்ஜநம் தீக்ஷணமானதாயிருந்தால் இரண்டு சலாகை அளவும், மிருதுவாயிருந்தால் மூன்று சலாகைகளும் உபயோகிப்பது முறை.—14, 14½.

அஞ்ஜநமிடுவதற்கு ஏற்ற காலங்களும் தகாத காலங்களும் :—(1) இரவிலும், நித்திரை செய்கையிலும், வெயிலால் வாட்டமுற்றிருக்கையிலும் அஞ்ஜனமிடக்கூடாது; அவ்வாறு அஞ்ஜனமிட்டால் வியாதி விருத்தியாய், குத்தல் வலிகள் அதிகரித்து, விசேஷமாக நீர் வடியவும் ஆரம்பிக்கும். (2) ஆகையால் எப்பொழுதும் காலையிலும் மாலையிலும், சூரியன் மறைந்துள்ள சமயங்களில் அவ்வியாதிகளை நிவிருத்தி செய்வதற்காக அஞ்ஜனமிடவேண்டும். பகலில் தீக்ஷணாஞ்ஜநம் பிரயோகிக்கக்கூடாதென்றும், தோஷங்களை வெளிப்படுத்தியதால் துர்ப்பலப்பட்டிருக்கும் நேத்திரமானது சூரியனைக் கண்டு இன்னும் துன்பப்படுமென்றும் வேறு சிலரும் கூறுகின்றனர். 15—17.

நேத்திர தர்ப்பணத்திற்கு ஏற்ற காலங்கள் :—இரவில் நித்திரை செய்வதாலும், இயற்கையிலேயே இராக்காலம் குளிர்ச்சி பொருந்தியதாகையாலும் அக்காரணங்களால் நேத்திரம் தர்ப்பணம் செய்யப்பட்டு வரும்;[1] திருஷ்டிக்கு தேஜோவீர்யம் ஹிதமாயிருக்கும்; அது சுபாவமாகவே ஆக்நேயகுணம் பொருந்தியது; ஆகவே இவற்றுடன் மீண்டும் முற்கூறிய காரணங்களும் சேர்ந்தால் மறுபடியும் நேத்திரம் நன்கு பலம் பெறும்.—18.

1. பிண்டாஞ்ஜநம்—குளிகைகளாகச் செய்த அஞ்ஜனௌஷதம். ரஸக்ரியாஞ்ஜநம்—தேன்போல் அல்லது லேஹ்யம்போல் செய்த அஞ்ஜனௌஷதம். சூர்ணாஞ்ஜநம்—பொடியுருவமான அஞ்ஜனௌஷதம். இவற்றுள் ஒவ்வொன்றும் தீக்ஷணம், மத்திமம், மிருது என்று மூன்றுவிதம் என்று சார்ங்கதரன் முதலியவர் கூறுகிறார்கள்.



வும்; இவ்விதம் சுயமாகப் பொடிப் பொடியாகச் சிதறும் வரையில் அதைக் காய்ச்சிக் கஷாயத்தில் தோய்க்கவேண்டும்; அந்த மண்டூரத்தை நன்றாக அரைத்து உபயோகிக்கவும். (3) பஸ்மமாக்கிய முண்ட லோஹத்திற்கு எக்குணங்கள் உண்டோ அவை லோஹகிட்டத்திற்கும் உண்டு; ஆகவே அயத்தை யுபயோகிக்கக் கூடிய எல்லாப் பிணிகளிலும் மண்டூரத்தையும் பிரயோகிக்கலாம். (4) லோஹௌஷதங்களை யுபயோகிப்பவருக்கு முண்டமானது கிட்டத்திலும் பத்துத்தனை குணத்தையும், தீக்ஷணமானது முண்டத்தைவிட நூறு மடங்கு குணத்தையும், காந்தமானது தீக்ஷணத்திலும் லக்ஷமடங்கு அதிக குணத்தையும் மனிதருக்குக் கொடுக்கும்; ஆகவே கிழத்தனமும் மரணமும் எளிதில் சேராமலிருக்கக் கருதி, காந்த லோஹத்தை மனிதர் எப்பொழுதும் உட்கொள்ளலாம்.[1] 147—150.

அசுத்த லோஹத்தின் துர்க்குணங்களும் சுத்தலோஹத்தின் குணங்களும்.

(1) சுத்தி செய்யாத லோஹத்தையுபயோகிப்பதால் ஆயுளும், தேஹபலமும், காந்தியும் அழியும்; இருதயத்தில் கோளாறு உண்டாகும்; பொதுவாக தேஹாரோக்கியம் சீர்கெட்டுப் பல வியாதிகள் தோன்றும்; ஆகவே அயத்தைச் சுத்தி செய்தே பஸ்மம் செய்யவும். (2) சுத்தி செய்த அயமோ ஆயுளை விருத்தி செய்யும்; தேஹபலம், வீர்யம் இவற்றைக் கொடுக்கும்; பலரோகங்களைத் தீர்க்கும்; ஆண்மையை அதிகரிக்கச்செய்யும்; அயத்திற்குச் சமானமாக அவ்வளவு சிறந்த இரஸாயனம் வேறொன்றுமில்லை.[2]—151, 152.

## வங்கம்[3]

வங்கம் இரண்டுவிதம்.

வங்கமானது க்ஷுரகம், மிச்ரகம் என்று இரண்டு வகையாம். அவற்றுள் க்ஷுரகம் குணத்தில் சிறந்தது; மிச்ரகம் உபயோகமானதன்று. (1) க்ஷுரவங்கம் வெண்மையானது; மிருதுவானது; ஸ்நிக்தமானது; சீக்கிரமாய் உருகும்; கனமானது; தட்டினால் சப்தமுண்டாகாது. (2) மிச்ரக வங்கம் நிறத்தில் வெண் கருமையானது.—153, 154.

1. லோஹௌஷத முபயோகிப்பவருக்குப் பத்தியம்:—பூசணி, நல்லெண்ணெய், உளுந்து, கடுகு, மதுபானம், புளிப்புள்ள உணவுப்பொருள்கள் ஆகியவை யுட்கொள்பவனுக்குத் தகாதவை:—[illegible]

2. இவ்விஷயம் [illegible] வேறு கிரந்தத்திலிருந்து சேர்க்கப்பட்டதாகத் தெரிகிறது.

3. வங்கம்—வெள்ளீயம் எனப்படும். இதற்கு ரங்கம், த்ரபு, பிச்சடம் என்றும் பெயர்களுண்டு.

**வங்கத்தின் பொதுகுணங்கள்.**

வங்கமானது திக்தரஸமும், உஷ்ணவீர்யமும், ரூக்ஷத்தன்மையுமுள்ளது; வாதத்தைச் சிறிது பிரகோபிக்கச் செய்யும்; மேஹரோகங்கள், கபதோஷத்தாலான வியாதிகள், மேதோரோகம், க்ருமிரோகம் ஆகியவற்றைப் பரிஹரிக்கக்கூடியது[1].—155.

**இருவங்கங்களுடையவும் சுத்திமுறை.**

(1) குரவங்கத்தை உருக்கி, மஞ்சள்பொடி கலந்த கருநொச்சியிலைச் சாற்றில் ஊற்றவும்; இவ்விதம் மூன்று முறை செய்ய குரவங்கம் சுத்தமாகும். (2) மிச்ரக வங்கத்தைப் புளித்த மோரிலும், வெள்ளாக்காரடைச்சாற்றிலும், ஆடாதோடைச்சாற்றிலும், எட்டிக்கொட்டைக் கஷாயத்திலும், பேய்ச்சுரையின் சாற்றிலும் தனித்தனியே உருக்கிச் சேர்த்தால் சுத்தியடையும்.—156, 157.

**வங்கம், நாகம், வெண்கலம், தாம்ரம் இவற்றிற்குப் பொதுவான சுத்தி முறை.**

(1) உருகிய வங்கத்தைக் கருநொச்சியிலைச் சாற்றில் ஊற்றுவதோடு, அதில் நொச்சி வேரின் சூர்ணத்தை ஆவாபம் செய்து, வெயிலில் வைக்கவும்; இவ்விதம் ஏழு முறை செய்ய வங்கம் சுத்தமாம். (2) இப்படியே நாகம், வெண்கலம், செம்பு இவற்றையும் சுத்தி செய்யலாம்.[2]—158.

**வங்க பஸ்ம முறைகள்.**

(1) வங்கத்தை மெல்லிய தகடுகளாக அடித்து, எருக்கம்பால் விட்டு ஆட்டிய தாளகத்தை அத்தகடுகளின் மேல் தடவி, அரசம்பட்டை புளியம்பட்டை இவற்றின் பொடித்த க்ஷாரங்களுக்கிடையில் அத்தகடுகளைப் புதைத்து இலகுவாகப் புடம் போடவும்; பிறகு அதைத் தெடுத்து அப்பஸ்மத்தை இரஸௌஷத முறைகளின்படி உபயோகிக்கவும். (2) ஒரு பாணையில் வங்கத்தை உருக்கி, அதில் பதினாறிலொரு பங்கு இரஸத்தைச் சேர்த்து, தாளகத்தையும் சிறுகச் சிறுக அதன்மேல் பொடித்துத் தூவிக் கொண்டே, காட்டுப் பருத்தி மரத்தினாலான துடுப்பினால் தேய்த்துக் கிளறிக் கொண்டிருந்தால் வங்கம் பஸ்மமாகும்; இதுவும் இரஸௌஷத முறைகளிற் சேர்த்துப் படிக்கப்படுகிறது. (3) பலாசம் வேரின் சாறு விட்டு ஆட்டிய தாளகத்தை வங்கத்தகடுகளின் மேல் பூசி, அப்

1. 'வங்கமானது இலகு, ஸரம் (எளிதில் தாதுக்களிற் பரவுந் தன்மை), ரூக்ஷம், உஷ்ணம், மேஹஹரம், கபஹரம், க்ருமிஹரம்; பாண்டுரோகம், காஸ-ச்வாஸம் இவற்றைப்பரிஹரிக்குந் தன்மை, சிறிது பித்தத்தை விருத்தி செய்யும் தன்மை ஆகியவையும் அதற்கு உண்டு; நேத்திரத்திற்கும் அது ஹிதமானது.—ஆயுர்வேத ப்ரகா[illegible]

2. அசுத்த வங்கத்தின் [illegible] தோஷங்கள்:—சுத்தி செய்யப்படாத வங்கமானது குஷ்டம், குல்மம், பாண்டு, பிரமேஹம், வாதரக்தம், மற்றும் பல கடுமையான நோய்கள் ஆகியவற்றையுண்டு பண்ணும்; பலத்தைப் போக்கும்:—வைத்திய சிந்தாமணி.



பதின் புடமிட ஐயமின்றி அது பஸ்மமாகும். (4) வங்கத்தின் மேல் சேராங்கொட்டைத் தைலத்தைப் பூசி, அதன் மேல் சீலை செய்யவும்; புளி, அரசு, பலாசு இவற்றின் கட்டையை எரித்து அதனால் அதைப் புடமிட பஸ்மமாம். 159—163.

**வங்க ரஸாயநம்.**

வங்கபஸ்மம், காந்தபஸ்மம், அப்ரகபஸ்மம் இவற்றைச் சம எடையாக எடுத்து, அவற்றை ஊமத்தையிலைச் சாற்றால்[1] முதலில் அரைக்கவும்; பிறகு வேப்பிலைச் சாற்றாலும், மாதுளையிலைச்சாற்றாலும், நாயுருவிச்சாற்றாலும் தனித்தனியே அரைக்க வேண்டும்; அதன் பிறகு வங்கபஸ்மத்திற்குச் சம அளவாக இராஜாவர்த்த பஸ்மத்தையும் கூட்டி, கோமூத்திர சிலாஜதுவின்[2] குழம்பால் நன்றாக ஆட்டவேண்டும்[3]; பிறகு வெள் குங்கிலயக் குழம்பு விட்டு எட்டு நாட்கள் அரைத்து, உலர்த்தி மீண்டும் பொடியாக்கி, அச்சூர்ணத்திற்குச் சமஅளவாகப் பொரித்தெடுத்த இலவம் பிசினையும், வாலுழுவை விதையின் சூர்ணத்தையும்[4] கூட்டிக் கலந்து, வஸ்திரகாளநம் செய்து, தகுந்த சிமிழில் வைத்துக் கொள்ளவும்; 'வங்க ரஸாயநம்' எனப்படும் இதை இரண்டு குஞ்ஜாப்பிரமாணமாகப் பசுவின் மோரிற் குழைத்த மஞ்சள் சூர்ணத்தின் அனுபானத்துடன் உட்கொள்க. இதனால் இருபது வகையான மேஹரோகங்கள் நிவாரணமாகும். சம்பா அரிசி, பயற்றம்பருப்பு, வெண்ணெய், நல்லெண்ணெய், படல், காட்டுக்கோவை இவை இவ்வௌஷத முபயோகிக்கையிற் பத்தியமான உணவாம். 164—170.

## ஸீஸம்

(நாகம்—கருவங்கம்)

**ஸீஸத்தின் இலக்ஷணங்கள்.**

ஸீஸமானது துரிதமாய் உருகும்; அதிக பாரமுள்ளது; அறுத்தால் அறுபட்டவிடத்தில் கறுப்பாகப் பளபளப்புள்ளதாயிருக்கும்; ஒருவித துர்நாற்றமுடையது; வெளிப்புறம் கறுப்பாயிருக்கும்; இவ்விதமிருப்பதுதான் சுத்தமான ஸீஸம்; இவ்வித இலக்ஷணங்களைப் பெறாதது இதற்கு எதிரிடையான குணங்களைப் பெற்றது.—171.

1. 'கநகாம்போபி:' என்பதற்குப் பதிலாக 'கந்யகாம்போபி:' என்று இரஸரத்நஸமுச்சய போதினியில் கூறப்படுகிறது; அப்பொழுது கற்றாழைச்சாறு என்று பொருள் கூறவேண்டும்

2. "கோமூத்ரக-சிலாஜதுஜலே." என்கிற மூலவாக்கியத்திற்குப் 'பசுமூத்திரத்தினாலும், சிலாஜதுக்குழம்பாலும்' என்றும் பொருள் கூறலாம்.

3. ஒவ்வொரு திரவத்தினாலும் எவ்வேழு முறை அரைக்க வேண்டுமென்று "இரஸரத்நஸமுச்சய போதினி."

4. "உச்சித்திலகம் என்கிற ஒரு வேலன் பிசினோடும், சச்வாவல்லி விதையின் சூர்ணத்தோடும் கூட்டியரைக்கவும் என்று" வேறுபாடம்.

*ஸீஸத்தின் குணங்கள்.* ஸீஸமானது வீர்யத்தில் மிகவும் உஷ்ணமானது; குணத்தில் ஸ்நிக்தமானது; சுவையில் கைப்பு; வாதகப ஹரம்; மேஹதோஷஹரம்; தீபனம்; ஆமவாத வியாதியைப் பரிஹரிக்கவல்லது.—172.

*ஸீஸ சுத்தி.* ஸீஸத்தை உருக்கி, அதில் வெண்ணொச்சிவேர், அப்ரகம், மஞ்சள் இவற்றின் சூர்ணத்தைச் சேர்த்து, பிறகு கருநொச்சியிலைச் சாற்றில் ஊற்றவும்; இவ்விதம் மூன்று முறை செய்ய ஸீஸம் சுத்தமாகும்; இச்சுத்தி முறையினால் நாகம் கறுப்பான நிலைமையையும், வெடித்துப் பொடியாகும் தன்மையையும் பெறாது.—173, 173½.

*பிரஷ்ட யந்திரம்.* (1) குழிக்காக நீட்டுருவத்தில் அமைத்த அடுப்பின்மீது குழிக்காக நீண்ட முகமுள்ள ஒரு சட்டியை[1] வைத்து, அச்சட்டியின் வாய்ப்புறம் தவிர மற்றெல்லாப் பாகத்தையும் மண்பூசி நன்கு மறைத்துவிடவும். இது பிரஷ்டயந்திரம் எனப்படும்.* (2) அச்சட்டியில் (1) இருபது பலம் சுத்த ஸீஸத்தைப் போட்டு, கடுந்தீயிட்டு எரித்து, *ஸீஸபஸ்ம முறைகள்.* ஸீஸம் உருகும்போது அதில் கால் பல மெடை சுத்த ரஸம் சேர்த்துக் கலக்கவும்; பிறகு அர்ஜுநக்ஷாரம், அக்ஷக்ஷாரம், மஹாசாகக்ஷாரம், தாடிமக்ஷாரம், அபாமார்க்கக்ஷாரம்[2] இவற்றில் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பலம் அதிற் கூட்டி, துடுப்பால் நன்றாக மசிக்கவும்; இவ்விதமாகக் கடுந்தீயிட்டு இருபது நாள் இரும்புத்துடுப்பால் மசித்து வந்தால், ஸீஸமானது சென்னிறமான அல்லது மாடப்புறா நிறமான பஸ்மமாக மாறும்; தோஷம் நீங்கியதான இந்த நாகபஸ்மம் சிறந்த இரஸாயநமாகும். (2) நாகத்தை ஒரு முறை ஒருவாறு பஸ்மமாக்கவும்; அதை ஊர்த்வபாதன யந்திரத்தைக்கொண்டு மீண்டும் நாகமாகச் செய்துகொள்ளவும்; இவ்விதமே அதைப் பத்துமுறை செய்தால் அந்த ஸீஸம் எத்தோஷமும் நீங்கி மிகச் சிறந்த பஸ்மமாகும்; அது இரஸாயநமாகும். (3) ஒரு பாத்திரத்தில் ஸீஸத்தைப் போடவும்; அரசம்பட்டையையும் புளியம்பட்டையையும் சாம்பலாக்கி, அச்சாம்பலை ஸீஸத்திற்கு நாலிலொரு பாக அளவில் சேர்த்து, இரும்புத்துடுப்பால் கிளறவும்; இவ்விதம் செய்ய ஒரு யாமத்தில் அது பஸ்மமாகும்; அப்பஸ்மத்தை யெடுத்து, அதற்குச் சமஎடை மனச்சிலையைக் கூட்டி, எலுமிச்சம் பழச்சாற்றாலாகிலும் காடியினாலாவது ஆட்டி, உலர்த்தி புடமிடவும். மீண்டும் அதை ஆறிய பிறகு எடுத்து, இருபதிலொரு பங்கு மனச்சிலை சேர்த்து, காடிவிட்டு

1. வறுக்கும் சட்டி, அல்லது சுறையோடு.
2. அர்ஜுநக்ஷாரம்—மருதம்பட்டையை எரித்தெடுத்த உப்பு. அக்ஷக்ஷாரம்—தான்றிமரப்பட்டையை யெரித்தெடுத்த உப்பு. மஹாசாகக்ஷாரம்—பெருந்தேக்கம்பட்டையிலிருந்தெடுத்த உப்பு. தாடிமக்ஷாரம்—மாதுளம் உப்பு. அபாமார்க்கக்ஷாரம்—நாயுருவியுப்பு.



ஒரு யாமகாலம் அரைத்து முன்போலவே புடமிடவேண்டும். இவ்விதம் அறுபது புடமிட்டால் நாகம் நிருத்தமாக பஸ்மமாகும். (4) ஸீஸத்தை மெல்லிய தகடுகளாகச் செய்து, அதன்மேல் மனச்சிலையையும் எருக்கம்பாலையும் அரைத்துப் பூசவும்; பிறகு புடமிடும் முறைப்படி பக்குவம் செய்ய நிருத்தமாக[1] பஸ்மமாகும். 174—184½.

*ஸீஸரஸாயநம்.* முற்கூறியவகைகளில் புடமிட்டெடுத்த நாகபஸ்மம் ஒரு பங்கு, தாளகபஸ்மம் அரைப்பங்கு, தாம்ரபஸ்மம் கால்பங்கு, விமலபஸ்மம் கால்பலம், காந்தஸத்வம், அப்ரகஸத்வம், ஸ்படிகஸத்வம் இவையும் வகைக்குக் கால்பங்கு; ஆக இவ்வளவினத்தையும் ஒன்றாகக் கூட்டி, த்ரிபலாகஷாயம் சேர்த்து, முப்பது வறட்டிகளைக் கொண்டு முப்பது முறை புடம் போட்டு, அரைத்து வைத்துக்கொள்ளவும். இதை இரண்டு குன்றிமணி யெடை யெடுத்து, அதற்குச் சமஎடை த்ரிகடு, வாய்விடங்கம் இவற்றின் சூர்ணத்தைக்கூட்டி, தேன் அல்லது நெய்யிற் குழைத்து, அந்தந்த அநுபானங்களுடன் உட்கொள்ள, எண்பது வகையான வாத ரோகங்களும், முக்கியமாக தநுர்வாதமும், எல்லாவிதமான கபரோகங்களும், மூத்திர ரோகங்களும், ச்வாஸம்-காஸம்-க்ஷயம்-பாண்டு-சோகை-குளிர்ஜ்வரம்-கிராணி-ஆமவாதம்-கடுமையான அக்னிமாந்த்யம்-கபோதரம் முதலிய மற்றெல்லா தீர் ரோகங்கள் ஆகியவைகளும் தீரும்.[2] 185—191.

## பித்தளை[3].

*பித்தளை இரண்டுவிதம்.* ரீதிகா என்றும், காகதுண்டி என்றும் பித்தளை இரண்டு விதப்படும். (1) எது காய்ச்சப்பட்டுக் காடியில் இடப்பட்டு செப்பு நிறங்கொள்ளுகிறதோ அப்பித்தளை ரீதிகா எனப்படும். (2) எது அவ்விதஞ்செய்தால் கறுப்பு நிறமாகுமோ அது காகதுண்டி எனப்படும்.—192, 192½.

*பித்தளையின் குணங்கள்.* (2) ரீதிகா என்னும் பித்தளை சுவையில் கைப்பு; ரூக்ஷ குணமுடையது; க்ருமி ஹரம்; இரக்த பித்த ஹரம்; தகுந்த அநுபானங்களுடன் உபயோகித்தால் குஷ்டமும் இதனால் தீரும்; உஷ்ண சீத வீர்யங்கள் கலந்தது. (2) காக

1. நிருத்தம்—8-ம் அத்தியாயம் பார்க்க.
2. ஸீஸத்திற்கு முன்பு ஜஸதம் என்கிற ஒரு லோஹம் ஆயுர்வேத ப்ரகாசத்திற் கூறப்படுகிறது. 'ஜஸதம் என்பது வங்கம் போன்றது; அது பித்தளையுண்டாவதற்கும் காரணமானது. வங்கத்தைப் போலவே சுத்தி பஸ்மமுறைகளும்.' ஜஸதம்—துத்தநாகம்.
3. 'ரீதி யென்னும் பித்தளையானது தாம்ரம், ஜஸதம் இவற்றின் சேர்க்கையாலான உபதாதுவேயாகும். ஆகவே பித்தளை அதற்குக் காரண வஸ்துக்களின் குணங்களைப் பெற்றிருக்கும்; சேர்க்கை முறைகளிலுள்ள வித்யாஸங்களையனுசரித்து பித்தளையின் குணங்களும் பலவாறு மாறுபடும்.'—பாவப்ரகாசம்.

துண்டி யென்பது ரூக்ஷமானது; திக்த ரஸமும், உஷ்ணவீர்யமு முடையது; யக்ருத் என்னும் ஈரல், ப்லீஹம் இவற்றின் வியாதிகளைப் போக்க வல்லது; சிறிது சீதவீர்யமுமுடையது.—193, 194.

பித்தளையிற் சிறந்ததும், இகழ்ந்ததும்.

(1) பாரம், மிருதுத் தன்மை, பசுமை நிறம், வன்மை, அடித்தால் சிதறாமல் அடிகளைத் தாங்குந் தன்மை, மிகவும் ஸ்நிக்த்தமா யிருத்தல், மழமழப்பு ஆகிய இலக்ஷணமுள்ளது சிறந்த பித்தளையாம். (2) வெண் பசுமை நிறம், கரகரப்பா யிருத்தல், ரூக்ஷத் தன்மை, வன்மை யின்மை, அடி தாங்காமை, காய்ச்சும்போது ஒருவித துர்நாற்ற முண்டாகுதல், பாரமின்மை ஆகிய இலக்ஷணங்கள் தாழ்ந்த பித்தளையைக் குறிப்பிடும்; அவ்வித பித்தளை இரஸௌஷத முறைகளுக்கு உபயோகமானதன்று.—195, 196.

பித்தளையின் சுத்திமுறை.

ஒரு பாத்திரத்தில் மஞ்சள் பொடி கலந்த கருநொச்சி யிலைச் சாற்றை வைத்து, அதில் பித்தளையைக் காய்ச்சித் தோய்க்கவும்; அவ்விதம் ஐந்து முறை காய்ச்சித் தோய்க்க பித்தளை நன்கு சுத்தமாகும்.—197.

பித்தளை த்ருதி.

பொன்னிறமான பித்தளையைப்[1] பொடித்து, கொழுத்துக் கறுப்பான இளம் ஆட்டுக்குத் தீனியில் கலந்து வைத்து அதை யுண்ணச் செய்யவும்; பிறகு அது இடும் சாணத்தை யெடுத்து, ஒரு கப்பரையிலுள் பூசி, அடுப்பில் வைத்து அதைக் காய்ச்ச, அச்சாணத்திலிருந்து சிறந்த பித்தளைத் திரவம் வடியும்; அது பதினாறு மாற்றுப் பொன்னுக்கு நிகரான காந்தி யுடையதா யிருக்கும்; அது தேஹத்திற்கு நல்ல வன்மையைத் தருவதற்கும், உலோஹ முறைக்கும், இரஸாயந முறைக்கும் உபயோகமானது. 198—200.

பித்தளைபஸ்மம்.

(1) பனைச்சிலை, கந்தகம் இவற்றை எலுமிச்சம் பழச்சாற்றால் அரைத்து, பித்தளை ரேக்குகளின்மேல் கனமாகக் கவசம் செய்வது போலப் பூசி, புடமிடவும்; இவ்வாறு எட்டுமுறை புடமிட்டால் பித்தளை பஸ்மமாகும்; பிறகு அதை முறைப்படி பயோகிக்கலாம். (2) பித்தளையைத் தாமிரத்தைப் போலவே பஸ்மம் செய்து அவச்யமான எல்லாவற்றிலும் உபயோகிக்கலாம்.—201, 201½.

பித்தளை இரஸாயநம்.

பித்தளை பஸ்மம், காந்தபஸ்மம், அப்ரகபஸ்மம் ஆகிய மூன்றையும் ஸம அளவாகச் சேர்த்துக் கலந்து கொள்ளவும்; த்ரிகடுகம், வாய்விடங்கம், பலாசம்விதை, ஓமம், சித்திரமூலம், சேராங்கொட்டை, எள்ளு இவற்றைச் சம அளவாக எடுத்து நன்கு சூர்ணம் செய்து, இச்சூர்ணத்தை முற்கூறிய மூன்று பஸ்மங்களோடும் ஸம எடையாகக்

1. உயர்ந்த வகையான ரீதிகா என்னும் பித்தளையானது சிறந்த மஞ்சள் நிறமானது; ஆகவே அது ஸ்வர்ண ரீதிகா என்றும் வழங்கப்படும். பித்தளைக்கு ஆரகூடம் என்றும் பெயர்.



கூட்டிக் கொள்ளவும். இவ்வௌஷதத்தை நிஷ்கப் பிரமாணமாக உட்கொண்டுவந்தால் வயிற்றிற் சேரும் கிருமிகள் ஒழியும்; குஷ்டரோகத்திலும், மிக முக்கியமாக வெண் குஷ்டத்திலும் இது உபயோகமானது; தீபநம், பாசநம் என்னும் குணங்களும் இதற்குண்டு.—202—204.

## வெண்கலம்.

(காம்ஸ்யம்—கோஷம்.)

வெண்கலம் கலப்பு லோஹம்.

தாம்ரம் எட்டு மடங்கு, தூவங்கம் இரண்டு பங்கு; இவ்விரண்டையும் உருக்கிக் கூட்டுவதால் உண்டாகும் உலோஹமே 'வெண்கலம்' அல்லது 'காம்ஸ்யம்' எனப்படுகிறது; அதில் ஸௌராஷ்ட்ர தேசத்திய வெண்கலம் சிரேஷ்டமானது.—205.

வெண்கலத்திற் சிறந்ததும் இகழ்ந்ததும்.

(1) கனிவொன்று சப்திக்கல்; மிருதுத்தன்மை; ஸ்நிக்த்தம்; சிறிது கறுநீலநிறத்துடன் கூடிய வெண்மை; களங்கமில்லாத பளபளப்பு; காய்ச்சினால் செந்நிறமடைதல்; ஆக இவ்வாறாம் சிறந்த வெண்கலத்தின் குணங்களாம். (2) காய்ச்சினால் பசுமை நிறங் கொள்ளுதல், லகுத்தன்மை யில்லாமையிற் செந்நிறமா யிருத்தல், கடினத் தன்மை, ரூக்ஷத்தன்மை, அடிதாங்காமை, மந்தமாகச் சப்தித்தல், பளபளப்பின்மை ஆக இவ்வேழும் வெண்கலத்தின் தாழ்குணங்க ளாகையால் அவ்வித வெண்கலத்தை ஔஷத முறைகளில் உபயோகிக்கக்கூடாது.—206, 207.

வெண்கலத்தின் குணங்கள்.

(1) வெண்கலம் இலகுகுணமுள்ளது; சுவையில் கைப்பு; உஷ்ண வீர்யம்; லேகநம்;[1] நேத்திரத்திற்குத் தெளிவைத் தருவது; கிருமி ஹரம்; குஷ்ட ஹரம்; வாத-பித்த ஹரம்; தீபநம். (2) வெண்கலத்தில் நெய் ஒன்றைத் தவிர்த்து மற்றெல்லாவற்றையும் வைத்திருந்து உட்கொண்டால் ஆரோக்யமும் சுகமும் உண்டாகும்; அவ்வித உணவுகள் வைத்தியமுமாகும்.[2]—208, 209.

காம்ஸ்யத்தின் சுத்தியும் பஸ்ம முறைகளும்.

(1) வெண்கலத்தைக் காய்ச்சி, பசுமூத்திரத்தில் தோய்த்தெடுத்தால் அது சுத்தமாகும். (2) கந்தகமும், தாளகமும் கூட்டி வெண்கலத்தை ஐந்து புடமிட சிறந்தமான பஸ்மமாகும். (3) மூன்று[3] க்ஷாரங்

1. பித்தளை இரஜனீதி என்றும், பிம்பரீதி யென்றுங் கூட இரண்டு விதமாக வழங்கப்படுகின்றன.

2. லேகநம்—தேஹத்திலுள்ள தாதுக்களையாவது மலங்களையாவது வரளச் செய்து, அவற்றைக் கழியச் செய்யும் குணம்.

3. வாத்ஸல்யம்—பத்தியமாகாத வஸ்துவும் அப்யாஸவசத்தால் தேஹத்திற்கு இசைவாயிருத்தல்.

4. மூன்று க்ஷாரங்கள்—யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம், டங்கண க்ஷாரம் என்பனவாம்.

கள், பஞ்ச லவணங்கள்[1] இவற்றை எலுமிச்சம் பழச்சாற்றில் பாவனை செய்யவும்; அவ்விதம் ஏழு முறை பாவனை செய்த க்ஷாராதிகளை வெண்கலம் பித்தளை இவற்றின் தகடுகளின் மேல் கனமாகத் தடவி, கஜபுடத்தில் வைத்துப் பக்குவம் செய்ய, வெண்கலம் சுத்தமான பஸ்மமாகும்.—210, 211.

## வர்த்தலோஹம்.

வர்த்தலோஹம்.

வெண்கலம், தாம்ரம், பித்தளை, அயம், நாகம் ஆகியவற்றின் சேர்க்கையாலான லோஹம் வர்த்தலோஹம்[2] எனப்படும். உலோஹதத்துவமறிந்தவர் இதையே பஞ்சலோஹம் என்றும் வழங்குவர்.—212.

வர்த்தலோஹத்தின் குணங்கள்.

(1) வர்த்தலோஹம் சீதவீர்யமும், கடுரஸமும், ரூக்ஷகுணமுமுடையது; கப-பித்தஹரம்; அரோசகத்தைப் போக்கும்; சர்ம ரோகங்களில் ஹிதம் செய்யும்; க்ருமிஹரம்; நேத்திரத்திற்கு ஹிதமானது; மலத்தை நன்கு வெளிப்படுத்தும். (2) வர்த்தலோஹத்திலான பாத்திரத்தில் சமையல் செய்த அன்னம், வியஞ்ஜனங்கள், பருப்பு முதலியவெல்லாம் தீபகம்-பாசகம் என்னும் குணங்களை விருத்தி செய்வதிற் சிறந்தவையாம்; ஆனால் புளிப்புள்ள எவ்வஸ்துவையும் வர்த்தலோஹத்திலான ஏனத்தில் உபயோகிப்பவர் விலக்கிவிடவேண்டும்.—213, 214.

வர்த்த லோஹ சுத்தியும் பஸ்மமும்.

(1) வர்த்த லோஹத்தைக் கடுந்தீயிட்டு எரித்து உருக்கிக் குதிரையின் சிறுநீரில் வார்க்க, அது சுத்தமாகும். (2) அவ்விதம் சுத்தி செய்த வர்த்தலோஹத்துடன் கந்தகமும் தாளகமும் கூட்டி புடமிட, அந்த லோஹம் பஸ்மமாகும். முறைப்படி அப்பஸ்மத்தை அந்தந்த யோகங்களில் உபயோகிக்கலாம்.—215, 216.

## இரஸ ஸித்தியும் பஸ்மங்களும்.

இரஸ-லோஹ பாஷாணாதிகள் பஸ்மமான பிறகே இரஸ முறைக்கு உபயோகம்.

(1) இரஸங்கள்,[3] உபரஸங்கள், லோஹங்கள் முதலியவை சிறந்த இனங்களாகவும், சுத்தி செய்யப்பட்டவையாகவும், முறைப்படி பஸ்மம் செய்யப் பெற்றவையாகவும் இருந்தால், அவற்றைக் கொண்டு இரஸம்[4] ஸித்தமாகுமேயன்றி வேறுவிதமாயாகாது. (2) இரத்தினங்கள், உலோஹங்கள், கவடி, சிப்பிகள், பாஷாணவகைகள், குளம்புகள், மான் கொம்பு முதலிய

1. பஞ்ச லவணங்கள்—ஸௌவர்ச்சலவணம், ஸைந்தவலவணம், [illegible] லவணம், பிடாலவணம், ஔத்பிதலவணம், [illegible]
2. வர்த்தலோஹத்தை நீலலோஹம் என்றும் கூறுவர். வர்த்தலோஹம், வெண்கலம், பித்தளை இம்மூன்றும் மிச்ரலோஹங்கள் எனப்படும்.
3. இரஸங்கள்—மஹாரஸங்கள் எனப் பொருள்.
4. இரஸம்—பாதரஸம் என்னும் பாரதம்.



கொம்புகள், எலும்பு, மஹாரஸாதிகளின் உருவத்தில் கடினமாயுள்ள சரக்குகள் ஆகிய இவைகளும் நன்கு பஸ்மம் செய்யப்பட்டால்தான் இரஸௌஷதமுறைகளில் உபயோகிக்க உதவும். 217, 218.

## பூநாக ஸத்துவம்.[1]

இரஸ-வஜ்ரங்களில் பூநாக ஸத்துவத்தின் உபயோகம்.

வஜ்ரம் முதலிய இரத்தினங்களைத் திரவமாகச் செய்வதற்கு உபயோகமான பூநாகமென்கிற நாகப்பூச்சிகளிலிருந்து ஸத்துவமெடுக்கும் முறை மொழியப்படுகின்றது. ஸூதராஜனென்கிற இரஸம், வஜ்ரம் இவ்விரண்டுக்கும் ஒளியை மிக்க விருத்தி செய்வதற்கு அச் சத்துவமே ஏற்றது. 219.

பூநாக ஸத்துவமெடுக்கும் முறைகள்.

(1) நாகப்பூச்சிகளைக் கொண்டுவந்து நன்றாகக் கழுவி, சாம்பராகச் செய்து, அச்சாம்பரைக் கரிசிலாங்கண்ணிச் சாற்றால் மூன்று நாட்களும், எலுமிச்சம்பழச் சாற்றால் மூன்று நாட்களும், கொச்சியிலைச் சாற்றால் மூன்று நாட்களும் அரைக்க வேண்டும்; பிறகு அதை திராவணவர்க்கச் சரக்குகளாலும்[2] ஆட்டியெடுத்து, வடகங்களாகச்[3] செய்யவும்; அவ்வடகங்களைப் பிடமூஷையில் அடைத்து, கடுந் தீயிட்டு இரண்டு யாமகாலம் எரிக்கவும். பிறகு அது தானே ஆறியதும் மூஷையிலிருந்து கடுகுபோன்று சிறியனவாயுள்ள வெள்ளை ரவைப் பொடிகளை வஸ்திரத்தில் கொட்டி சாலனம் செய்தெடுக்கவும்; அத்துடன் பனிரெண்டில் ஒரு பங்கு தாம்ரத்தையும் கூட்டி, நன்றாகத் தீயிட்டு எரித்து ரவைகளாகச் செய்யவும்; அந்த ரவைகளை யெடுத்து, நன்றாகக் கழுவி, வஜ்ரம் முதலியவற்றைத் திரவமாக்குவதற்கு முறைப்படி யுபயோகிக்கலாம். இந்த ரவைகள் கடினமாயிருக்குமாகையால் இச்சரக்கு கரஸத்துவம் எனப்படும்; இது உத்தமமான இரஸாயனமாகவும் உபயோகப்படும். ஒரு தடவை மூஷையிலடைத்து முன்கூறியவாறு ஊதினாலும் இச் சத்துவம் வெளியாகும்; இல்லையேல் மூன்று முறை மூஷைகளில் அடைத்து எரிக்க ஸத்துவம் வெளிவருவது திண்ணம். (2) பொன், வெள்ளி, செம்பு, காந்த லோஹம் ஆகிய லோஹங்கள் உற்பத்தியாகும் பூமிகளில் உண்டான நாக்குப் பூச்சிகளை நான்கு பிரஸ்தம் அளவு கொண்டுவந்து, மீந்நாள் நீரால் முதலிற் கழுவி, பிறகு குளிர்ந்த நீராலும் கழுவி, அப்பூச்சிகளைப் பட்டுணியால் வருந்தும்

1. பூநாகஸத்துவம்—நாகப்பூச்சிகளிலிருந்தெடுக்கப்படும் சத்து. இது ஓர் உபரஸம் என்று வைத்யக் சப்தஸிந்து. நாகம் என்னும் லோஹத்தின் ஸத்துவமே பூநாக ஸத்துவம் என்றும் சிலர்.
2. திராவணவர்க்கம்—10-ம் அத்தியாயத்தில் விவரம் பார்க்க.
3. வடகங்கள்—சிறிய அடைகளைப்போல ஔஷதங்களைச் செய்து உலர்த்தினால் அவை வடகங்கள் எனப்படும்.

மயிலுக்காவது, கருங்கழுப்பான கோழிக்காவது இரையாகப் போடவும்; அவற்றின்று அப்புறமையிடும் மலங்களைக் கவனமாகச் சேர்த்து, அவற்றை க்ஷார வர்க்கங்களும்[1] அம்ல வர்க்கங்களும்[2] கூட்டி அரைத்து, நல்ல வெயிலில் உலர்த்தி யெடுக்கவும்; பின்பு அதை ஓர் அகன்ற அகலிலிட்டு, எரித்து மையாக்கவும்; அந்த மையை இராவண வர்க்கச் சரக்குகளால்[3] ஆட்டி யெடுத்து, மூசையில் அடைத்து, குப்பட்டியி லிட்டு இரண்டு நாழிகை நேரம் நன்றாக எரிக்கவேண்டும்; பிறகு மூசையை வெளியிலெடுத்துத் தானே ஆறிய பிறகு அதனுள்ளிருக்கும் கோட்டத்தை[4] யெடுத்து, நன்கு அரைக்கவும்; ரவைகளுருவமான ஸத்துவத்தைச் சிதறுமல் எடுத்து, அலம்பி, ஸமஎடை பொன் கலந்து, நெருப்பிலிட்டு ஊதி, அச்சத்துவத்தைக் குப்பியில் எடுத்து வைக்கவும்; சில நாள் பழகியபிறகு அதை யுபயோகிக்க வேண்டும்.[5] 220—230.

*பூநாக ஸத்துவ அங்குலீயகமும், அதன் குணங்களும்.*

நாகப்பூச்சிகளிலிருந்து எடுக்கப்படும் ஸத்துவம் இரஸ முறைகளில் உபயோகிக்கச் சிறந்ததென்றும், அடியில் வருமாறு அதையுபயோகிப்பது நலமென்றும் ஸ்ரீஸோமதேவர் என்னும் ஸித்தர் கூறுகிறார். இரண்டு சாணமெடை பொன்னுடன் அதிற் கால் பங்கு அளவாக அச்சத்துவத்தைக் கூட்டி ஒன்றாக்கி, மோதிரம் ஒன்று செய்து, அம்மோதிரம் கழுவிய ஜலத்தை விஷம் தீண்டியவிடங்களிற் பூச, ஸ்தாவர விஷங்களும்[6] ஜங்கம விஷங்களும்[7] தீரும்; மேலும் நேத்திரரோகங்கள், வயிற்றுளைதல், மூலரோகம், காது நோய்கள், ஸ்திரீரோகங்கள் ஆகியனவைகளும் தீரும். 231.

---

1. க்ஷாரவர்க்கம்—10-ம் அத்தியாயம் பார்க்க.
2. அம்லவர்க்கம்—10-ம் அத்தியாயம் பார்க்க.
3. இராவண வர்க்கம்—10-ம் அத்தியாயம் பார்க்க.
4. கோட்டம்—இரஸத்தை ஜாரணம் பண்ணவும், கட்டுவதற்கும் உபயோகமான ஸத்துவம்.
5. நாகப்பூச்சிகளைக் கொண்டுவந்து, மயிலையாவது வலிவுள்ள கோழியையாவது அவற்றைத் தின்னும்படியாகச் செய்து, பிறகு அவை யிடும் மலத்தையும் சிறையும் முதலில் இடுவதைத் தவிர்த்து மற்றவைகளைச் சேகரித்து, க்ஷாரங்கள்-தேன்-நெய் இவற்றால் அவற்றை ஆட்டி, நன்றாகத் தீயிட்டு ஊதி, அப்பால் வெளிவரும் தாம்ரம் போன்ற ஸத்துவத்தை யெடுத்துக் கொள்ளவும். அச்சத்துவத்தினாலான மோதிரத்தைக் கையிலணிந்து கொண்டு தண்ணீர் அருந்த ஸகல விஷமும் தீரும்.—இரஸேந்திர சிந்தாமணி.
6. ஸ்தாவர விஷங்கள்—செடிகொடி மரங்கள் முதலியவற்றைச் சேர்ந்த விஷங்கள், அலரிவேர், எட்டிக்கொட்டை, அபினி முதலியன.
7. ஜங்கம விஷங்கள்.—பிராணிகள் ஸம்பந்தமான விஷங்கள் பாம்புகள், சிலந்திகள், நாய்முதலியவற்றின் விஷங்கள்.



## தைலபாதந முறை[1].

*அங்கோல பீஜதைலம்.*

(1) ஆத்துக்கும்பட்டை வேர்களை யெடுத்து இடித்துக் காடியிற் போடவும்; அவ்விதமே ஏறழிஞ்சிற் கொட்டைகளி லிருந்து சோறு எடுத்து இடித்து அதையும் அதிற் சேர்க்கவும்; அதில் நெய்போல் தோய்க்குள்ள தைலத்தை முறைப்படி[2] இறக்கவேண்டும். (2) ஆத்துக்கும் பட்டையிலைகளையும், வாலுழுவையிலைகளையும் காடி விட்டு அரைத்து, அக்கல்கத்தைக் கொண்டு ஏறழிஞ்சில் வித்துகளின் சூர்ணத்தை நன்றாக அரைத்தெடுத்து, அவ்வண்ணத்தையும் வலைபோன்ற வஸ்திரத்திற் கட்டி, கடும் வெயிலில் ஒரு கழியிற் கட்டித் தொங்கவிட்டு, அதனடியில் ஒரு கிண்ணத்தை வைக்கவும்; அக்கிண்ணத்தில் வடியும் தைலத்தை யெடுத்துவைத்துக் கொள்ளவும்; அது சித்திரம் என்கிற வெண்குஷ்டத்தைப் போக்கும். (3) ஏறழிஞ்சிற் கொட்டைகளைச் சூர்ணம் செய்து, காடியில் ஒரு இரவு முழுவதும் ஊறவைத்து நன்றாக அரைத்து, ஒரு பிண்டமாக உருட்டி, கந்தகயந்திரத்தில்[3] வைத்து, இரண்டு நாழிகை காலம் ஸ்வேதனம்[4] செய்ய வேண்டும்; அப்பிண்டத்தை ஒரு கெட்டி வஸ்திரத்திற் கட்டி, கனத்த இரு கழிகளால்[5] அழுத்தி நசுக்கிப் பிழிய, அடியில் வைத்த பாத்திரத்தில் எண்ணெய் வடியும். அத்தைலத்தை யெடுத்து ஏற்ற வியாதிகளில் உபயோகிக்கவும். இவ்விதமே கந்தகயந்திரத்தைக் கொண்டு வேறு எல்லாச் சரக்குகளிலிருந்தும் தைலத்தை வடித்தெடுக்கலாம். (4) வெண்குன்றுமணியைச் சமூலமாகக் கொண்டுவந்து சாறு பிழிந்து, அச்சாற்றால் ஏறழிஞ்சில் வித்துகளை அரைத்து முன்போலவே தைலமெடுக்கலாம். 232—238½.

*பலவேறு சரக்குகளிலிருந்து தைலம் இறக்கு முறைகள்.*

(1) வாலுழுவை, (2) தேவதாளி இவற்றின் விதைகளைப் பெரும் பூசணி வேர்களின் சாற்றால் அரைத்தும் முன்போலவே தைலம் எடுக்கலாம். (3) காயுருவிச் சாற்றால் எட்டிக் கொட்டையை அரைத்து அதிலிருந்தும் தைலமெடுக்கலாம். (4) கற்றாழை வேரின் சாற்றால் நேபாள விதைகளை ஆட்டி, அதிலிருந்தும் தைலம் இறக்கலாம். (5) சிறந்த காயுருவி வேரின் கஷாயத்தினால் வாலுழுவைவித்துக்களை அரைத்து, அவற்றிலிருந்து தைலமெடுக்கலாம். (6) திப்பிலி, (7) வெள்ளை குன்றுமணி இவற்றைச் சூர்ணம் செய்து, மிக்க மிருதுவான காக்கைலாறப் பொடியையும்

---

1. தைலமும் சில விதை முதலியவற்றின் ஸத்துவமாகையால் இவ்விஷயம் இங்கே குறிக்கப்படுகிறது.
2. முறைப்படி யென்றால் காய்ச்சியோ நசுக்கிப்பிழிந்தோ எடுப்பது எனக் கருத்து.
3. கந்தகயந்திரம்—9-ம் அத்தியாயம் பார்க்க.
4. ஸ்வேதனம்—8-ம் அத்தியாயம் பார்க்க.
5. இரு கழிகளாலான இக்கியந்திரியான கருவி கிட்டி எனப் படும்.

அத்துடன் கட்டி, தானியக் களஞ்சியத்திற் புதைத்து வைத்து, பிறகு ஒரு பக்ஷம் கழித்து எடுத்து முன்போலவே தைலம் இறக்கலாம்.[1] 239—242.

---

# ஆறாம் அத்தியாயம்.

## சிஷ்யோபநயநம்[2].

இரஸ சாஸ்திரப் பிரகடநத்திற்கு முகாந்தரம்.

இரஸ ஸம்பந்தமான விஷயங்களைக் கூறும் நூல்களெல்லாவற்றையும் நன்றாகப் பரிசீலனை செய்து, ஸாதகர்களின்[3] நன்மையைக் கருதி கிரமப்படி[4] இதில் விஷயங்கள் வெளியிடப்படுகின்றன. கிரமமில்லாமல் சாஸ்திரமில்லை; சாஸ்திரமின்றி கிரமமுமில்லை; ஆகவே கிரமத்துடன் கூடிய சாஸ்திரத்தைக் கற்றறிந்து எவன் காரியம் செய்கிறானோ அவனே ஸித்தி பெறுவான்.[5] 1, 2.

இரஸ சாஸ்திர குருவின் இலக்ஷணங்கள்.

இரஸசாஸ்திரம் கற்பிக்கும் ஆசாரியர் அறிஞனாகவும், திறமைசாலியாகவும், இரஸ சாஸ்திரத்தில் தேர்ந்தவனாகவும், மந்திரஸித்தி பெற்றவனாகவும், மனோதிடமமைந்தவனாகவும், சிவபக்தனாகவும், தேவீபக்தனாகவும், வேள்விகளைச் செய்பவனாகவும் இருத்தல் வேண்டும்; மேலும் எல்லாச் சாஸ்திரங்களிலுமுள்ள விசேஷங்களையும் அறிந்து, இரஸச் சரக்குகளின் வேலைகளில் ஸாமர்த்தியம் பெற்றவனாகவும்

---

1. 'பலவேறு சரக்குகளிலிருந்து தைலமிறக்கும் முறைகள்' என்னும் இத்தலையங்கத்தின்கீழ் கூறப்படும் 7 வித முறைகளும் கந்துக யந்திரத்தின் உதவியினால் செய்யப்படுபவை. இவற்றுள் முதல் முறை வாகுசீ தைலம், இரண்டாவது தேவதாளி தைலம், மூன்றாவது விஷமுஷ்டி தைலம், நான்காவது ஜைபால தைலம், ஐந்தாவது வாதுசீ தைலம், ஆறாவது கிருஞ்ஜ தைலம், ஏழாவது, காகதுண்டீ தைலம் என்று முறையே வழங்கப்படும்.

2. மஹாரஸாதிகள் நன்கு பக்குவம் செய்யப்படுவதற்கும், அவற்றைக் கொண்டு ரஸத்தை நன்கு ஸித்தம் செய்வதற்கும் ஏற்ற முறைகளைச் சாஸ்திர ரீதியாகக் கற்க வேண்டுமானால் தகுந்த குருவும், ஏற்ற சீடனும் அவசியமாகையால், சீடன் முறைப்படி குருகுலவாஸம் செய்து இரஸ சாஸ்திரம் கற்க வேண்டிய முறை இங்கு விவரிக்கப்படுகிறது. சிஷ்யனைப் பயில்விக்கும் அத்தியாயம் எனப் பொருள்.

3. ஸாதகர்—இரஸத்தை முறைப்படி பக்குவம் செய்து, அதனால் அணிமாதி அஷ்ட ஸித்திகளையடையும் உபாயங்களைக் கற்பவர்.

4. கிரமப்படி—முறைப்படி; முன்பின் ஒழுங்கு தவறாதபடி: என்றால் ஸ்வேதநம்-மூர்ச்சநம்-உத்தாபநம் முதலான ஸம்ஸ்கார முறைகளின் ஒழுங்கை யனுஸரித்து என்று பொருள். அல்லது அநுஷ்டான முறை தவறாமல் என்றும் பொருள் கூறலாம்; சாஸ்திரத்திற் கூறிய முறைகளை அநுபவத்தில் தான் செய்தும் பிரயோகித்தும் பார்த்து என்பது கருத்து.

5. இரஸசாஸ்திரத்திற் கைதேர்ந்த ஸித்தனாவான் எனப் பொருள்



இருக்கவேண்டும்; இவ்வித இலக்ஷணங்களுடன் கூடிய புருஷனே இரஸ சாஸ்திரத்திற்குக் குருவாகலாம். 3—4½.

இரஸசாஸ்திரம் பயிலும் மாணாக்கனது இலக்ஷணங்கள்.

சீடர்கள் குருவினிடம் பக்தர்களாகவும், நல்லொழுக்கமுள்ளவராகவும், ஸத்தியந் தவறாதவராகவும், விரதாநுஷ்டானங்களைச் செய்வதில் திடமான பற்றுதலுள்ளவராகவும், சோம்பலற்றவராகவும், தமது தர்மங்கள் எவையென்பதை யறிந்தவராகவும், குருவினது கட்டளைகளுக்கு எப்பொழுதும் காத்திருப்பவராகவும் இருத்தல்வேண்டும்; மேலும் ஆடம்பரம் துவேஷம் ஆகியவை நீங்கியவராகவும், தொன்று தொட்டுவரும் ஆசாரங்களில் நிஷ்டை பெற்றவராகவும், சாந்த குணம் நிரம்பியவராகவும், மந்திர சாஸ்திரத்திலும் தேவதைகளைப் பூஜிப்பதிலும் நோக்கமுள்ளவராகவும், சிறந்த ஸாதகர்களாகவும் உள்ள சிஷ்யர்களை இரஸஸம்ஸ்கார முறையில் கைதேர்ந்தவராவர். 5—7.

இரஸபாகங்களில் ஸஹாயகர்கள்.

ஸஹாயகர்கள் இரஸச்சரக்குகளைப் பக்குவம் செய்யும் வேலைகளில் எப்பொழுதும் சுறுசுறுப்புள்ளவராகவும், பெரியோர்களிடம் அதிக அடக்கமுள்ளவராகவும், குலசீலர்களாகவும், யஜமானனிடம் பயபக்தியுள்ளவராகவும் இருக்கவேண்டும்; அத்தகைய ஸஹாயகர்களே இரஸ வேலைகளில் உபயோகமுள்ளவராயிருப்பர். 8.

இரஸவித்தையில் ஸித்தி பெறவியலாதவர்.

நாஸ்திகர்கள், நல்லொழுக்கமற்றவர், மிகச்சொற்ப அறிவுடன் ஆடம்பரம் செய்யுந்தன்மையர் ஆகியவர்கள், கள்ளத்தனமாகவும், கபடமாகவும், மூர்க்கத்தனமாகவும் குருவினிடமின்றி வேறிடங்களிலிருந்தும் வித்தையைக் கைக்கொள்ள விரும்புவர். அத்தகையவர்களுக்கு மணி-மந்திர-ஔஷதங்கள் சிறிதும் பயன்படமாட்டா; ஒருக்கால் முடத்தனத்தினால் ஏதேனும் இரஸ முறைகளை அவர்கள் செய்தால் தம்பொருளை அவர்கள் அழித்துக் கொள்ள நேரிடும். அவர்களுக்கு இவ்வுலகிலும் மேலுலகிலும் இன்பமே இல்லை. ஆகையினால் சீடன், பக்தி விசேஷத்தைக்கொண்டு குரு முற்றிலும் மனங்களிக்குமாறு நடந்து, இரஸவித்தையைத் தான் அதில் ஸித்தியடையும் பொருட்டுப் பயில வேண்டும்; சீடன் சிரத்திற் கைகூப்பி வணங்கி ஆசிரியனிடமிருந்து ஆசியைப் பெற்று இரஸவித்தையை நன்கு ஸாதிக்கவேண்டும். 9—12.

இரஸசாலையின் அமைப்பு.

1. மனோஹரமான இடத்தில் இரஸசாலையை அமைக்கவேண்டும்; அவ்விடம் பிணிகள் பரவக் கூடாததாகவும், அறநெறி தவறாது ஆளப்படும் இராஜ்யத்தைச் சேர்ந்ததாகவும், பார்வதி பரமேச்வரர்கள் கோயில் கொண்டிருப்பதாகவும், நகரத்திற்குச் சமீபமாய் நீர்வளம் நிலவளங்களால் செழிப்புள்ளதாகவும் இருத்தல் வேண்டும். அத்தகையவிடத்திலேயே இரஸ வேலைகளைச் செய்து ஸித்தி

பெறலாம். இது இரஸசாலைக்கேற்ற தேசம் ஆம். (2) நகரத்திற்கு அருகில் மனதைக் கவரக்கூடியதான தோட்டமொன்றில் இரஸசாலையை அமைக்க வேண்டும். அத்தோட்டத்திற்குச் சுற்றிலும், நாற்புறமும் வாயிற்படிகளுடன் கூடியதாய் மதிற்சுவர் இருக்கவேண்டும்; அச்சாலை வெகு விஸ்தாரமாகவும், இரம்யமாகவும், போதியவளவு பெரிதான பெரிய சாளரங்கள் அமைக்கப்பெற்றதாகவும், நிருமிக்கப்படவேண்டும். அதற்கு அருகில், ஸமமாகவும் நல்ல வெளிச்சமுடையதுமாக இரஸமண்டபம் ஒன்று அமைக்கப்பட வேண்டும்; அதுவும் நன்கு விசாலமாகவும், அந்நியரும் நடமாடக்கூடாத ஏகாந்தமாகவும், கதவும் தாழ்ப்பாளும் அமைக்கப் பெற்றதாகவும் இருக்கவேண்டும்; அவ்விடத்தில் தரையானது மேடுபள்ளமில்லாமல் ஸமமாகவும், கெட்டியாகவும், கண்ணாடிபோல் வழவழப்புடன் பளபளப்புள்ளதாகவும் இருக்கவேண்டும். அதன் மத்தியில் அழகாக ஒரு திண்ணையும் அமைக்கப்படவேண்டும். 13—18.

இரஸலிங்கமும் அதன் பூஜை முறைகளும்.

பொன்னேக்கு மூன்று நிஷ்கப்பிரமாணம்;[1] இரஸேந்திரம்[2] ஒன்பது நிஷ்கப்பிரமாணம்; இவ்விரண்டையும் காடிவிட்டு ஒரு யாமகாலம் ஆட்டவும்; அதைக்கொண்டு ஒரு லிங்கம் செய்யவும்; அந்த லிங்கத்தை ஓர் எலுமிச்சம் பழத்தினுள் அடக்கம் செய்து, காடியுள்ள பாத்திரத்தில் டோலாயந்திரத்தில்[3] ஒரு நாள் எரித்துப் பக்குவம் செய்யவும். அந்த லிங்கத்தை முற்கூறிய மண்டபத்தில் வைத்து முறைப்படி பூஜை செய்யவும்; ஒரு இரஸலிங்கத்தைப் பூஜை செய்தால் ஆயிரங்கோடி லிங்கங்களை அர்ச்சித்த பலன் உண்டு; இரஸலிங்கத்தைத் தரிசிப்பதாலும், ஸ்பரிசிப்பதாலும் ஸகல பாவங்களும் தீரும்; முக்தியும் பெறலாம்; எனச் சிவபெருமான் கூறியுள்ளார். ஆக்நேய திசையில் 'ஹ்ரீம்' என்று அகோர மஹாமந்திரத்தையும் கூறி இரஸலிங்கத்தைப் பூஜிக்கவேண்டும். பதினைந்து புயங்களோடும், ஐந்து முகங்களோடும், மூன்று நேத்திரங்களோடும் கூடியதாகவும், வெண்ணிறமாகவும், நீலநிற கண்டமுள்ளதாகவும், பிரேதத்தில் ஏறியிருப்பதாகவும், இரஸலிங்கஸ்வரூபம் தோன்றுவதாகத் தியானிக்கவேண்டும். இரஸலிங்கத்தின் மடியில் ஒரு முகத்தோடும், நான்கு கைகளோடும், பொன்னிற வஸ்திரத்தோடும், உருக்கிய தங்கநிறமாய் மஹாதேவியார், வலது கரத்தில் ஜபவடத்தையும் இடது கரத்தில் பாசத்துடன் கூட அபயமுத்திரையையும் தரித்துக் கொண்டு வீற்றிருப்பதாகவும் தியானம் செய்யவேண்டும். 'வாக்மாயா ஸ்ரீ: காமராஜ சக்திபீஜம், ரஸாங்குசாயை

1. நிஷ்கம்—சுமார் 32—குன்றுமணி யெடை.
2. இரஸேந்திரம்—முதல் அத்தியாயத்தில் ஐந்துவித ரஸங்கள் என்னும் தலையங்கம் பார்க்க.
3. டோலாயந்திரம்—9-ம் அத்தியாயம் பார்க்க.



ஸ்வாஹா; தசாதசாம்ஸையை[1] ஐந்நேயா வித்யா ரஸாங்குசா' என்னும் மந்திரமோதி கந்தங்கள், புஷ்பம், அக்ஷதை முதலியவற்றைக் கொண்டு தேவி பூஜையைச் செய்யவும். இரஸசாலையின் கிழக்குத் திசையில் நந்தீச்வரனையும், தென் திசையில் ப்ருங்கீச்வரனையும், மேற்கில் மஹாகாலேச்வரனையும், வடதிசையில் குபேரேச்வரனையும் பிரதிஷ்டைசெய்து, ஒவ்வொருவருக்கும் பிரணவத்தை முதலிலும், நம: என்பதை முடிவிலும் வைத்து நாமமந்திரங்களைக் கூறி[2] பூஜிக்க வேண்டும். இவ்வாறு ஆங்கு இரஸஸித்தியின் பொருட்டு இரஸலிங்கார்ச்சனையை நாள்தோறும் செய்யவேண்டும். இவ்விதம் சிவபெருமான் கூறிய இரஸவித்தையை முற்கூறிய விதிகளின்படி, ஸாதகனுக்கு, குரு மிகவும் மனங்குளிர்ந்து அநுக்கிரஹ பூர்வகமாய் உபதேசிக்கவேண்டும். சிறந்த நக்ஷத்திரத்தில், நல்ல முகூர்த்தத்தில் நீர் நிரம்பிய கும்பமொன்றை பொன் இரத்தினங்கள் கனிகள் ஆகியவற்றுடன் கூடியதாய் இரஸசாலையில் இரஸலிங்கத்தின் முன்னிலையில் ஸ்தாபிக்கவேண்டும்; அக்கும்பத்தின் மேல் சிறந்த வஸ்திரத்தைச் சுற்றவும்; கந்தம், புஷ்பம், அக்ஷதை, தூபம், நைவேத்யம் முதலியவற்றால் பக்தியுடன் அதைப் பூஜிக்கவும். பூஜையின் முடிவில் முக்கோணவடிவமான ஹோமகுண்டத்தில் எள்ளு, நெய், பாயஸம், [illegible] முதலியவற்றின் பஞ்சகம் ஆகியவற்றைக் கொண்டு [illegible] அகோரமந்திரத்தையும், இரஸாங்குசமந்திரத்தையும் [illegible] செய்யவும். அதன் முடிவில் சீடனை அழைக்கவேண்டும்; அ[illegible] தேவதையின் சக்தியைப் பெற்றவனாகவும், இரஸ[illegible]வித்தை பற்றுள்ளவனாகவும் இருக்கவேண்டும். இவ்வி[illegible] பெற்ற சீடனை சிறந்த குருவினிடம் தீக்ஷையைப்[3] பெறவேண்டும். சுத்தமாக ஸ்நானம் செய்த அந்த சிஷ்யனை முற்கூறியபடி மந்திரத்தினால் பரிசுத்தமான கும்பஜலத்தினால் அபிஷேகம் செய்து வைத்து, அகோரவித்தையையும் அங்குசவித்தையையும் சிஷ்யனுக்கு உபதேசிக்கவேண்டும். அவரவர் சக்திக்கியவ்வளவு சிஷ்யன் குருவுக்கு தக்ஷிணையும் அளிக்கவேண்டும். குருவின் கட்டளைப்படி அகோரமந்திரத்தையும்,[4] இரஸாங்குசமந்திர

1. இரஸாங்குசவித்தை—"ஓம், ஐம், ஸ்ரீம், க்லீம், ஹ்ரீம் ரஸாங்குசாய நம:" என்கிற பன்னிரண்டு அக்ஷரங்களடங்கிய மந்திரம், அல்லது ஹ்ரீம், காமராஜ சக்தி பீஜ ரஸாங்குசாயை நம:.
2. "ஓம் நந்தீச்வராய நம:, ஓம் ப்ருங்கீச்வராய நம:, ஓம் மஹாகாலாய நம: ஓம் குபேராய நம:" என்றவாறு.
3. இரஸதீக்ஷை—இரஸத்தை ஸம்ஸ்காரம் செய்யு முறைகளுள்பட அநேகமான மந்திர தந்திரங்களைச் சிஷ்யனுக்கு உபதேசிக்கும் சடங்கு.
4. அகோர மந்திரம்—"ஓம், ஏம், ஹ்ரீம், ஹ்ரூம், அகோராதா, ப்ரஸ்புட ப்ரஸ்புட, ப்ரகட ப்ரகட, கஹ கஹ, சமய சமய, ஜாத ஜாத, தஹ தஹ, பாதய பாதய, ஓம், ஹ்ரீம் ஹ்ரைம், ஹ்ரௌம், ஹ்ரூம், அகோராய, பட்."

த்தையும் தனித்தனியே இலக்ஷும் முறை ஜபிக்கவும். முடிவில் த்ரிகோண ரூபமான குண்டத்தில் ஜபத்தின் எண்ணிக்கையிற் பத்தி லொரு பாகம் தட்டைகள் ஜாதிப் பூக்களை த்ரிமதுரத்தில்[1] கலந்து கலந்து ஹோமம் செய்யவேண்டும். இறுதியில் முற்கூறிய காலி நீ கன்னிகையைக் கொண்டு இரஸ லிங்கத்துக்கு அர்ச்சனை செய் விக்கவும். இதை யெல்லாம் நிறைவேற்றிய பின் இரஸ சாலையிற் பிரவேசிக்கலாம். 19—42.

**இரஸ சாலையில் இரஸாதிகளை வைக்கும் முறை.**

இரஸசாலை பரிசுத்தமாகவும், மெழுகப்பெற்றதாகவும், பெரிய திண்ணையுள்ளதாகவும் இருக்கவேண்டும். அத் திண்ணையில் விஸ்தாரத்தைக்கொண்டு இரண்டிரண்டு முழம் விஸ்திரணமுள்ளவையாய் வட்டமான ஆறு கோணங்கள் வரையவும்; திண்ணைக்கு வெளியிலும் அவ்விதமே எட்டு வட்டங்களை வரைக. அத்திண்ணைக்கு நான்கு வாயிற்படிகளமைத்து, ஒவ்வொரு வாயிலிலும் நான்கு கோணங்களான இரேகைகளுக்கிடையில் தாமரை தளங்கள் நான்கு வரைக. அவைத்துக்கும் இடையில் கர்ணிகை இருக்குமிடத்தில் கல்வத்தை வைக்கவும்; அக்கல்வம் இரும்பாற் செய்யப்பட்டு, பொன்றாகிய இரேகைகளைப் பெற்றிருத்தல் நலம். அக்கல்வத்தில் நூறு பலம், அல்லது ஐம்பது பலம், அல்லது இருபத்தைந்து பலம் இரஸத்தைச் சேர்த்து, இரஸலிங்கத்துக்குச் செய்தது போலவே பூஜை செய்யவும். (1) வஜ்ரம், வைக்ராந்தம், வஜ்ராப்ரகம், காந்த லோஹம், டங்கணமென்னும் வெங்காரம், பூநாகஸத்துவம் ஆகிய இவ்வாறும் இரஸ

**இரஸ சக்திகள்.**

சக்திகள் எனப்படும்; இவற்றை முறையே முன் வரையப்பட்ட சக்கிரத்தில் ஆறு மூலைகளில் வைத்து பூஜிக்கவும். (2) கந்தகம், தாளகம், அன்னபேதி, மனச்சிலை, கங்குஷ்டம், ஸௌராஷ்டிரம்ருத்திகை, இராஜாவர்த்தம்[2], கைரிகமென்னும் காவி ஆகிய இவ்வெட்டும் உபரஸங்களாம். இவற்றை முற்கூறிய சக்கிரத்தில் முறையே கிழக்திசையிலுள்ள தளம்முதற் கொண்டு ஈசான திசை வரையிலுள்ள எட்டு திக்குகளிலுமுள்ள தளங்களில் வைக்க வேண்டும்.

**உபரஸங்கள்.**

(3) இரஸகம், விமலம், ஸ்வர்ண மாக்ஷிகம், சபலம், பால் துத்தம், இரஸாஞ்ஜனம், லிங்கம், மயில்துத்தம் என்பவை மஹாரஸங்களாம். இவற்றைச் சக்கிரத்தின் மூலையிலுள்ள எட்டு தளங்களின் முனைகளிலும் கிழக்கு முனையாரம்பித்து ஈசான மூலையிலுள்ள தளம் வரையில் முறையே வைத்துப் பூஜிக்கவும். (4) பிறகு கிழக்கு வாயிலில் ஸ்வர்ணத்தையும் வெள்ளியையும் வைக்கவும்; தாமரம்

**மஹாரஸங்கள்.**

1. த்ரிமதுரம்—மூன்று இனிப்புகள்; அவை:—தேன், சர்க்கரை, நெய்.—இராஜ நிகண்டு. "மதுத்ரயம்" என்றும் கூறப்படும்.

2. இராஜாவர்த்தம் இரத்தினங்களைச்சேர்ந்ததாயிருக்கும், இரஸ வித்தி முறையில் இது உபரஸங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.



ரம் இவற்றைத் தெற்கு வாயிலிலும், வங்கம் காந்தம் இவ்விரண்டையும் மேற்கு வாயிலிலும், முண்டம் தீக்ஷ்ணம் இவற்றைவடக்கு வாயிலிலும் வைத்து, இவ்வனைத்தையும் அகோரமந்திரத்தைக்கொண்டும் இரஸாங்குச மந்திரத்தைக்கொண்டும் பூஜிக்கவேண்டும்.

**அஷ்டலோஹங்கள்.**

(5) வாயிற்படிக்கு வெளியில் அடியில் வரும் பொருட்களையும் கருவிகளையும் வைக்க வேண்டும்:—பீடம்,[1] காஞ்ஜிக மென்னும் காடி, யந்திரங்கள்,[2] க்ஷாரங்கள்,[3] மண்கள்,[4] இலைவணங்கள், கோஷ்டிகள்,[5] மூஷைகள், வங்கநாளம்,[6] உமி, தழல், காட்டுவறட்டிகள், துருத்தி, பலவகைக் குறடுகள், அம்மி, கல்வங்கள், உரல், தட்டான் வைத்துக்கொள்ளும் கருவிகள், எல்லாவிதமான நிறைகளோடு கூடிய பலவகைத் தராசுகள், மண்-மரம்-செம்பு உலோஹம் இவற்றாலாகிய பலவகைப்பாத்திரங்கள், திவ்யமான ஔஷதிவர்க்கங்கள்,[7] இரஞ்ஜகம்[8] ஸ்நேஹசர்க்குகள்[9] ஆகியவைகளாம்; இவற்றுடனெல்லாம் பஞ்சாக்ஷர மென்னும் மூலமந்திரத்தினால்[10] பைரவதேவதையையும் அங்கு பிரதிஷ்டை செய்து பூஜிக்க வேண்டும். அப்பொழுது இரஸகர்மத்தில்

**இரஸ கர்மத்தில் உதவும் கருவி முதலியன.**

1. பீடம்—இரஸத்தை ஜாரணம் செய்வதற்குபயோகமான க்ஷாரரூபமான சரக்கு. "கெந்தகத்தைப் பலாசம் பட்டையின் சாற்றில் நூறுமுறை பாவனை செய்யவும்; இது அக்நிமுகபீடம் எனப்படும்; இது எல்லாவற்றையும் ஜாரணம் செய்ய உதவும்" என்று இரஸேந்திரசிந்தாமணி. பீடம் பலவகைப்படும்.

2. யந்திரங்கள்—9-வது அத்தியாயத்திற் கூறப்படுபவை.

3. க்ஷாரங்கள்—ஸர்ஜக்ஷாரம், டங்கணக்ஷாரம், யவக்ஷாரம்.

4. "புற்றுமண், ஓட்டை, காவிக்கல், செங்கல், உப்புமண் ஆகிய இவ்வைந்தும் பஞ்ச ம்ருத்திகைகள் எனப்படும்."

5. கோஷ்டிகள்—10-வது அத்தியாயம் பார்க்க.

6. வங்கநாளம்—நெருப்பை ஊதுவதற்கான ஒருவித கருவி.

7. ஔஷதிவர்க்கங்கள்—ஏகவீர்ய குணங்களைச் சேர்ந்த மூலிகைகள் முதலியன.

8. இரஞ்ஜகம்—நிறமூட்டுமென்னும் வஸ்துக்கள்; "மஞ்ஜிஷ்டி, புலாச, கருங்காலி, செஞ்சந்தனம், அலரி, தேவதாரு, ஒருவித மட்டிப் பால் போன்ற பிசினுண்டாகும் லாக்ஷை, தாரு, மஞ்சள், மரமஞ்சள், மற்றுமுள்ள சிவந்த புஷ்பங்கள் இவற்றைச் செவ்வரக்குக் குழம்பால் அட்டி, தைலம் காய்ச்சவும். அத்தைலத்தினால் பீஜம் முதலியதற்குச்சாயமேற்றலாம்." என்று இரசேந்திரசிந்தாமணி.

9. ஸ்நேஹகம்—சரக்குகளுக்கு ஸ்நிக்தத்வம் என்னும் எண்ணெய்ப் பிசையை யுண்டாக்கும் சரக்குகள்.

10. மூலமந்திரம்—'வாக், மாயா, ஹ்ரீம், ஸ்ரீம், க்ஷ்மம்' என்பது பஞ்சாக்ஷர மூலமந்திரம் என்று கூறப்படுகிறது.

ஸித்திபெற்ற ஸகல ஸித்தர்களுடையவும், அடியில் வரும் நாமங்களைச் சங்கீர்த்தனம் செய்யவேண்டும் :—வியாளாசார்யர்,[1] சந்திரஸேனர், லாடபுத்தி,[2] கர்வநூனர், நாகார்ஜுனர், இரத்னகோஷர்,[3] ஸுராநந்தர், யசோதனர், இந்திரத்யுமர்,[4] மாண்டவ்யர், சர்ப்படி,[5] சூரஸேனர், ஆகமர்,[6] நாகபுத்தி,[7] கண்டர், காபாலிகர், காமரி,[8] தாந்த்ரிகர்,[9] சம்பு, லங்கர்,[10] ஸ்பாடர், சாரதர்,[11] பாஹுவாஹன்,[12] முனிச்ரேஷ்டர்,[13] கோவிந்தர், கபிலர், பலி[14] ஆகிய இவ்வனைவரும் இரஸ ஸித்தியைப் பெற்று மிகவும் தேஜஸையும் பலத்தையும் பெற்றவர் ; பூதங்களையும் வென்று வசப்படுத்தியவர் ; சிரஞ்சீவிகளாயிருந்து, இன்பத்தில் ஆழ்ந்தவராய் உலகமெங்கும் ஸஞ்சரிப்பவர் ; இவ்விருபத்தேழு ஸித்தர்களும் இரஸஸித்தி பளிக்கக்கூடிய சக்தியுள்ளவர்கள் ; வணங்கி வழிபாடு செய்வதற்கேற்றவர். இந்த நாம ஸங்கீர்த்தனத்திற்குப் பிறகு சிரத்தையுடன் இரஸபூஜை செய்யவேண்டும். பின்னர் இஷ்டதேவதைகளையும் தொழுதுக் களிப்புறச் செய்ய வேண்டும். இவ்வாறு இரஸசாலையில் ஸகல திரவ்யங்களையும் ஒழுங்காகச் சேமித்து வைத்து, இரஸோத்ஸவத்தை நிறைவேற்றவேண்டும் ; அத்திருவிழா இரஸவாத வேலையில் எத்தடங்கலும் உண்டாகாமற் செய்யக் கூடியதாயிருப்பதோடு, இஷ்டஸித்தியையும் பயன்படும். அப்படியின்றி, விதிப்படியறியாமல் ஒருவன் இரஸ ஸம்பந்தமான மந்திரதீக்ஷையில்லாமலும் குருபதேசமின்றியும் இரஸக்கிரியையைச் செய்ய விரும்பினால் அவன் பெரு முயற்சி செய்தாலும் அதில் ஸித்திபெறமாட்டான். ஆகவே ஸம் முயற்சி செய்தேனும் சாஸ்திரத்திற் கூறிய வண்ணம் இரஸக் கிரியையைச் செய்யவேண்டும். 43—66.

இருபத்தேழு ஸித்தர்கள்.

1. வியாளாசார்யர்—வியாளர் அல்லது வியாடி.
2. லாடபுத்தி—கோரக்கர் என்றும் கூறப்படுவர்.
3. இரத்ன கோஷர்—இரத்ன கோசர்.
4. இந்திர த்யுமர்—இந்திரதர்.
5. சர்ப்படி—ஹரி.
6. ஆகமர்—ஆதிமர்.
7. நாகபுத்தி—நாகபோதி.
8. காமரி—காபாலி.
9. தாந்த்ரிகர்—ஸாத்விகர்.
10. லங்கர்—லங்கேசர்.
11. சாரதர்—விசாரதர்.
12. பாஹுவாஹன்—நரவாஹனர்.
13. முனிச்ரேஷ்டர்—பிரம்மா.
14. பலி—லம்பகர்.



இரஸவித்தையைக் கற்க விரும்புபவர் பீடம்[1] முதலாக [illegible] பாகங்களைக் கசடறத் தெரிந்து கொள்வதிற் பெரிதும் [illegible] புள்ளவராயிருக்கவேண்டும் ; குருமார்களி[illegible] த்து வித்தையைக் கற்கவேண்டும் ; அத்[illegible] துக்கு அவச்யமான அதிகாரத்தை அரசாங்கத்தி லிடமிருந்து பெற்றிருந்தால்தான் அவர் நன்கு விளங்குவர். இரஸ வித்தையைத் தவிர்த்த வேறு எ[illegible]ரியிலும் அவர் கருத்தைச் செலுத்தக் கூடாது ; இரஸக் கிரி[illegible]ளை நன்கு நிறைவேற்றப் போதுமான திரவ்ய வான்களாக வும், அத்தொழிலைச் செய்வதற்கு ஜனங்களால் வேண்டப்பெற்ற வராகவும் இருத்தல்வேண்டும்; இரஸாதிகளின் பரிமாணங்களையும், பக்குவ முறைகளையும், அவற்றிற்கு அவசியமான யந்திரங்களையும் நன்கறிந்து அவற்றைப் பிரயோகிப்பதில் திறமையுள்ளவராகவும், எல்லா ஔஷதங்களையும் பக்குவம் செய்து உபயோகிப்பதிற் சமர்த்தர்களாகவும் இருக்கவேண்டும். * கிழத்தனம்-மரணம்-வியாதிகள் முதலான பீடைகளினின்றும் மீட்டு மனிதரைக் காப்பாற்றி வைக்கும் பிராயமுள்ள[2] பாதரஸமானது முற்கூறிய குணமுள்ளவருக்கே ஸித்தியைத் தருமன்றி வேறு வகையிற் பயன் தராது. 67.

இரஸவித்தி பெறுவதற்கான யோக்யதைகள்.

(1) இரஸசாஸ்திரத்தை அந்தணர்களுக்கு தர்மத்தின் பொருட்டும், க்ஷத்திரியர்-வைசியர் இவர்களுக்கு விருத்தியின் பொருட்டும், மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதற்கும் உபதேசிக்க வேண்டும். (2) இரஸ வித்தைகளைத் தோன்றியவாறு அனைவருக்கும் வெகு பகிரங்கமாகக் கூறுவதால் அச்சாஸ்திரத்தின் மஹிமை குன்றுமாதலால், கூடியவரையில் அதைக் கோப்யமாக வைத்திருப்பது நலம். (3) ஔஷதமும் அப்படியே; ரோகிகளும், வேறு பலரும் அறிய ஔஷதங்களைச் செய்வதும், ஸித்தவைகளை நிறைவேற்றுவதும் உசிதமல்ல; அப்படிச் செய்வதால் ஔஷதாதிகளுக்குள்ள வீர்யம் பெருமையுறாது. 68—71.

இரஸ சாஸ்திரோபதேசத்திற்குப் பாத்திரமானவர்கள்.

1. பீடம்—இதைப் பற்றி 8-ம் அத்தியாயம் பார்க்க.

2. "இரஸமானது மனிதருக்கு நேரிடும் பலவகையான பிணிகள், கிழத்தனம், மரணம் இக்காரணங்களால் உண்டாகும் பயத்தைப் போக்கி, அவர்களைக் கடைத்தேறச் செய்வதால் பாரதம் என்று கூறப்படுகிறது" ;—இரஸேச்வரதர்சநம்.

# ஏழாம் அத்தியாயம்.

## இரஸ சாலை[1].

*இரஸ சாலை அமைக்கப்பட வேண்டிய வகை.*

வெயிற் காற்று முதலியவைகளாலுண்டாகக் கூடிய எவ்வித இடையூறுமணுகாத சிறந்ததோர் இடத்தில் இரஸ சாலையை நிருமிக்கவேண்டும். எல்லா மூலிகைகளும் கிடைக்கக் கூடியதாகவும், சிறந்த கிணறுகளுள்ளதாகவும், மிகச் சுத்தமாய் மனோஹரமானதாகவும் அவ்விடம் இருக்கவேண்டும்; இரஸ சாலைக்கு உபயோகமான ஒரு தோட்டத்தில் அதன் வட திசையிலாவது, ஈசான்ய திக்கிலாவது, கிழக்குப் பக்கத்திலாவது வெகு விமர்சையாக அச்சாலை அமைக்கப்படவேண்டும்; அதில் அவசியமான அகில சரக்குகளும் கருவிகளும் பாத்திரம் முதலிய மற்றெல்லா உபகரணங்களும சேமித்து வைக்கப்பட்டிருக்க வேண்டும். 1, 2.

*இரஸசாலையில் எதெது எவ்வெவ்விடத்தில் அமைக்கப்பட வேண்டுமென்பது.*

இரஸ சாலையின் கிழக்குப் பக்கத்தில் இரஸ பைரவனை[2] ஸ்தாபிக்கவேண்டும்; தென் கிழக்கு மூலையில் அக்னியின் உதவியைக் கொண்டு செய்யவேண்டிய காரியங்களுக்கு[3] வசதிகளை அமைக்கவேண்டும்; தெற்குப்பக்கத்தில் உடைப்பது - இடிப்பது - குத்துவது முதலான கல்லுரல் கல்வம் முதலியதிற் செய்யும் வேலைகளுக்கு இடமேற்படுத்தவேண்டும்; தென்கிழக்கில் சஸ்திரகர்மங்களுக்கும்,[4] மேற்கில் கழுவுதல் முதலியதற்கும், வடமேற்கில் சோஷணமென்னும் உலர்த்துவது முதலான வேலைகளுக்கும், வடக்கில் வேதககாரியத்திற்கும்,[5] வடகிழ் மூலையில் பக்குவ முறைகளால் முழுத்துச் சித்தம் செய்யப்பட்ட ஸகல சரக்குகளையும் ஒளஷதாதிகளையும் சேர்த்து வைப்பதற்கும் வசதிகள் அமைக்கப் படவேண்டும். 3—4½.

இரசாதிகளைச் சித்தம் செய்வதற்கு அவசியமான ஸகல வஸ்துக்களையும் இரஸ சாலையிற் சேர்த்து வைக்கவேண்டும். அவை

1. முன் அத்தியாயத்தில் சுருக்கமாகக் கூறிய இரஸசாலை விஷயம் இச்சாஸ்திரத்தில் முக்கியமெனக் கருதி, அதே விஷயம் சிறிது விஸ்தரித்து இவ்வத்தியாயத்தில் விளக்கப் படுகின்றது.

2. இரஸ பைரவன்—முன் அத்தியாயத்திற் கூறிய இரஸலிங்கம்.

3. அக்னியினாலாகவேண்டிய காரியங்கள் — உலோஹாதிகளை உலையிற் காய்ச்சுதல், உருக்குதல், புடமிடுதல் முதலியன.

4. தாது லோஹாதிகளை வெட்டுவது, அறுப்பது, இழைப்பது முதலிய வேலைகளுக்கு உதவும் கருவிகள் இதனால் குறிக்கப்படுகின்றன.

5. வேதகம்—வேதை யென்றும் வழங்கப்படும்; இரஸேந்திரம் தாக்குவதாலே தாம்ராதிகள் சுய குணம் விட்டு ஸ்வர்ணாதிகளின் தன்மையைப் பெறுமாறு செய்யும் முறை வேதகம் எனப்படும்.



யாவன:—ஸத்வபாதன கோஷ்டி[1], காரகோஷ்டி, பூமி கோஷ்டி,[2] சலத் கோஷ்டி,[3] பல அளவான ஜலத்ரோணிகள், இரண்டு துருத்திகள், ஊதுவதற்கு மூங்கிற் குழல் ஒன்று, இரும்புக் குழல் ஒன்று, பொன்-இரும்பு-வெண்கலம்-செம்பு-கருங்கல் ஆகியவற்றாலான குடங்கள், சர்மகாரர்[4] உபயோகிக்கும் வெவ்வேறு வகையான கருவிகள், சிறிதும் பெரிதுமான அரைக்கும் உரல்கள், அவற்றிற்கு வேண்டிய சிறியவையும் பெரியவையுமான குழவிகள், கல்வங்கள், வட்டமான வாயையுடைய பெரிய கல்வங்கள், அதேவிதமான இரும்புக் கல்வங்கள், தப்தகல்வங்கள்[5], அவ்விதமே அரைக்கவும் இழைக்கவும் வேண்டிய குழவி முதலிய கருவிகள், மிகவும் அடப்பமான ஆயிரக்கணக்கான கண்ணறைகளையுடைய சல்லடை, நன்றாகப் பதனிட்டுச் சுத்தமாயுள்ள அகன்ற தோல் துண்டுகள், சலாகைகள், புரிமணைகள் ஆகியவைகள் இரஸசாலையில் எப்பொழுதும் இருக்கவேண்டியவை.

*இரஸ சாலையில் இருக்க வேண்டிய வஸ்துக்கள்.*

சல்லடை மூன்று வகைப்படும். அவற்றின் தன்மைகளாவன—(1) மூங்கிற் சிம்புகளால் வேயப்பட்டு, மெல்லிய கயிறுகளால் கட்டப்பட்டுள்ளது ஒருவித சல்லடை; இது கனத்த வஸ்துக்களைச் சலிப்பதற்கு உபயோகமானது. (2) மூங்கிற் சிம்புகளைக் கொண்டே சூர்ணங்களைச் சலிப்பதற்கேற்றவாறு சிறிய துவாரங்களுள்ளதாய் மற்றொரு சல்லடையும் செய்யப்படுவதுண்டு. (3) சரக்கொன்றை, இலவன், இளமூங்கில் இவற்றின் கொடிபோன்ற மிகவும் மெல்லிய கழிகளால், சுற்றிலும் நாலு அங்குலம் உயரமுள்ள வரம்புகள் கட்டப்பட்டு, அவற்றைப் பதனிட்ட ஆட்டுச் சர்மத்தினால் சுற்றிக் கட்டவும்; அவ்வரம்பு உயரத்தில் ஒரு பிடி அளவாகவாவது இருக்கலாம்; அதற்கு அடியில் குதிரை வால் மயிர்களைக் கிட்டக் கிட்ட அழுத்தமாகப் பின்னியாவது, நல்ல வஸ்திரத்தைத் தைத்தாவது அடித்தலம் நிருமிக்கப்படவேண்டும். மிகவும் ஸூக்ஷ்மமான-மிருதுவான சூர்ணம் வேண்டுமானால் இவ்வித சல்லடையினால் சலிக்கவேண்டும். மேலும் மூஷைகள் செய்வதற்குபயோகமான மண், உமி, பஞ்சுகள், எருமுட்டைகள்,

*மூன்றுவித சல்லடைகள்.*

1. ஸத்வபாதன கோஷ்டி—அங்காரகோஷ்டி; 10-ம் அத்தியாயம் பார்க்க.

2. பூமி கோஷ்டி—பாதாள கோஷ்டி; 10-ம் அத்தியாயம்பார்க்க.

3. சலத் கோஷ்டி—எவ்விடத்திலும் எடுத்துப் போகக்கூடிய அரைக்கும் கும்மட்டி.

4. சர்மகாரர்—தோல் வேலை செய்பவர்; செம்மான்கள்.

5. தப்தகல்வம்—கல்வத்தின் கீழ் தீயிட்டு மருந்தைச் சூடுபண்ணிக் கொண்டே அரைக்க உதவக்கூடிய சிறந்த கல்வங்கள். இதற்குச் சாதாரணமாய் இரும்பாலாகிய கல்வங்கள் உபயோகிக்கப்படுவது வழக்கம்.

மாதுகைகள்; தாதுத்திரவ்யங்களாலும், பிராணி ஸம்பந்தமான வஸ்துக்களாலும், மூலிகைகளாலும் ஆகிய மூன்று வித ஔஷதங்கள்; கட்டைக் கரி, பசுவின் சாணம் பொடியாக்கப்பட்டு உலர்ந்துள்ள சாணத்தூள், மணல், மாக்கல்; (1) கட்டைகளை எரித்த பிறகு சாம்பலாவதற்கு முன் நீர் ஊற்றி அணைக்கப்பட்ட கரிகள் சித்தாங்கங்கள் எனப்படும். (2) கட்டைகள் எரிந்துவருகையில் நீரில்லாமல் மண் முதலியதில் அடக்கிச் செய்து அணைத்துவிட்டால் ஆகியிருக்கும் கரிகள் கோகிலங்கள் என்று வழங்கப்படும். பிஷ்டகம், சகணம், சாணம், உபலம், உத்பலம், கிரீண்டம், உபலோடி ஆகியவை உலர்ந்த சாணத்தின் பெயர்களாம். காசம், இரும்பு, மண், கவடி இவற்றாலாகிய குப்பிகளும், அவற்றாலாகிய கிண்ணங்கள் ஆகியவையும் வேண்டும். (1) கூபிகா, குப்பிகா, கோளி, கிரிண்டிகா என்பவை குப்பியின் பர்யாய நாமங்களாம். (2) அங்கணிமு, சஷகம், கடோரீ, வர்டிகா, காரிகா, கம்ஸிகா, ஸராவிகா என்பவை ஔஷதாதிகளைப் பருகுவதற்கான கிண்ணங்களின் பெயர்களாம். மெல்லிய மூங்கிற் சிப்புகளாலாகிய சளருகளும், சிறிய முறங்களும், கூடை முதலியனவும் தேவை. சிறிய சங்குகளும், கத்திகளும், உரிகளும், மற்றும் அவ்விடத்தில் உபயோகப்படுபவையும் சேர்த்துவைக்கப்படவேண்டும். பாலிகைகள்,[1] கூர்ச்சங்கள்,[2] சாய் முதலியவை நறுக்க வேண்டிய கருவிகள், மற்றும் சாலையைக் கூட்டிச் சுத்தமாக்குவது முதலாக, இரஸ பாகங்களைச் செய்து முடிப்பதிருக்குமுள்ள எல்லாக் காரியங்களுக்கும் தேவையான வஸ்துக்களும் கருவிகளும் அவ்விடத்தில் ஆயத்தமாயிருக்க வேண்டும். இவையனைத்தையும் இரஸாங்குச மந்திரத்தினால் ஜபித்துச் சேமித்துவைக்க வேண்டும். 5—22½.

*இரஸசாலைக்கு வைத்தியர்கள் பரிசாரகர் முதலானோர்.*

(1) இரஸ சாஸ்திரத்தைக் கசடற வுணர்ந்தவர்களும், வைத்திய நிகண்டுகளை யறிந்துள்ளவரும், சாஸ்திரதத்துவங்களை விரித்துரைக்க வல்லவரும், எல்லாத் தேச பாஷைகளைக் கற்றவருமான வைத்தியர்களையும் இரஸவாதகர்கள் உதவிக்குப் பெறவேண்டும். (2) அவ்விடத்திற் பரிசாரகர்கள் சுறுசுறுப்பாகவும், பரிசுத்தமாகவும், மிகத் திறமைசாலிகளாகவும், தேர்ந்த வலிமையுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். (3) அறநெறி தவறாதவனாகவும், ஸத்தியம் பேசுபவனாகவும், படிப்பிற்றேர்ந்தவனாகவும், சிவன்-விஷ்ணு இவர்களைப் பூஜிப்பவனாகவும், தயை கூர்ந்த மனத்தினனாக

1. பாலிகை—வாயகன்ற பாத்திரம்.

2. கூர்ச்சம்—குச்சு.



வும், பத்மஹஸ்தனுகவு[1]முள்ளவனுக்கே இரஸவைத்தியத்திற் பிரவேசமளிக்கலாம். (4) எந்த வைத்தியனது ஹஸ்தத்தில் பதாகை, கும்பம், தாமரைப்பூ, மத்ஸியம், தனுஸ் ஆகியவற்றைப் போன்ற இரேகைகள் இருக்கின்றனவோ, மேல்நோக்கிய ரேகை அநாமிகையென்னும் ஆழிவிரலுக்கு அடிப்புறம் வரையில் நீண்டிருக்கின்றதோ அவன் அம்ருத ஹஸ்தன் எனப்படுகிறான். (5) தைவமிகழ்பவன், தயையில்லாதவன், உலோபி, குருவினிடம் வித்தையைக் கற்காதவன், கையில் கறுப்புக் கோடுகளைப் பெற்றவன் ஆகிய இத்தகைய வைத்தியன் தக்த்தஹஸ்தன் எனப்படுகிறான்; அவனுக்கு இரஸக்கிரியைகளில் அதிகாரமளிக்கக்கூடாது. 23—27½.

*அம்ருத ஹஸ்தன். தக்தஹஸ்தன்.*

*நிதிஸாதகம், பலிஸாதகம், இரஸாயநம், தாதுவாதம், ஔஷதிக்கிரஹணம்.*

(1) பூதங்களை ஓட்டுவதற்கும் அடக்குவதற்கும் உபயோகமான மந்திரங்களை எவர் அறிந்திருக்கின்றனரோ அவர்களை நிதிகளைக்[2] கண்டுபிடிக்கும் வேலையில் நியமிக்க வேண்டும். (2) தேஹவலிமையிற் சிறந்தவர்களும், ஸத்தியம் பேசுபவர்களும், சிவந்த நேத்திரங்களைப் படைத்துக் கறுத்த தேஹத்துடன் கூடியவர்களாய்ப் பூதங்களை விரட்டும் வித்தையைக் கற்றவர்களாயுமுள்ள மனிதரையே பலிஸாதந வேலையில்[3] நியமிக்க வேண்டும். (3) உலோபிகளல்லாதவர்களாயும், ஸத்தியம் பேசுபவராகவும், தேவர்களையும் அந்தணரையும் வணங்கித்தொழுபவராகவும், இந்திரியங்களை அடக்கியாளுபவராகவும், பத்திய போஜனமுபயோகிப்பவராகவுமுள்ள பிணியாளருக்கே இரஸாயநம் அளிக்கப்படவேண்டும். (4) செல்வவான்களாகவும், கொடையாளிகளாகவும், ஸகல உபகரணங்களைப் பெற்றவராகவும், குருவின் கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டவராகவுமுள்ள மனிதரையே தாதுவாத வேலையில்[4] நியமிக்கவேண்டும். (5) ஒவ்வொரு மூலிகையின் பெயரை அறிந்தவர்களாயும், பரிசுத்தர்களாயும், வஞ்சநெஞ்சில்லாதவராகவும், அநேக தேசபாஷை யுணர்ந்தவராகவுமுள்ளவர்களையே மூலிகைகளைக் கிரஹித்துவருவதற்கு நியமிக்க வேண்டும். 28—32.

1. பத்மஹஸ்தன—அம்ருதஹஸ்தன். அத்தகைய வைத்தியன் கையால் செய்யப்படும் சிகித்சை ஆரோக்கியத்தையும் ஆயுளையும் விருத்தி செய்யும் எனக் கருதப்படுகிறது.

2. நிதி—புதையல்; இங்கு இரஸேந்திர மென்கிற பாதரஸம் இருக்கும் சுனியே முக்கியமாக நிதி யெனப்படுகிறது.

3. பலிஸாதகம்—தேவி பூஜை முதலியதற்கான பிராணிகளைச் சம்பாதித்தல் என்று ஒரு வியாக்யானம் எழுதுகிறது. ஆனால் முதலில் இரஸஸித்தநம் கூறப்பட்டிருப்பதால் அடுத்தாற்போல பலி யென்பதற்கு கந்தகம் என்பதுதான் ஏற்ற பொருளாகும்.

4. தாதுவாதம்—இரஸவாதம்.

இரஸ ஸித்தியும் பலனும்.

(1) பரிசுத்தமாகவும், வைத்தியமே போசுபவராகவும், ஆஸ்தி காகவும், தாராளமான கொள்கையுடன் தீர்க்கமாகவும், எதிலும் எவ்வித் தேஹமுமில்லாத மனத்தையுடையவராகவுமுள்ள வைத்தர்களுக்கே எப்பொழுதும் இரஸஸித்தியுண்டாகும். (2) இரஸத்தைப் பதினெட்டு வகையான ஸம்ஸ்கார முறைகளால் ஸித்தம் செய்தால், அவ்வித இரஸமே ஸித்தி பெறுவதற்கு மிகவும் ஏற்றதாகும். ஒரு முறை இரஸஸித்தி பெறப்படாவிடில் மறுமுறை அதை நிறைவேற்றிக்கொள்ள முயல வேண்டும். (3) இரஸஸித்தி பெற்ற மனிதன் கொடையாளியாவான்; இன்பங்களை யனுபவிப்பான்; அவன் வேறெவரிடமும் இரக்கமாட்டான்; கிழத்தனத்தைப் பெறான்; உலகத்தோரால் கொண்டாடப் படுவான்; நல்ல தேஹகாந்தியைப் பெறுவான்; எப்பொழுதும் ஆரோக்கியமாக வாழ்வான். 33—35.

---

## எட்டாம் அத்தியாயம்.

### இரஸ பரிபாஷைகள்.

இரஸ பரிபாஷைகள்.

ஸோமதேவன் என்னும் ஸித்தராலும், வேறு ஸித்தர்களாலும் இயற்றப்பட்டுள்ள இரஸசாஸ்திரத்திலிருந்து, இரஸத்தைப் பக்குவம் செய்வதற்கான முறைகளைப் பற்றிய பரிபாஷைகள் இவ்வத்தியாயத்தில் சொல்லப்படும். 1.

தன்வந்தரிபாகம்:—ஸாஸ்திர முறைப்படி பக்குவம் செய்து ஸித்தமான இரஸௌஷதங்களிலும், தைலங்களிலும், கிருதங்களிலும் பாதி பாகத்தையும், லேஹ்யத்தின் கட்டிலொருபாகத்தையும், முறைப்படி பக்குவம் செய்து முடிக்கப்பட்ட உலோ ஔஷதங்கள், சூர்ணங்கள், குளிகைகள் ஆகியவற்றில் எழிலொரு பகுதியையும் அவற்றைத் தனக்காகப் பக்குவம் செய்யும் வைத்திய ஸ்ரேஷ்டனுக்குப் பிணியாளியானவன், அவ்வைத்தியனை தன்வந்திரியாகக் கருதி அளித்துவிட வேண்டும்; அக்கொடை அப்பிணியாளிக்கு முற்றிலும் ஆரோக்கிய சுகத்தையளிக்கும்; அவ்விதம் வைத்தியருக்குக் கொடுக்கப்படும் ஔஷதபாகம் தன்வந்தரி பாகம்[1] என்று வழங்கப்படும். 2.

ருத்ரபாகம்:—(1) ஔஷதங்களுக்கான சரக்குகளைப் பிணியாளிக்காக விற்பனை செய்யும் வர்த்தகனிடமிருந்து, விற்பனையிற் கிடைத்தத் தொகையிலிருந்து வைத்தியன் பதினொன்றிலொரு பகுதி திரவ்யத்தைப் பெறலாம்; அது ருத்ரபாகம் என்று சொல்லப்படுகிறது. (2) ருத்ராம்சத்தைத் அதிகமாகக் கிரஹிப்பது

---

1. தன்வந்தரிபாகம்—இது அக்விஸித்தாரபாகம் என்றும் கூறப்படும். வைத்தியர்களிடம் தன்வந்தரியின் அம்சம் உண்டென்று நம்பப்படுவதால் இப்பெயர் வந்தது.


## வைத்தியர்களுக்குத் தேவையான ஸகல சாஸ்திரீய ஔஷதங்களும் கிடைக்குமிடம்.

[ஆயுர்வேத பூஷணம் பண்டிதஸ்ரீ. ஆசார்யவாசி ஐயங்கார் அவர்களுடைய மேற்பார்வையில் தயார் செய்யப்படும் ஔஷதங்கள் சிறந்த குணமுடையவையென்று, அநேக ஆயுர்வேத வைத்தியர்களும் இங்கிலீஷ் டாக்டர்களும் ஆர்யன் பார்மஸியாருடைய ஔஷதங்களை விசேஷமாய் உபயோகிக்கிறார்கள்.]

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| 1. ஆயுக்ய ரஸாயனம் பக்ஷ்மத விருத்தி செய்யும் திவ்யௌஷதம் ... | 8 | 4 | 13. பிருங்காமலக தைலம் குளிர்ச்சி தரும் ஸ்நான தைலம். | 1 | 4 |
| 2. அஜீர்ண கேஸரி எவ்வித அஜீர்ணத்திலும் நிச்சயமாக குணம் தருவது. | 2 | 8 | 14. க்ஷீரபலா சந்தனாதி தைலம்; பிணியாளிகளுக்கு யோக்யமான ஸ்நான தைலம். | 3 | 0 |
| 3. பஞ்சதிக்த ரஸயக்ரியா மலேரியா முதலிய ஸகல ஜ்வரங்களுக்கும். ... | 1 | 12 | 15. மஹாநாராயண தைலம்—ஸகல வாதரோகங்களுக்கும் திவ்யௌஷதம். | 3 | 4 |
| 4. மாதுலுங்க ரஸாயனம் அரோசகம், பித்தக்கோளாறு களைத் தீர்க்கும். ... | 1 | 12 | 16. விஷ்வ வாதாரி தைலம்- வெகு சிலாக்யமான வாதஹர தைலம். ... | 3 | 8 |
| 5. ஹரிதக்யாதி லேஹ்யம் மலபந்த நிவாரிணி. 8 அவு. | 1 | 10 | 17. வாஸந்திகா தைலம் கூந்தல் போஷிணை ஸ்நான தைலம். ... | 0 | 14 |
| 6. ச்யவனப்ராசலேஹ்யம் ச்வாஸப் பைகளையும் இருதயத்தையும் பலப்படுத்துவது | 1 | 8 | 18. ஸித்தார்த்த ஜலம்- கண்ணோய், பலவித காது நோய் முதலியதற்கு ... | 1 | 0 |
| 7. மஹாபில்வாதி லேஹ்யம்— 6 அவு. ... | 1 | 12 | 19. அசோக வடி- மாதவிடாய் நோய்களுக்கு ... | 1 | 12 |
| 8. கூஷ்மாண்ட ரஸாயனம் பித்தத்தைத் தணித்துக் குளிர்ச்சியைத்தரும் 6 அவு. ... | 1 | 8 | 20. இச்சாபேதி வடி- சிறந்த பேதி மாத்திரை ... | 1 | 0 |
| 9. கனஸாரம்— அஜீர்ண பேதி வாந்தி பேதிகளுக்கு | 2 | 0 | 21 மோஹஜ்வர காஸ்கம் க்ஷயரோக நிவாரணி ... | 5 | 4 |
| 10. கல்யாணக கிருதம் மூர்ச்சை காக்கைவலி முதலியதற்கு. ... | 2 | 4 | 22. ஸமுத்ரஜன்—சுகப்பிரஸவ மாத்திரை. ... | 3 | 0 |
| 11. மஹாதிக்தக கிருதம்—குஷ்டம் முதலிய சர்ம ரோகங்களுக்கு ... | 2 | 4 | 23. அசோகாரிஷ்டம்— ஸ்திரீகளுக்கு பலம் தருவது. ... | 1 | 4 |
| 12. பலகிருதம்- கர்ப்பப் பையைப்போஷிக்கும். ... | 2 | 8 | 24. அச்வகந்தாரிஷ்டம் —பலம் தரும் ஔஷதம் ... | 1 | 4 |
| | | | 25. உசீராஸவம் — குட்டைத்தணிக்கும். ... | 1 | 2 |

இவற்றிற்கும் வேறு ஸகல சாஸ்திரீய ஔஷதங்களுக்கும் விரிவான காட்லாகுகள் அபேக்ஷிப்பவருக்கு அனுப்பப்படும்.

ஆர்யன் பாமஸி, வேப்பேரி, மதராஸ்.

எல்லா ஆயுர்வேத வைத்தியர்களும் இங்கிலீஷ்
டாக்டர்களும் கொண்டாடும்

# சார்ங்கதர ஸம்ஹிதை.

ஆயுர்வேத சாஸ்திரத்தின் விஷய ஸாராம்சங்களும் அடங்கிய மிகப்
பிராசீன வைத்தியக் கிரந்தம்.

ஆயுர்வேத பூஷணம்.

பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார், எ. வி. எஸ்.

அவர்களால் ஸம்ஸ்கிருதத்திலிருந்து தமிழில்
மொழி பெயர்க்கப்பட்டது.

மூன்று கண்டங்களும் 32 அத்தியாயங்களும் அடங்கியது.

வைத்திய பரிபாஷை முதலியவைகள்.

1. பூர்வகண்டத்தில்:—(1) வைத்திய பரிபாஷைகள் (2) ஔஷதி முதலியவற்றின் விவரணம், (3) நாடி பரீக்ஷாதிகள், (4) தீபன பாசனாதி குண விவரணம், (5) மிச்ரகாதிகள், (6) உணவு உட்கொள்ளும் வகை முதலியது, (7) ரோகவிவரணம் என்னும் ஏழு அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

ஔஷத முறைகள்.

2. மத்திம கண்டத்தில்:—(1) ஸ்வரஸ முறைகள், க்வாத கஷாய முறைகள், (3) பாண்ட கஷாய முறைகள், (4) ஹிமகஷாய முறைகள், (5) கல்க முறைகள், (6) சூர்ண முறைகள், (7) குளிகை மாத்திரை முறைகள், (8) லேஹ்ய முறைகள், (9) ஸ்நேஹ-தைல-கிருத-முறைகள், (10) ஸந்தான ஆஸவாரிஷ்ட-முறைகள், (11) தாது-சோதன-பஸ்மீகரண-சுத்தி முறைகள், (12) இரஸங்கள்-இரஸ-பஸ்மாதி முறைகள் என்னும் பன்னிரண்டு அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

சிகித்ஸா கிரமங்கள்.

3. உத்தரகண்டத்தில்:—(1) ஸ்நேஹபானவிதி, (2) ஸ்வேதவிதி, (3) வமனவிதி, (4) விரேசனவிதி, (5) வஸ்திவிதி, (6) நிரூஹவஸ்திவிதி, (7) உத்தரவஸ்திவிதி, (8) நஸ்யவிதி, (9) தூமபானவிதி, (10) கண்டூஷாதி விதி, (11) லேபாதி விதி, (12) இரத்தமோக்ஷணவிதி, (13) நேத்திர சிகிச்சை ஆகப் பதின்மூன்று அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

வேறு விஷயம்.

எளிய வசனநடை, விஷயங்கள் ஒழுங்காகவும் தலையங்கங்களோடும் அமைக்கப்பட்டிருக்கின்றன. விரிவான உரை. விசேஷ அநுபந்தங்கள். ஸகலவிஷயங்களுக்கும் விஷய அகராதி.

உயர்ந்த காலிகோ கில்டு பைண்டு ரூ. 5-4-0
இரண்டாந்தர பைண்டு ரூ. 4-4-0.

வைத்திய கலாநிதி ஆபீஸ், வேப்பேரி மதராஸ்.